


# ஞானச்சுடர்

ஆடி 2017

235 ஆவது மலர்




வெளியீடு:

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

# குறள் வழி



இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

**பொருள்:** தேடிய உணவை விரும்பி வறியவர்க்குக் கொடாது தாமே தனித்து உண்ணுதல் பிச்சை எடுத்தலினும் பார்க்கத் துன்பம் தருவதாகும். (229)

சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை.


**பொருள்:** சாவதைப்போலத் துன்பம் தருவது வேறொன்றுமில்லை; வறியார்க்கு ஒன்று கொடுக்க முடியாத விடத்து இறந்துபோவது இனியதாகும். (230)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### பராபரக் கண்ணிகள் - 3



ஊரூராய்த் திரிந்து உன்மத்த னிவனென்னும்
பேரூரச் செய்து பிறப்பறுப்பாய் பராபரமே 07

எல்லாமா யல்லவுமா யிருக்குந் திருவருளைச்
சொல்லாமற் சொல்லுஞ் சுகந்தருவாய் பராபரமே 08

ஐயப் படாமல் அருள்வழியே செல்லநல்ல
துய்ய வருள்தாராய் என்துணையே பராபரமே 09

ஒன்பதுவாய்த் தோற்பைக்கு உணவளிக்க நான்திரிதல்
என்ன மதிதான் இயம்பாய்நீ பராபரமே 10

ஓங்காரக் கம்பத்தின் உச்சியிலே நிற்குமுனை
பாங்காய்ப் பணியவருள் பண்ணாய் பராபரமே 11

ஔவிய மில்லாதார் அகம்மேவும் ஆண்டவனே
எவ்வித மாய்ப்பணிவேன் இயம்பாய் பராபரமே 12

அஃகமுங் காசுந்தேடி அலையும் அடியேனை
நஃகுதல் செய்யாமல் வரந்தாராய் பராபரமே 13

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 235

2017 ஆடி

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஆன்மீகத்தில் பிள்ளைகளை... | சா. டேவிட்ராஜ் | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -08 |
| சிவம் என்பது என்ன? | செல்வி பா. வேலுப்பிள்ளை | 09 -10 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 11 -18 |
| பங்குனி உத்தரத்... | கு. சோமசுந்தரம் | 19 -24 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 25 -27 |
| அரிச்சுவடியும் அறச்சுவடியும்... | கே.எஸ். சிவஞானராஜா | 28 -29 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 30 -35 |
| ஆறுமுகமான பொருள் | அ. சுப்பிரமணியம் | 36 -40 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 41 -42 |
| அறுபத்துமூன்று நாயன்மார் | பொன். சின்னையா | 43 -44 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 45 -46 |
| இடைக்காடு வள்ளிப்பிள்ளை... | பு. கதிரித்தம்பி | 47 -48 |
| திருமுறை பாடிப் பணிவோம் | திருமதி சி. யோகேஸ்வரி | 49 -51 |
| கதிர்காமக் கந்தன் | ம. சிவயோகசுந்தரம் | 52 -54 |
| காவல் காத்த கணநாதர் | ஆர்.வீ. கந்தசுவாமி | 55 -56 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 57 -58 |
| வேண்டுதற் கூற்று | திருமதி ந. பரமேஸ்வரி | -59 |
| வேழ முகத்து விநாயகன் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 60 -61 |
| வழித்துணை | செ. சிவசுப்பிரமணியம் | 62 -63 |
| வட இந்திய யாத்திரை | மோகனதாஸ் சுவாமிகள் | 64 -65 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 66 -68 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் ஆனிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

ஆனி மாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை ஆற்ற இருந்த கு. தியாகராஜ சர்மா (நீர்வைமணி) அவர்கள் தவிர்க்கமுடியாத காரணத்தால் வருகை தராத நிலையில் அவரால் ஒழுங்குப்படுத்தப்பட்ட திரு க. கணேசராசா அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தமதுரையில் ஆச்சிரமம் ஆற்றும் பலவிதமான சமய, சமூகப் பணிகளின்மூலம் சந்நிதியான் ஆச்சிரமம் புது மெருகுபெற்று எழுச்சியுடன் மிளிர்வதை நாம் காணக்கூடியதாக உள்ளது என்று கூறியதுடன் மாதா மாதம் வெளிவந்து கொண்டிருக்கும் இம்மலர் மென்மேலும் தொடர்ந்து வெளிவர சந்நிதி வேலவனது பூரணமான அருள் கிடைக்க வேண்டும் என்று கூறி, இவ்வகை நிகழ்வின்மூலம் தாமும் சந்நிதியானை வணங்குவதும் ஒரு பேறாக அமைகின்றது என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

மாதா மாதம் வெளியீடு செய்யப்பட்டு வருகின்ற 234ஆவது மலராக மிளிரும் ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை ஞானச்சுடர் வெளியிட்ட காலம் முதல் ஆச்சிரமத்துடன் இணைந்துகொண்டவரும் இளைப்பாறிய ஆசிரியருமாகிய திரு க. நவரெத்தினம் அவர்கள் மேற்கொண்டார்கள்.

ஆனிமாத மலர் பற்றிய தனது கருத்துக்களில் மலரில் இடம்பெற்ற கட்டுரை வகைகளை தரம்பிரித்து அதனடிப்படையில் அக்கட்டுரைகள் வயது வித்தியாசமின்றி அனைவரையும் திருப்திப் படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதைக் கூறி ஞானச்சுடர் மலரினை தேன்பொந்து என்று கூறியதுடன் அதிலிருந்து சொரியும் தேன்போன்று மலரில் உள்ள ஆக்கங்களின் தன்மை உள்ளதென்றும் கூறியதுடன் வருடம் தவறாமல் ஆனிமாத மதிப்பீட்டுரையை ஆற்றுவதற்கு சந்நிதி வேலவன் அருள் கிடைத்திருக்கிறது என்று கூறித் தனது உரையினை இனிதே நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

எமது மண் கந்தபுராணக் கலாச்சாரத்தினை முன்னுதாரணமாக வைத்து அதன் பேறாக பெருமை பெற்றது. இதற்கு அடிப்படையாக அமைந்தவர் ஐந்தாம் சமயக் குரவர் எனப் போற்றப் பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். அவரது "சைவ வினாவிடை" சைவ மக்களின் வாழ்வியலுக்கு வேண்டிய அனைத்து விதிமுறைகளையும் கூறியுள்ளது.

அதில் முக்கியமாக ஆலய வழிபாடு, வழிபாட்டின் தன்மைபற்றிய விபரங்களையும் அதன் பிரகாரம் நாம் ஒழுகவேண்டிய விதிமுறைகளையும் வகுத்துத் தந்துள்ளார். அதன்படி ஒழுகுவதென்பது கடினமான செயற்பாடாகவே இருந்து வந்துள்ளது. ஆனாலும் கூடியவரையில் எமது முன்னோர் அந்த விதிமுறைகளுக்கு அமைவாக ஆலய வழிபாடுகளையும் கலை கலாச்சாரங்களையும் கண்போலக் காத்து அதன்படி ஒழுகியும் வந்துள்ளார்கள்.

ஆனாலும் நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழல் காரணமாக எமது நடைமுறை வாழ்க்கை கேள்விக்குறியாகி பலவித இடர்பாடுகள் மத்தியில் மீண்டும் புத்துயிர்பெற்று மேலெழுந்து வரும் வேளையில் எமது கலை, கலாசாரம், பண்பாடு அனைத்தையும் தொலைத்துவிட்டு நாம் நிற்கின் றோம். இந்நிலை நீடிக்குமானால் எமது எதிர்காலச் சந்ததியின் வாழ்வு கேள்விக்குறியாகிவிடும். இந்நிலை மாற வேண்டும்.

இதற்கமைவாக முன்னிற்பது ஆலயங்களே ஆகும். மாவிட்டபுரம், நல்லூர், செல்வச்சந்நிதி, துர்க்கை அம்மன் முதலிய ஆலயங்களில் வருடாந்த உற்சவங்கள் ஆரம்பமாக உள்ள நிலையில் அந்தந்த ஆலய நிகழ்ச்சி நிரலில் முதலில் வேண்டியிருப்பது வழிபாட்டுக்கு வருபவர்கள் எமது பண்பாட்டுக்கு அமைவான ஆடை அலங்காரங்களுடன் ஆலய விதிமுறை களுக்கு அமைவாக வரும்படி கோரிக்கையினை முன்வைத்துள்ளார்கள். இவ் அறிவித்தல் எமக்குத் தேவைதானா என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

இயற்கையோடு பின்னிப் பிணைந்திருந்த எமது கலாச்சாரத்தை தொலைத்துவிட்டு நிற்கின்ற நாம் இதிலிருந்து விடுபடவேண்டுமென்றால் நாவலர் பெருமான் கூறியபடி எம் சமய வழிபாட்டின் தன்மையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். இதற்கமைவாக பெற்றோராகிய நாம் எமது வருங்கால சந்ததியின் வாழ்க்கை முறையை மாற்றி அமைக்கவேண்டுமெனில் அவர்களுக்கு முற்றுமுழுதாக சைவ சமய மக்களுக்காகிய பண்பாட்டு விழுமியக் கருத்துக்களை போதிப்பதோடு அக்கருத்துக்கமைவாக இவ் ஆலய உற்சவ தினங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லவா.

இதை அனைவரும் கைக்கொள்வோமாக.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 02. தேவேந்திர வகுப்பு

தரணமு மரணமு மலமொடு முடல்படு
கடுவினை கெடநினை
காலாந்தரி கந்தரி நீலாஞ்சனி நஞ்சமிழ்
கனலெரி கணபண குணமணி யணிபணி
கனவளை மரகத
காசாம்பர கஞ்சுளி தூசாம்படி கொண்டவள்
கனைகழ னினையல ருயிரவி பயிரவி
கவுரிக மலைகுழை
காதார்ந்தசெ ழுங்கழு நீர்தோய்ந்தபெ ருந்திரு
கரைபொழி திருமுக கருணையி லுலகெழு
கடனிலை பெறவளர்
காவேந்திய பைங்கிளி மாசாம்பவி தந்தவன்;,

அரணெடு வடவரை யடியொடு பொடிபட
அலைகடல் கெடவயில்
வேல்வாங்கிய செந்தமிழ் நூலோன்கும ரன்குகன்
அறுமுக னொருபதொ டிருபுய ன பிநவ
னழகிய குறமகள்
தார்வேய்ந்தபு யன்பகை யாமாந்தர்க ளந்தகன்
அடன்மிகு கடதட விகடித மதகளி
றனவர தமுமக
லாமாந்தர்கள் சிந்தையில் வாழ்வாம்படி செந்திலில்
அதிபதி யெனவரு பொருதிறன் முருகனை
யருள்பட மொழிபவ
ராராய்ந்துவ ணங்குவர் தேவேந்திர சங்கமே.

# ஆடிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

ந. ஜவகர்லால்நேரு
(லண்டன்)
மாதர்க்கரசி பொன்னுத்துரை
(கொழும்பு)
K. கனகசபேசன்
(கனடா)
செல்வி தம்பு சறோஜா
(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)
இ. பேரின்பநாயகன்
(நாவலர் பாலர் பாடசாலை ஸ்தாபகர், சுதுமலை)
Dr. V. ஸ்ரீஸ்காந்தன்
(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)
சி. பஞ்சலிங்கம்
(லிகிதர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)
வே. பாராளன்
(தொழில் நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)
S. தர்மரெத்தினம்
(அதிபர், சிறுப்பிட்டி)
ச. நவரத்தினராசவேல்
(அதிபர், வேல்பதி, புத்தூர்)
நா. இராசலிங்கம்
(இளை. அத்தியட்சகர்)
திருமதி கலாநிதி முரளிதரன்
(யாழ்ப்பாணம்)
ந. சேகர்
(கிராம சேவையாளர், வீரபத்திரர்கோயிலடி, உடுப்பிட்டி)
கு. ஸ்ரீமுருகமூர்த்தி
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)
சு.பொ. நடராசா
(அண்ணா தொழிலகம், இணுவில்)

த. கந்தசாமி
(இருபாலை வீதி, கோண்டாவில்)
**செல்வி இ. வல்லிபுரம் ஆசிரியை**
(நவக்கிரி)
**செ. ஈஸ்வரன்**
(சித்தங்கேணி)
**சுப்பிரமணியம் அருளானந்தசிவம்**
(அல்லாரைவீதி, மீசாலை கிழக்கு)
**பாலசுப்பிரமணியன் ராகுலன்**
(யாழ்ப்பாணம்)
**ச. இராசரத்தினம்**
(நாவலர்வீதி, யாழ்ப்பாணம்)
**திருமதி மாலதி இராஜேஸ்வரன்**
(உடுப்பிட்டி)
**த. திருஞானசம்பந்தர்**
(ஏழாலை வடக்கு)
**புஸ்பநாதன் பிரதீபன்**
(உரும்பராய் வடக்கு)
**க. குணசிங்கம்**
(சாவகச்சேரி)
**இ. சிவஞானம் J.P**
(புத்தூர்)
**N. குலசேகரம்**
(வருணன், அச்சுவேலி)
**க.ம. செல்வரெத்தினம்**
(நவாலி கிழக்கு, மானிப்பாய்)
**சி. தனபாலசிங்கம்**
(புலோலி)
**ஆ. குலசிங்கம்**
(இணுவில்)
**சிதம்பரப்பிள்ளை அனுஜா**
(அல்வாய்)
**செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை**
(பொலிகண்டி)

திருமதி உ. பேரானந்தம்
(தெல்லிப்பழை)

வி. சிவபாலசிங்கம்
(கரன் பான்சி, சுன்னாகம்)

க. ஸ்ரீஸ்கந்தராசா
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)

ந. இராமரூபன்
(நீர்வேலி)

மு. இராஜேந்திரன்
(முருகையா கோவிலடி, புலோலி)

பொன். சற்குணநாதன்
(வேம்பன் வீதி, உரும்பராய்)

சொ. செல்லத்துரை
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)

நா. தெய்வேந்திரம்
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)

வி. தவத்துரைராசா
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)

சு. அனுஷியாதேவி
(முருகவாசா, சித்தங்கேணி)

சி. கணேசமூர்த்தி
(அல்வாய்)

தயானந்தன் சுஜந்தன்
(அச்சக வீதி, கொக்குவில்)

உரிமையாளர்
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)

ச. சூரியப்பெருமான்
(ராகுலசூரியன்; பருத்தித்துறை)

மா. அருட்செல்வம்
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)

ச. சிவரூபன்
(சிறுப்பிட்டி)

செல்லையா சர்வேஸ்வரன்
(செல்வறங்கம், இணுவில்)

**ஆ. மகேந்திரலிங்கம்**
(வேம்போலை, இணுவில்)
**உரிமையாளர்**
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
**நா. கணேசலிங்கம் ஆசிரியர்**
(குப்பிளான்)
**செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்**
(யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(ரேவதி நகைமாடம், யாழ்ப்பாணம்)
**செ. வாமதேவன்**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**V. சேனாதிராசா**
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
**பிறேமதாஸ் சசிகலா**
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
**செல்வி தர்மினி ரவிச்சந்திரன்**
(கட்டுடை, மானிப்பாய்)
**க. சிவஞானசுந்தரம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திருமதி பொ. இரத்தினசோதி**
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
**ச. கிருஷ்ணமூர்த்தி**
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
**செ. அட்செயலிங்கம்**
(ஆசிரியர், அல்வாய்)
**மூ.சிவலிங்கம்**
(காரைக்கால் வீதி, இணுவில்)
**க. விகர்ணன்**
(குமரகோட்டம், கோண்டாவில்)
**R. பொன்னுராசா**
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
**S. தர்மலிங்கம்**
(கமலபதி மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
**சி. குகநாதன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)

# ஆன்மீகத்தில் பிள்ளைகளை ஆழ்ந்தெழச் செய்வோம்

– திரு சாமுவேல் டேவீட்ராஜ் அவர்கள் –

ஆன்மீகம் என்பது இறைவனிடம் எமது உறவை ஏற்படுத்தி, அதைப் பலப் படுத்தி இறை அருளை சுவைப்பதாகும். அதாவது இறைவனிடம் ஆன்மாவை லயிக் கச் செய்யும் மார்க்கமாகும். இறைவனுக்கும் மனிதனுக்குமிடையிலுள்ள இறை- மனுத் தொடர்பினால் வாழ்வின் பெரிதான அர்த் தங்களை புரிந்துகொள்வதாகும். ஒரு சமூக அமைப்பில் ஒரு அங்கத்தவர்களாக விளங் கும் பிள்ளையின் இருப்பு நிலைக்கும் இயங்கு நிலைக்கும், வளர்ச்சிக்கும் ஒரு குடும்ப அலகின் சூழலே இன்றியமையாத தாகும். இந்தக் குடும்ப அலகு எந்தளவிற்கு பலமாக ஆன்மீக விடயங்களிலும் ஏனைய வாழ்விற்கான அடிப்படைக் காரியங்களிலும் செயற்படுகின்றதோ அந்தளவிற்கு ஒவ்வொரு பிள்ளைகளினதும் எண்ணங்கள், நம்பிக்கை கள் சார்ந்த உணர்வுகள் ஆழமாக வேரூன்றி செழிப்படைகின்றது. அதாவது அன்பு, இறை அருள், கல்வி, நம்பிக்கை, தன்னம்பிக்கை, சந்தோஷம், மனமகிழ்ச்சி, மன அமைதி, பற்றுறுதி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, சிறந்த தொடர்பாடல், பௌதீக சூழலை மதிக் கும் மனப்பக்குவம், மனிதநேயத்தை மதித் தல் போன்றவற்றின் மலர்ச்சியின் பின்னணி யில் ஆன்மீக இறைஞானம் வலிமை பெறு கின்றது.

எமது பிள்ளைகளை நாம் ஆன்மீகக் காரியங்களில் ஈடுபடுத்தும்போது அவர்களது உள்ளமதில் ஆழ்ந்த அமைதியும், ஆறு தலும், தன்னம்பிக்கை உணர்வுகளையும், ஒழுக்க நெறிகளையும் கட்டியெழுப்ப முடி யும். அக உணர்வுகளை ஒருநிலைப்படுத்தி இறைவழிபாடு செய்யும்போது வாழ்க்கையின் பெரிதான அர்த்தங்களை உணர்ந்து கொள் ளும் வல்லமையினைக் கட்டியெழுப்புவ தோடு தன்னைத்தானே சுயமதிப்பீடு செய்யும் இறைஞானமும் வெளிப்படுத்தப்படுகின்றது.

இன்றைய அவசரமானதும் ஆடம்பர மானதுமான உலகப் போக்குகளில் ஆன்மீக ஆணிவேர்கள் அறுக்கப்பட்டு வருகின்றதைக் காண்கின்றோம். ஆன்மீக அர்த்தங்களை இன்று ஏற்றுக்கொள்ள மறுக்கின்றோம். இவ் வாறான எண்ணப்பாங்குகள் சமூகத்தை பேராபத்துக்களில் ஈடுபடுத்திச் செல்கின்றது. இவ்விளிம்பிலிருந்து பிள்ளைச் செல்வங் களைக் காப்பாற்றுவது எமது பொறுப்பும் அவசியமுமாகின்றது. இதற்காக பெற்றோர் சமூகம் தம்மைத் தாமே இழக்கவேண்டும். அதாவது தாம் முன்மாதிரியாக ஆன்மீகப் பாதையில் ஈடுபட முன்வரவேண்டும். ஆன் மீகம் சார்ந்த விடயங்களில் அறிவு சார்ந்த விழுமியங்களைக் கற்றுக்கொள்வதையும், கற்றுக்கொடுப்பதையும் இலக்காகக்கொண்டு செயற்பட வேண்டும். இக்காரியங்களில் பெற் றோர்களாகிய நாம் தவறுகின்றோம்.

பெற்றோர்களாகிய நாம் இன்று இறை வனுக்கும், இறைவழி நடத்தலுக்கும் முக் கியத்துவம் கொடுப்பதைவிட பணம், பதவி, தொழில், சினிமா, பிரத்தியேகக் கல்விமுறை

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு, அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.

போன்ற உலகாயுத காரியங்களுக்கு ஈர்க்கப்பட்டு வருகின்றோம். இதன் காரணமாக எமது பிள்ளைகளை இறை ஞான ஆன்மீக வழிகளில் நடத்தவும் ஆலோசனைகளை வழங்கவும் தவறுகின்றோம். எனவே பிள்ளைகள் எமது அரவணைப்பிலிருந்து விலகிச் செயற்படும் ஒரு சூழல் உருவாக்கப்படுகின்றமையினை இனம் காண முடிகின்றது.

எனவே பெற்றோர் சமூகம், சமயம் சார்ந்த நிறுவனங்கள், ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கும் நிறுவனங்களும் கல்விச் சமூகங்களும், பொதுச்சேவை அமைப்புக்களும் இணைந்து ஆன்மீக விழிப்புணர்வுகளையும் ஆலோசனைகளையும் பிள்ளைகளது எதிர்கால இலக்குகளையும் உளவியல் சார்ந்த எண்ணப்பாங்குகளையும் கருத்திற்கொண்டு ஒவ்வொரு பிள்ளைகளினதும் எதிர்கால வாழ்வு வளம்பெற எமது ஒத்தாசைகளை வழங்க வேண்டும்.

எமது பிள்ளைச் சமூகத்திற்கு இன்று ஆன்மீக இறை ஞான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் கிடைப்பதில்லை. காரணம் கல்விச்சுமைகள், ஆடம்பர வாழ்வியல் சார்ந்த விடயங்கள், சினிமா உணர்வுகள், தகாத இணையத்தளப் பாவனைகள், கையடக்கத் தொலைபேசியின் அதிகநேர பாவனைகள், தொழில்நுட்ப வசதி வாய்ப்புக்கள், தகாத முறையில் பணக் கையாளுகை போன்ற உலகக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் காரணமாக பிள்ளைகளது எதிர்கால வாழ்வு சீராக கட்டமைக்கப்படுவதில்லை. இதனால் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஒரு நிலை உருவாகி வருகின்றமையை இனம் காண முடிகின்றது.

எமது சமூக பண்பாட்டுக் கட்டமைப்பில் நிகழ்த்தப்படுகின்ற சமய நிகழ்வுகள், விழாக்கள், பக்தி விருத்தியை உருவாக்கும் நோன்புகள், ஏனைய சமயம் சார்ந்த விடயங்களில் எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம் என்பதைச் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இன்று பல நாடுகளில் சமயம் சார்ந்த பாடங்கள் அவர்களது கல்விக் கலைத் திட்டத்தில் உள்வாங்கப்படுவதில்லை. ஏனெனில் சமயம் சார்ந்த உணர்வுகளும், நம்பிக்கைகளும் ஒவ்வொரு மனிதப் பண்பாட்டு விழுமியங்களினூடாகவே கட்டியெழுப்பப்பட வேண்டும் எனும் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றது. இறை ஞான அறவழிகளைக் கலைத் திட்டத்தினூடாகக் கற்று அதனை எமது வாழ்வின் அர்த்தங்களை அறிந்து கொள்ள முனைவது சாத்தியமற்றதாகும். எனவே அது தொன்றுதொட்டு வந்த விழுமியங்களினூடாக பயிற்சியளிக்கப்படுதல் அவசியமானது. அது அனுபவத்தினூடாகக் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் தமிழர் பண்பாட்டடிப்படையின் ஓர் சமூக அங்கமாக இருந்து வந்த கூட்டுக்குடும்ப வாழ்வு முறை இன்று அருகி மறைந்து விடுமளவிற்கு எமது பண்பாட்டு அசைவுகளில் மாற்றங்கள் நிகழ்கின்றது. கூட்டுக் குடும்ப அலகுகளில் வயது முதிர்ந்தவர்களின் வழிநடத்தல், விழுமியக் காப்பு முறைகள், ஆலோசனைகள், அரவணைப்புக்கள், அன்பு, பாசம், அறவழிகளில் அக்கறை, இயற்கை வளங்களில் அக்கறை, ஆன்மீக வழிநடத்தல், விழுமியங்களை யதார்த்தத்துடன் நடைமுறைப்படுத்தல், விருந்தோம்பல், உதவிகளும் ஒத்தாசைகளும் புரியும் மனப்பாங்கு, பெற்றோரையும் பெரியோரையும் மதித்தல், கூட்டுமுயற்சிகள் போன்ற அம்சங்கள் பிள்ளைகளது எதிர்கால நல்வாழ்வுக்கு அஸ்திபாரமாகத் திகழ்ந்த

காலம் மறைந்து தற்போது சிக்கலானதும், சவால் நிறைந்ததுமான இறை ஞானமற்ற ஒரு இருள் நிறைந்த சமூகச் சூழல் உருப் பெற்று வளர்ந்து வருகின்றமையினை கண்களூடாகக் காண்கின்றோம். இன்று முதி யோர் உறவுகள் குடும்ப அலகிலும், சமூகத் திலும் பெரும் சுமையாக எண்ணுமளவிற்கு சமூகத்தில் மாற்றம் நிகழ்கின்றது. முதியோர் விடுதிகள் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதில் சுதந்திரமற்ற வாழ்வில் இணைந்து வாடுகின்ற நிலை இன்று பெருகி வருகின்றது. இக்கலாசாரம் மேல்நாட்டவர்களுக்கு உரியதாகும். இன்று முதியோர்கள் வெளிநாட்டு பண வருகை யினை இலக்காகக் கொண்டு பராபரிக்கப் படுகின்றனர். இவ்வாறானதொரு முதிர்ந்த சொத்துக்கள் பல குடும்ப அலகுகளில் கண் ணீருடன் நிறைந்த வாழ்வினை அனுபவிப் பதை இயல்பாகக் காணமுடிகின்றது.

எமது முதுமைச் சொத்துக்களை இழந்து, நாம் கூலிக்காக வீட்டு வேலைகளில் அமர்த்தப்பட்ட பராபரிப்பாளர்களினால், எமது பிள்ளைகளை பராபரிக்க வேண்டிய வீட்டுச் சூழலை உருவாக்குகின்றோம். இதனால் பிள்ளைகள் தன்னிச்சையாக முடிவெடுத்தல், ஆபாச நடத்தைகள், துஷ்பிரயோகங்கள், களவு, பொய், பெற்றோரில் அன்பின்மை, ஒழுங் கற்ற இடைத்தொடர்பு, கீழ்ப்படிவற்ற நிலை, கல்வியிலும் ஆன்மீகக் காரியங்களிலும் கரிசனையற்ற நிலை, தவறான பணக் கையாளுகை, மது, மாது, போதைவஸ்துக்கு அடிமையாகுதல் போன்ற சமூகப் பிறழ்வு களில் ஈடுபடவும், உருவாகவும் அதிக வாய்ப் புக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. கல் விக்காகவும், உலகப்பிரகாரமான காரியங் களுக்காகவும் அதிக அக்கறையும், முக்கி யத்துவமும் கொடுத்து வருகின்றோம். ஆன் மீக நடவடிக்கைகளில் எமது பிள்ளைகளை ஈடுபடுத்தத் தவறுகின்றோம்.

கல்வி நடவடிக்கைகளுக்காக கரி சனையுடன் செயற்படுவது போலவே எமது பிள்ளைகளை ஆன்மீகத்தில் அக்கறையுடன் செயற்படுத்துவது முதன்மையான காரிய மாகும். அதாவது குடும்பமாக இறைவனைத் தொழுதல், குடும்பமாக இணைந்து உணவு அருந்துதல், சமய நிகழ்வுகளில் ஆன்மீக உணர்வுகளுடன் ஈடுபடச் செய்தல், ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்தல், பண்டிகை விழாக்களின் முக்கியத்துவத்தை உணர்த்து தல், அன்பு உணர்வுகளைக் கட்டியெழுப்பு தல், மன்னிக்கும் மன உணர்வுகளை உரு வாக்குதல், பொதுச் சேவைகளில் ஈடுபட வாய்ப்புக்களை வழங்குதல், ஆன்மீகத்தின் பின்னணியில் கல்விக்கு முக்கியத்துவமளித் தல், நல்ல சகபாடிகளைச் சம்பாதிப்பதற்கு சூழலை உருவாக்குதல், இயற்கையைக் கரிசனையுடன் பராபரிக்கும் மன உணர்வு களை ஆன்மீக அடிப்படையில் கட்டியெழுப்பு தல், ஏனையோரை மதிக்கும் மனப்பான் மையை எமது தனித்துவ விழுமியங்களி னூடாக உணர்த்துதல், கீழ்ப்படிதல் போன்ற சுயமதிப்பீட்டு உணர்வுகளைக் கற்றுச் செயற்படக்கூடிய ஒரு சூழலை பெற்றோர் களாகிய நாம் எமது ஒவ்வொரு தனிக்குடும்ப அலகுகளிலும் உருவாக்குவது மிக அவசிய மானதாகும்.

எனவே ஒரு சமூகத்தில், பிள்ளைச் சமூகம் சமநிலையான ஆளுமையுடன் வரும் சவால்களுக்கு முகம் கொடுக்க , ஆன்மீகப் பலம் இன்றியமையாததாகும். எமது பிள் ளைச் சமூகத்தை ஆன்மீகத்தில் ஆழ்ந் தெழச் செய்வது எமது ஒவ்வொருவரினதும் பொறுப்பாக உணரப்படுகின்றது.

*அன்பு இருக்குமிடம் சொர்க்கம். அன்பு மறைந்த இடம் நரகம்.*

(தொடர்ச்சி...

# திருச்சதகம்

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

39. அளவ றுப்பதற் கரியவன் இமையவர்க் கடியவர்க் கெளியான் நங்,
களவ றுத்துநின் றாண்டமை கருத்தினுட் கசிந்துணர்ந் திருத்தே யுங்,
உளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன் செய்தது மிலை நெஞ்சே,
பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை பரகதி புகுவானே.

**ப-ரை:**

நெஞ்சே- மனமே, இமையவர்க்கு அளவறுப்பதற்கு அரியவன்- இறைவன் தேவர்களுக்கும் தன் பெருமையை அளந்து முடிவு செய்தற்கு அரியவன்; ஆயினும், அடியவர்க்கு எளியன்- தன் அடியவர்க்கு எளி வந்து அருள் செய்யும் பேரருளையுடையான்; நாம் களவு அறுத்து ஆண்டமை- அவன் நம்மைத் திருடிய பாசங்களை ஒழித்து ஆட் கொண்டருளி நம்மிடத்து நிலைபெற்ற தன்மையை, கருத்தினுள் உணர்ந்து கசிந்திருந்தேயும்- உள்ளத்தில் நினைந்து உணர்ந்து நெகிழ்ந்திருந்தும், பரகதி புகுவான்- மேலான வீட்டுநெறியிற் போதற்கு, உனை நினைந்து- உள் இயல்பை நினைந்து, உள கறுத்து- பொறி நுகர்ச்சிகளாக உள்ளனவற்றை வெறுத்து நீக்கி, உளம் பெரு களன் செய்ததும் இல்லன்- உள்ளத்தை இறைவன் எழுந்தருளியிருத்தற்குரிய பெரிய திருக் கோயிலாகச் செய்ததும் இல்லை; பளகு அறுத்து உடையான் கழல் பணிந்திலை- குற்றங்களை நீக்கி எம்மையுடைய அவ்விறைவன் திருவடிகளை வணங்குகின்றாயுமில்லை, நின்தன்மை இருந்தவாறென்னே.

இறைவன் தேவர்களுக்கும் தன்பெருமையை அளந்து முடிவு செய்தற்கு அரியவன்; ஆயினும் தன் அடியவர்க்கு எளிவந்து அருள்செய்யும் பேரருளாளன். அவன் நம்மைத் திருடிய பாசங்களை ஒளித்து நம்மை ஆட்கொண்டருளி நம்மிடத்து நிலைபெற்ற தன்மையை உள்ளத்தில் உணர்ந்து நெகிழ்ந்திருந்தும் பரகதி புகுவதற்கு உன் இயல்பை நினைந்து பொறி நிகழ்ச்சிகளாக உள்ளனவற்றை வெறுத்து நீக்கி உள்ளத்தை இறைவன் எழுந்தருளியிருக்கும் பெரிய திருக்கோயிலாகச் செய்ததுமில்லை. நின் குற்றங்களை நீக்கி எம்மையுடைய அவ்விறைவன் திருவடிகளை வணங்குகின்றாயுமில்லை; நின் தன்மை இருந்தவாறென்னே.

அளவறுத்தல்- காட்சி அனுமானம் முதலிய அளவைகளால் இறைவன் இயல்புகளை அளவிட்டறிதல். இறைவன் சுட்டியறியப்படானாகலின் "அளவறுப்பதற்கரியவன்" என்றார். "ஓரளவில்லாவொருவன்" என்றார் திருக்கோவையாரினும் (308) இமையவர்க்கு என்பதில் உயர்வு சிறப்பும்மை தொக்கது. அடியவர்க்கெளியான் என்றது தன் அடியவர்களுக்கு எளிவந்தருளும் பேரருளுடையான் என்றவாறு.

பொறாமையினால் ஒருவனின் மனதில் உருவாகும் விஷம் இறுதியில் அவனையே அழித்துவிடும்.

"முன்னை யென்னுடை வல்வினை போயிட முக்கண துடையெந்தை
தன்னை யாவரும் அறிவதற் கரியவன் எளியவன் அடியார்க்கு"
அதிசய 3.

என அடிகள் பிராண்டு அருளியவாறுங் காண்க. தி-20

"புரிகொள் சடையர் அடியார்க் கெளியர்" ஞான 68:2

"வஞ்சகர்க் கரியர்போலு மருவினோர்க் கெளியர் போலும்" நாவு 66:7

"எளியவ ரடியார்க் கென்று மின்னம்ப ரீசனாரே" நாவு 72:5

"தன்னடியார்க் கெளியான் றன்னை" நாவு 247:3

"உகந்துள்ளி நண்ணாதார்க் கரியானை யடியேற் கெளியானை" சுந் 59:7

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. அடியார்க்கு அளவறுப்பதற்கு எளியவன் என இயைத்துப் பொருளுரைப்பின் இறைவன் சுட்டியறியப்படுபவனாவான். "தன்பெருமை தானறியாத் தன்மையன் காண்" (சாழல் 19) என அடிகள் மற்றோரிடத்து அருளிச் செய்தலின் அவனாலுமறிதற்கரிய அவனது அளவற்ற பெருமையை அடியவர்கள் எளிதில் அறிவர் எனக் கூறுதல் பொருந்தாமையின் எளிவந்து அருளும் பேரருளாளன் எனப் பொருள்கோடலே பொருந்துவதாகும்.

"கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி" போற்றி 143:4.

என்னும் அடிகள் திருவாக்கும் ஈண்டு சிந்திக்கத்தக்கது.

களவு என்னும் தொழிற்பெயர் நம்மைக் களவு செய்த பாசங்களை உணர்த்தியது. பாசத்தின் களவாவது: இறைவன் பாற் சாராது மனத்தினைத் தன்பாற் கவர்ந்தமையாகும். பாசமறுத்தாண்டமை,

"பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசமறுத்தெனை யாண்ட
ஆருடை யாம்பொன்மேனி யமுதினை" குயிற் 8.

என அடிகள் அருளியமையானுமறிக. நின்றாண்டமை என்பதை ஆண்டு நின்றமை என இயைத்துப் பொருள் கொள்க. கருத்தினுள் உணர்ந்து கசிந்திருந்தேயும் என மாறிக்கூட்டுக. கருத்து- உள்ளம். நெஞ்சிற்கு உள்ளம் கூறுதலை, "வருந்தினை வாழியென் நெஞ்சே... இனிச் சிறக்க நின் உள்ளம்" என அகப்பாட்டில் (19:2-8) வருதலானுமறிக. இருந்தேயும் என்பதில் ஏ அசைவு நிலை. உம்மை, களவறுத்தாண்டமையைச் சுட்டியுணராயாயினும் என இறந்தததுதழீஇய எச்சவும்மை.

உள- உள்ளன. அவை பொறிவாயிலாக வரும் நுகர்வுகள். கறுத்தல்- ஈண்டு வெறுத்தல். உனைநினைதல்- உன் இயல்பினை நினைதல். உளம் பெருங்களஞ் செய்தல்- உள்ளத்தினை இறைவன் எழுந்தருளியிருக்கும் பெரிய திருக்கோயிலாகச் செய்தல். உள்குவார் உள்ளத்தினை இறைவன் கோயிலாகக் கொள்ளுதல்,

"இறைஞ்சுவார் சிந்தையுள்ளே கோயிலாகத் திகழ்வானை" ஞான 200:2

"சேவடி, காலையு மாலையுங் கைதொழுவார் மனம்
ஆலயம் ஆரு ரரநெறி யார்க்கே" நாவு 17:8

"நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்" நாவு 116:1

எனத் தேவாரத்தும்,

*மன நிறைவுதான் ஒருவனைப் பணக்காரனாக்குகிறது.*

"மறவாமை யானமைத்த மனக் கோயில் உள்ளிருத்தி" வாயி 8.
எனப் பெரியபுராணத்தும் வருவனவற்றாலுமறிக.

பளகு- குற்றம். "பண்டுனை நினையமாட்டாப் பளகனேன்" (தே.நாவு 62:5) "பளகறு கேள்விப் பயிற்சியர்" (காஞ்சி. திருநகர 108) என்பவற்றிலும் இப்பொருட்டாதல் காண்க. அறுத்துப் பணிந்திலை என இயையும். "செய்தது மிலை" என்ற உம்மையைப் பணிந்தது மிலை எனவும் கூட்டுக.

பரகதி- மேலான வீட்டு நெறி. "பரகதி பாண்டியற்கருளினை போற்றி" (போற் 214) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அவ்வீட்டு நெறியிற் போதற்குரிய இறைவனை நினைத்தலும் கழல் பணிதலுமாகியவற்றைச் செய்திலை என்பார், "உளம் பெருங் களஞ் செய்ததுமிலை கழல் பணிந்திலை பரகதி புகுவானே" என்றார். "மலர்பறித்திறைஞ்சிப் பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்தருள் செய்யும் சித்தனே" (அருட் 8) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

இதன்கண் நெஞ்சே என முன்னிலைப்படுத்தி உளகறுத்து உளம் பெருங்களன் செய் ததுமிலை எனவும், பளகறுத்து உடையான் கழல் பணிந்ததுமிலை எனவும் கூறியிருப்பினும் ஆத்தும சுத்திக்குரிய இத்தன்மைகளை எனக்கருளவேண்டுமென இறைவனை வேண்டுதலே கருத்தாகலின் ஆத்துமசுத்தியென்னும் நான்காம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க.

40. புகுவ தாவதும் போதர வில்லதும் பொன்னகர் புகப்போதற்,
குகுவ தாவதும் எந்தையெம் பிரானென்னை யாண்டவன் கழற்கன்பு,
நெகுவ தாவதும் நித்தலு மமுதொடு தேனொடு பால்கட்டி மிகுவ
தாவதும் இன்றெனின் மற்றிதற் கென்செய்வேன் வினையேனே.

**ப-ரை:**

புகுவதாவதும்- சென்று அடைதற்குரிய நெறியையுடையதும், போதரவு இல்லதும்- மீண்டு வருவதற்குரிய நெறி இல்லாததுமாகிய, பொன்நகர் புக போவதற்கு- சிவநகருட் புகுதற்காகச் செல்லுதற்கு, உகுவது ஆவதும்- நீங்கவேண்டிய அகப்பற்றுப் புறப்பற்றுக்கள் நீங்குவதும், எந்தை எம்பிரான் என்னை ஆண்டவன் கழற்கு அன்பு நெகுவதாவதும்- எங்கள் தந்தையும் எங்கள் தலைவனும் என்னை ஆட்கொண்டவனுமாகிய இறைவனுடைய திருவடிக்கு அன்பினால் நெஞ்சம் நெகிழவேண்டியதும், நித்தலும் அமுதொடு தேனொடு பால் கட்டி மிகுவது ஆவதும்- எப்பொழுதும் அமுதும் தேனும் பாலும் கருப்புக் கட்டியும் போலும் இனிய பேரின்பச் சுவையானது மிகவேண்டியதும், இன்றெனின்- இப்பொழுது எனக்கு இல்லையானால், வினையேன் இதற்கு என் செய்கேன்- எடுத்த உடம்பு முகந்து நின்ற வினையை அநுபவித்தற்குரிய யான் இந்நிலைமைக்கு யாது செய்யவல்லேன்.

சென்றடைதற்குரிய நெறியையுடையவனும் அடைந்தோர்கள் மீண்டு வருவதற்குரிய நெறியில்லாததுமாகிய பொன்னகர் புகப்போதற்கு அகப்பற்று புறப்பற்றுக்கள் நீங்குவதும் எந்தை எம்பிரான் என்னை ஆண்டவன் கழற்கு அன்பினால் நெஞ்சம் நெகிழவேண்டியதும் நித்தலும் அமுதும் தேனும் பாலும் கருப்புக் கட்டியும் போலும் இனிய பேரின்பச் சுவை மிக வேண்டியதும் இப்பொழுது எனக்கு இல்லையானால் வினையேன் இந் நிலைமைக்கு யாது செய்யவல்லேன் என்பதாம்.

*திறமை தானாக வராது. நாம்தான் வளர்த்துக்கொள்ள வேண்டும்.*

புகுவதாவதும் போதரவில்லதும் என்றதனால் இறைவன் அருளும் திருவடி நீழலாகிய வீடு பக்குவமடைந்த உயிர்களுக்குச் சென்றடைதற்குரிய நெறியையுடையதாயும், அடைந்தால் மீள்தற்குரிய நெறியையில்லாததாயும் என அதன் சிறப்பியல்பு கூறப்பட்டது.

"மீண்டு வாரா வழியருள் புரிபவன்" 711 கீர்த்.

"வாராவுலகந் தந்து வந்தாட் கொள்வோனே" ஆசைப் 7.

"பிறிவறியா வன்பர்நின் னருட்பெய்கழல் தாளிணைக்கீழ்
மறிவறியாச் செல்வம் வந்து பெற்றார்" அடைக் 9.

"வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா வமுதா யமைந்தன்றே" வெண்பா 7.

"வாரா வுலக நெறியேறக், கோலங்காட்டி யாண்டானை" ஆனந்த 3.

என அடிகளும்,

"வாரா வுலகருள வல்லான் றன்னை" தே.217:2.

என அப்பரடிகளும், அருளியவாறுங் காண்க.

போதரவு- திரும்பி வருதல். ஈண்டு திரும்பி வருதற்குரிய நெறியை யுணர்த்தியது. போதரவில்லதுமாகிய எனப் பண்புருபு விரித்துப் பொருள் கொள்க. பொன்னகர்- வீடாகிய அழகிய நகர்; சிவநகர். "போரேறே நின் பொன்னகர்வாய் நீ போந்தருளி" (சதகம் 53) என அடிகள் அருளியமையுங் காண்க. உகுவதாவது- நீங்கவேண்டிய அகப்புறப் பற்றுக்கள். இவை பொன்னகர் புகப்போதற்குத் தடையாகவுள்ளனவாதலின், பொன்னகர் புகப்போதற்குத் உகுவதாவதும்" என்றார். "யானெனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுலகம் புகும்" (குறள்) என்பதும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. உகுவதாவது- கெடவேண்டியது; நீங்க வேண்டியது. உகுதல்- கெடுதல் என்னும் பொருட்டாதல் "அழிந்துகு நெஞ்சத்தே மல்ல லுழப்ப" (கலி 72:23) என்புழிக் காண்க.

கழற்கு அன்பு- திருவடிக்கு அன்பு. "வேண்டு நின்கழற்கண் அன்பு" (சத74) என அடிகள் அருளியமையுங் காண்க. அன்பு நெகுவதாவது அன்பினால் மனம் நெகிழ வேண்டியது. "நாயினேன் நெகுமன்பில்லை" (சத 60) "அன்பினா லடியேன் ஆவியோ டாக்கை யானந்தமாய்க் கசிந்துருக" (கோயிற் 2). "அன்பால் நீ அகநெகவே புகுந்தருளி" (ஏசறவு 7) என வருவன வுங் காண்க.

அமுதொடு தேனொடு என்ற ஒடுக்கள் எண்ணுப்பொருளில் வந்தன. அவற்றைப் பால் கட்டி என்பவற்றோடும் கூட்டுக. அமுது தேன் பால் கட்டி என்பன உவம ஆகுபெயராய் இறைவன் அருளும் பேரின்பச் சுவையை உணர்த்தின.

"தேனை ஆனெயைக் கரும்பினின் தேறலைச் சிவனை" சத 38.

"தேனே யமுதே கரும்பின் தெளிவே சிவனே" சத 55.

"தேனைப் பாலைக் கன்னலின் தெளியை" சத 58.

"தேனே யமுதே சிந்தைக் கரியாய்" சத 85

"தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கு, மானே" சத 90.

"தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய
கோனவன் போல் வந்து" அம் 14.

"ஊனா யுயிராய் உணர்வாயென் னுட்கலந்து
"தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்" அம் 16.
"தேனைப் பாலை நிறையின் அமுதை அமுதின் சுவையை" புணர்ச் 4.
"தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்" ஏசறவு 10.

என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

கட்டி- கரும்புக்கட்டி. "கட்டியி னரிசியும் புழுக்குங் காணமும்" (சீவக 1938) என் புழியும் இப்பொருட்டாதல் காண்க. "கன்னல் கட்டி கற்கண்டாகும்" என்பது பிங்கலந்தை (6:44) மிகுவதாவது- அப்பேரின்பச் சுவை மிக வேண்டிது; இன்றெனின் என்பதன் ஆற்றலால் இப்பொழுது இல்லையாயின் என உரைக்கப்பட்டது. மற்று- அசை. வினையேன் என்றது உடம்பு முகந்து நின்ற வினையை அனுபவித்தற்குரியேன் என்றவாறு.

இதன்கண் பொன்னகர் புகப்போதற்கு உகவேண்டியதும் ஆண்டவன் கழற்கு அன்பு நெகவேண்டியதும் நித்தலும் பேரின்பச் சுவை மிக வேண்டியதும் உயிரின் தூய்மைக் குரியனவாதலின் அவற்றை அருளவேண்டுமென இறைவனை வேண்டுமுகத்தால் ஆத்துமசுத்தி என்னும் நான்காம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 36.

(தொடரும்...

**அரசனின் கனவு**

ஒரு அரசனுக்கு அவனுடைய எல்லாப் பற்களும் விழுந்து பொக்கை வாயுடன் இருப்பதாக ஒரு கனவு வந்தது. இதனால் காலையில் பீதியுடன் எழுந்த அவன், அந்தக் கனவால் என்ன விளைவுகள் நேருமோ என்று பயந்துபோய் முதல் வேலையாக ஒரு நாடி ஜோதிடரை வரவழைத்தான். அந்த நாடி ஜோதிடர் தனது ஓலைச் சுவடியை எடுத்து, அதில் பொக்கை வாய் கனவு பற்றி விளக்கியிருந்த ஒரு ஓலையை வாசித்துவிட்டு, "அரசே! உங்கள் மனைவி, குழந்தைகள், சொந்த பந்தங்கள் எல்லாம் உங்களுக்கு முன்பே இறந்து விடுவார்கள்" என்று பலன் சொன்னார். உடனே அந்த அரசன் மிகவும் கோபமுற்று, "இவனைப் பிடித்து சிறையில் தள்ளுங்கள்!" என்று உத்தரவிட்டான்.

அதன் பிறகும் மன்னனின் மனம் சமாதானமடையவில்லை. இன்னொரு நாடி ஜோதிடரை வரவழைத்து, அவரிடம் தன் பொக்கை வாய் கனவின் அர்த்தம் என்ன என்று வினவினான். அந்த ஜோதிடரும் அதே மாதிரியான ஓலைச் சுவடியைத்தான் வைத்திருந்தார். அவரும் அதைப் பார்த்துவிட்டு, "மன்னா! உங்கள் சொந்த, பந்தங்களையெல்லாம் விட நீங்கள் நீண்ட காலம் நீடூழி வாழ்வீர்கள்" என்று பலன் கூறினார். இதனால் மனம் குளிர்ந்த அரசன், அந்த ஜோதிடருக்கு தகுந்த பரிசுகள் வழங்கி அனுப்பி வைத்தான்.


இருவரும் அதே ஓலையைத்தான் படித்தார்கள், அதே விடயத்தைத்தான் சொன்னார்கள். ஒருவர் "எல்லோரும் இறந்து விடுவார்கள்" என்றார், இன்னொருவர் "எல்லோரையும் கடந்து வாழ்வீர்கள்" என்றார். அவ்வளவுதான் வித்தியாசம்.

*மனிதன் தோல்வியின்மூலமே மேலும் புத்திசாலி ஆகின்றான்.*

# சிவம் என்பது என்ன?

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

சிவம், சிவன், சிவபெருமான் இம்மூன்று சொற்களும் சாட்ஷாத் பரம்பொருளாகிய பரமசிவத்தையே குறிக்கும். அது எல்லை இல்லாதது; உருவமற்றது; காண்பதற்கு அரியது; வியாபகமாயுள்ளது. அதைப் பற்றிய ஆராய்ச்சி நம்மால், ஏன் விஞ்ஞானிகளால்கூட காண முடியாது. ஆனால் ஞானிகள், யோகிகள், சித்தர்கள் அறியமுற்பட்டார்கள்; அறிந்துமுள்ளார்கள். அவர்கள் மெஞ்ஞானம் கைவந்தவர்கள்.



சிவபெருமான் என்றவுடன் அப்பர் சுவாமிகள் அருளிய குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், பனித்த சடையில் கங்கை, பிறை நிலா, பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறு, இனித்தமுடைய எடுத்த பொற்பாதம், ஊன்றிய திருவடி, காலின்கீழ் முயலகன், ஒருகையில் உடுக்கு, ஒரு கையில் அக்கினி, அபயவரதமான கை இத்தனையும் கொண்ட தேவாரப் பாடலின் சித்திரம் மனதில் பதியலாம், அல்லது ஞாபகம் வரலாம்.

படங்களில் சிவபெருமானின் உருவங்களைப் பார்த்திருக்கிறோம். திரிசடை, நெற்றிக் கண், புன்னகை பூத்த முகம், மார்பில் முப்புரி நூல், நீலகண்டம், புலித்தோலாடை, பாம்பணி என சித்திரகாரன் சித்திரம் வரைந்து வர்ணம் தீட்ட, சிற்பி, கல்லிலும், செம்பு முதலாய உலோகங்களிலும் சிலைகளைச் செதுக்குகிறான். இவையல்லாமல் இறைவனை உலக தோற்றம் ஒடுக்கங்களுக்கு அடையாளமாக லிங்கம் என (லி- தோற்றம், கம்- ஒடுக்கம்- லிங்கம்) உருவமொன்றை "சிவலிங்கம்" சிவபெருமானின் வடிவம் என நாம் காண்கிறோம்.

இவையாவும் நமக்குச் சிவபெருமான் பற்றிய ஒரு தோற்றமே. உண்மையிலே சிவம் என்பது யாது? அது அடி முடி காணமுடியாத சக்தி; பிரபஞ்ச முதல்வன். அந்தப் பிரபஞ்ச சக்தி உலக உயிர்கள், ஜீவராசிகள் அனைத்திலும் எம்மிலும் உங்களில் உயிர் மூச்சாக விளங்குகிறது. அதுவே நம்மை இயக்குவதால் நாம் உயிரோடு இருக்கிறோம். இந்த சிவம் என்ற சக்தி நம் உடலை விட்டு நீங்கினால் நாம் உயிரற்ற சவங்களே.

சிவபெருமானுடைய உருவம் இதுவேயென சித்திரகாரரும், சிற்பிகளும் காட்டியுள்ளார்கள். ஆனால் பிரமாவும் விஷ்ணுவும் அடிமுடி தேடியும் காண்கிலர். சிவனார் முடியிலிருந்து தாழம்பூ வந்ததாக பிரமா கண்டதாக நாம் படித்திருக்கிறோம். அடிமுடி காணாத சிவத்துக்கு

முடி எங்கிருந்து வந்தது? அது பொய்யல்லவா? சிவனுக்கு முடியும் இல்லை அடியும் இல்லை.

எனவே அடிமுடி காணாத எல்லையற்ற அந்தப் பரம்பொருளை, பிரபஞ்ச முதல்வனை, அந்தப் பெரிய சக்தியை நாம் ஆராய்வோமாயின் சிவனையோ பிரம விஷ்ணுவையோ தாழம்பூவையோ காணமாட்டோம். மிகப் பரந்த வெட்டவெளி- எங்கு பார்த்தாலும் எல்லை யில்லாப் பெரு வெளியையே காண்போம்.

சிவபெருமானை உருவமாகப் பாராது அருவமாகப் பார்த்தால் பரந்து விரிந்த பெருவெளியாகவே தெரியும். வேறெதுவும் காணமுடியாது.

ஆதியாய் வேதநான்காய், அடிமுடி தெரியாவண்ணம்
சோதியாய் நிறைவாய்நின்ற, முதல்வனே நமச்சிவாய.

பண்டுல களந்தமாலும், பங்கயத் தயனும்தேடி
கொண்டு சென்றறியா, வொண்ணாத் தலைவனே நமச்சிவாய.

சுத்தவெண் ணீறுபூசிச் சுடலையி நடனமாடும்
அத்தனே ஆரூர்வாழும், அண்ணலே நமச்சிவாய.

சி- சிவன்; வ- சக்தி; ம்- ஒடுக்கம்; இரண்டும் ஒன்றுடன் ஒன்று பிரியாதது.

**சந்நிதியே உனது தாற்பரியம்**

செல்வச்சந்நிதியில் நின்றுபார் உனது
சரித்திரமே தெரியும்
செல்வச்சந்நிதியில் இருந்துபார் உனது
சாமர்த்தியம் புரியும்
செல்வச் சந்நிதியில் புசித்துப்பார் உனது
சௌக்கியம் நிறையும்
செல்வச் சந்நிதியில் நீராடிப்பார் உனது
தாற்பரியம் விளங்கும்

அன்னதானக் கந்தனென்ற முருகா
அன்பினால் எனை அரவணைத்த நீ
அல்லல்படும் அடியேனின் துயர்போக்கி
அளவில்லா ஆனந்தத்தை அள்ளித்
தருவாய் சந்நிதி வேலவனே!

-க. சரவணபவன்-

நாம் படிக்கப் படிக்க நம்மிடமிருக்கும் அறியாமையை அறிந்து கொள்கிறோம்.

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)



முனைவர் ஆ. ஆனந்தராசன்

## ஏழாம் அதிகாரம்

### உயிர் விளக்கம்

**அறிவும் அறியாமையும்:**

மாயையின் காரியங்களாகிய உடம்பையும் கருவிகளையும் கொண்டு உலகை அறிந்து வருகிறோம். இவைகள் நமக்கு உலக அறிவைத் தருகின்றன. இக்கருவிகள் நம்மைவிட்டு நீங்கும்போது அறிவு நிலையும் நீங்குகிறது; அறியாமை மேலிடுகிறது. கருவிகள் நீங்குதல் என்பதன் பொருள், அவை சோர்வுற்றுச் செயற்படாமல் மடங்கி நிற்றல் என்பதாகும். அவ்வாறு நீங்கிய கருவிகள் மீண்டும் வந்து கூடிச் செயற்படும்போது நாம் அறியாமையிலிருந்து விடுபட்டுப் பழையபடி உலகை அறிந்து வருகிறோம். இது நமது அன்றாட அனுபவம் ஆகும்.

விழிப்பு நிலையில் எல்லாக் கருவிகளும் நன்கு செயற்படுவதனால் அறிவு நன்கு விளங்குகிறது. ஆனால், எப்பொழுதும் விழிப்பு நிலையிலேயே இருக்க முடிகிறதா? அவ்வாறு இருக்க நாம் விரும்பினாலும் கருவிகள் நம்மோடு ஒத்துழைப்பதில்லை. அவை நம்மிடம் சொல்லாமலே நம்மைவிட்டு நீங்குகின்றன! கண்கள் சோர்ந்து இமை மூடுகின்றன. செவி முதலிய ஏனைய கருவிகளும் படிப்படியாகச் செயலிழக்கின்றன. உறக்கம் வந்து நம்மைத் தழுவிக் கொள்கிறது.

விழிப்பு என்பது அறிவு நிலை என்றால், உறக்கம் என்பது அறியாமை நிலையாகும். இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட கனவு என்ற நிலை உண்டு. கனவு என்பது அரைகுறையான அறிவு நிலையாகும். இனி உறக்க நிலையையும் தாண்டிப் பேருறக்கம் என்ற நிலை வரும். அதற்கும் அப்பால் மூச்சுக் காற்றும் இயங்காமல் நிற்கிற, முழு அறியாமையில் உயிர் அழுந்துகிற உயிர்ப்பு அடங்கல் என்ற நிலையும் உண்டு.

இப்படி விழிப்பு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்ற ஐந்து நிலைகளை நாம் நாள்தோறும் அடைகிறோம். சிலசில கருவிகள் செயற்படாமல் நீங்க நீங்க, இந்த நிலைகளும் படிப்படியாக உண்டாகும்.

விழிப்பு நிலையிலிருந்து ஒவ்வொரு நிலையாகக் கடந்து உயிர்ப்படக்க நிலைக்குச் செல்வதும், பின் மீண்டும் அங்கிருந்து ஒவ்வொரு நிலையாகக் கடந்து பழையபடி விழிப்பு நிலைக்கு வருவதுமாகப் போக்கு வரவு செய்கிறோம். விழிப்பு நிலையிலிருந்து இறங்க இறங்க அறியாமை மிகுந்து வரும். கீழ்நிலையிலிருந்து மேலே செல்லச் செல்ல அறிவு விளங்கி வரும். வேறு வகையாகச்

சொன்னால் கருவிகள் நீங்க நீங்க அறியாமை யும், கருவிகள் சேரச்சேர அறிவு நிலையும் உண்டாகும் எனலாம்.

கருவிகள் நீங்கி அறியாமைப்படும் நிலையைக் கேவலம் என்றும், கருவிகளோடு கூடி அறிவு விளங்கும் நிலையைச் சகலம் என்றும் கூறுவர். எனவே, கேவலம் என்பது அறியாமையைக் குறிக்கும். சகலம் என்பது அறிவு நிலையைக் குறிக்கும்.

### நினைப்பும் மறப்பும்:

இனி, விழிப்பு நிலையிலிருந்து இறங் காமலே, அஃதாவது நன்றாக விழித்திருந்து உலகத்தை நன்றாக அறிந்து நிற்கும்போதே நமது உணர்வில் பல நிலைகள் உண்டாகும். அதனை இங்கே விளக்குவோம்.

ஒருவர் வங்கியில் ஒரு பெருந் தொகையை எடுத்து ஒரு பையில் வைத்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டார். காலம் கெட்டுக் கிடக்கிறது. அதனால் வழியில் எங்கேயும் நிற்கக் கூடாது; வேடிக்கை பார்க் கக்கூடாது என்றெல்லாம் எண்ணிக் கொண்டு நடந்தார். ஆனால், வரும் வழியில் ஒரு நண்பர் அவரைப் பிடித்துக் கொண்டார். நெடு நாட்களுக்குப் பிறகு சந்திக்க நேர்ந்ததால் அவர் இவரை விடுவதாக இல்லை. நாட்டு நடப்புகள் பற்றி அவர் பேசிக்கொண்டே போனார். அவரிடமிருந்து தப்பித்தால் போதும் என்றாகிவிட்டது இவருக்கு. ஒரு வழியாக அவரிடம் விடைபெற்று விரைவாகக் கிளம் பினார். அந்த விரைவில் பணப்பையை அந்த இடத்திலே மறந்துபோய் வைத்துவிட்டார்.

வீட்டிற்குப்போய்ப் பார்த்தால் பையைக் காணவில்லை. எப்படியிருக்கும் அவருக்கு? ஒரு கணம் மூச்சே நின்றுவிட்டதுபோல் ஆகி விட்டது. நெஞ்சு படபடத்தது. மயக்கம் வரு வது போன்ற நிலை. அப்படியே பொத்தென்று இருக்கையில் விழுந்து கண்ணை மூடிக் கொண்டார். அவரது துணைவியார் பதறிப் போனார். "உங்களுக்கு என்ன ஆயிற்று?" என்று கண் கலங்கி நின்றார்.

சிறிது நேரம் சென்றபின் மயக்கம் ஒருவாறு தெளிந்தது; படபடப்புத் தணிந்தது. துன்ப மிகுதியால் செய்வதொன்றும் தோன் றாமல் மனம் கலங்கி நின்றார். பின்பு கலக் கம் நீங்கி "அந்தப் பணப்பையை எங்கே, எவ்வாறு தவற விட்டோம்" என்று எண்ணிப் பார்த்தார். நண்பரோடு பேசிக்கொண்டு நின்ற அந்த இடத்தில்த்தான் அதனை விட்டிருக்க வேண்டும் என்ற துணிவு பிறந்தது. உடனே அதனைத் தேடிப் புறப்பட்டார். நல்ல காலமாக அந்தப் பை அங்கேயே கிடந்தது. அவருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை.

பொருளை ஓரிடத்தில் வைத்துவிட்டு மறந்தது, பின் அப்பொருளைப் பற்றிய நினைவு வந்தது என்ற இரண்டிற்கும் இடையே அவ ருக்கு ஏற்பட்ட பல நிலைகளை இங்கே காண லாம். முதலில் மயக்க நிலை, பின் ஒருவாறு தெளிந்த நிலை, செயலற்றுக் கலங்கிய நிலை, பின் அந்தப் பொருள் எங்கே, எப்படிப் போயிருக்கும்? என்று சிந்தித்த நிலை இந்த இடத்தில்த்தான் அதனை விட்டிருப்போம் என்ற நினைவு தோன்றிய நிலை என இப் படிப் பல நிலைகள் தோன்றியதைக் கண் டோம்.

இன்னொரு நிகழ்ச்சியைக் கூறுவோம். ஒருநாள் நான் கடைவீதி வழியே சென்று கொண்டிருந்தேன். எதிரே அழகான சிறிய காரை ஓட்டிக்கொண்டு ஒருவர் வந்தார். நடுத் தர வயதிருக்கும். நல்ல எடுப்பான தோற்றம். உயர்ந்த நிலையில் இருப்பவராகத் தோன்றி யது. என்னைக் கண்டவுடன் அவர் வண்டியை நிறுத்தி இறங்கினார். வணக்கம் செலுத்தி னார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் இன்னார் என்பதும் தெரியவில்லை. திகைப்பே ஏற்பட்டது.

அதிஷ்டத்தை என்றும் நம்பாதே. அது உன்னைச் சோம்பேறியாக்கும்.

அவர் பேசத் தொடங்கினார். "உங்களை என்னால் என்றும் மறக்க முடியாது. உங்களால்த்தான் நான் இந்த நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறேன்" என்றார். உடனே, அவர் என்னிடம் பயின்ற மாணவர் என்பது தெரிந்துபோயிற்று. ஆனால், எப்பொழுது பயின்றார்? என்பது நினைவில் இல்லை. அவரது பெயரும் நினைவுக்கு வரவில்லை. பழைய நினைவுகளைக் குடைந்து பார்த்தேன். சட்டென்று அவரது பெயர் எனது நினைவில் தட்டுப்பட்டது. அதைத் தொடர்ந்து, அவருடைய பழைய உருவம், படித்த காலத்தில் அவர் செய்த குறும்புகள் முதலியவையெல்லாம் பளிச்சென்று தெரிந்தன. முதலில் அவர் இன்னார் என்றே தெரிந்துகொள்ள முடியாமல் இருந்தேன். சிறிது நேரம் திகைத்து நின்றேன். பிறகு சிறிது சிறிதாகத் தெளிவு பிறந்தது. அவரைப் பற்றிய பல செய்திகளை நினைவுக்குக் கொண்டுவர முடிந்தது.

ஒரு பொருளை அறியுமிடத்தில் உயிருணர்வில் இப்படிப் பல நிலைகள் தோன்றும். இவையெல்லாம் விழிப்பு நிலையிலே ஏற்படுகிற பல நிலைகளாகும். சுருங்கச் சொன்னால், விழிப்பு நிலையில் மாறி மாறி வரும் நினைப்பும் மறப்புமே இவை எனலாம். கருவிகள் கூடியும் குறைந்தும் செயற்படுவதனால் நினைப்பும் மறப்பும் உண்டாகின்றன.

அறியாமையைக் கேவலம் என்றும், அறிவு நிலையைச் சகலம் என்றும் முன்னே குறிப்பிட்டோம். மறப்பு என்பது அறியாமை தானே. அதனால் மறப்பு கேவலம் எனப்படும். அறிவு நிலையாகிய நினைப்பு சகலம் எனப்படும். உயிர் நாள்தோறும் இடையறாது வரும் நினைப்பும் மறப்பும் ஆகிய சகல கேவலங்களிற் பட்டுச் சுழலும்.

**இரவும் பகலும்:**

மெய்ந்நூல்கள் கேவலத்தை இரவு என்ற குறியீட்டினால் உணர்த்தும்; சகலத்தைப் பகல் என்ற குறியீட்டினால் உணர்த்தும். வெளியுலகில் இரவும் பகலும் மாறி மாறி வருதல்போல உயிருணர்வில் கேவலமும், சகலமும் ஆகிய- மறப்பும், நினைப்பும் ஆகிய- இரவு பகல் மாறி மாறி வருகின்றன. இதனை விளங்கும் படியாகச் சொன்னால், உயிர் ஐம்பொறி முதலிய கருவிகளின் வசப்பட்டு நின்று, உலகப் பொருள்களை அறிந்து, அந்தப் புலன் உணர்வில் அழுந்தி நிற்கும் என்பதாகும். உயிர் புலனுணர்வில் மயங்கி நிற்கும்போது தன்னியல்பையும் அறியமாட்டாது. தன்னுள் இருந்து இயக்கும் தலைவனையும் அறியமாட்டாது.

**கருவிகளை நீங்குதல்:**

கருவிகளின் இயல்பு என்னவென்றால், அவை உயிரியல்பை உணரவிடாமற் செய்து தம்மையே காட்டி நிற்கும். ஓர் எடுத்துக்காட்டுக் கூறினால் இது விளங்கும். பளிங்கின்மேல் பல நிறங்களைத் தீட்டி வைத்தால் அவ்வேற்று நிறங்கள் பளிங்கின் ஒளியைத் தெரியவிடாமல் மறைக்கும்; தம்மையே பளிங்கின் நிறமாகக் காட்டி நிற்கும். அதுபோல உயிரைப் பொருந்திய ஐம்பொறி முதலிய கருவிகள் உயிரியல்பை உணர்த்தாது, தம்மால் கவரப்பட்ட புலன்களின் உணர்வையே தோற்றுவிக்கும். உயிர் அப்புலன் உணர்வில் மயங்கித் தன்னியல்பை மறந்து நிற்கும்.

உயிர் பக்குவமுற்றகாலை ஞானாசிரியரின் உபதேசத்தைப் பெற்றுக் கருவிகளைத் தன்னின் வேறாகக் கண்டு நீங்கும். கருவிகளை விட்டு நீங்குவது எப்படி? என்று கேட்கலாம். பிடிக்காத வீட்டைவிட்டு நீங்கி வேறு இடத்திற் குடிபுகலாம். வேண்டாத மனைவியைக்கூட விட்டு விலகலாம். ஆனால் எப்போதும் உடனாகவே வருகின்ற இந்த உடம்பையும் கருவிகளையும் விட்டு எப்படி

*நீ துயரப்படக் காரணம் எதுவாக இருந்தாலும் பிறருக்குத் துன்பம் செய்யாதே.*

நீங்க முடியும்? என்று வினவலாம். இங்கே நீங்குதல் என்றால் இடத்தால் நீங்குதல் அன்று; அறிவால் நீங்குதலாகும். அ∴தாவது கருவி கரணங்கள் நமக்கு வேறானவை என அறிவால் தெளியக் கண்டு அவற்றில் பற்றுச் செய்யாது நிற்பதே நீங்குதல் எனப்படும்.

## திருவருளைச் சேர்தல்:

உயிருக்கு அமைந்த சார்புகள் இரண்டே. ஒன்று அசத்தாகிய சார்பு; பிறிதொன்று சத்தாகிய திருவருட் சார்பு. அசத்தாகிய கருவி கரணங்களின் சார்பு இடையில் வந்தது. ஆதலின் அ∴து உயிருக்குச் செயற்கையான சார்பாகும். திருவருட் சார்பே என்றுமுள்ள இயற்கையான சார்பாகும். ஆதலால் மேற்கூறியவாறு செயற்கையாகிய கருவிகளின் சார்பு நீங்கியபொழுதே உயிர் திருவருட் சார்பைப் பெற்றுவிடும்.

இங்கே ஓர் ஐயம் எழலாம். கருவிகள் நீங்கினால் உயிருக்குக் கேவலம் ஆகிய அறியாமையல்லவா உண்டாகும்? கருவிகள் நீங்கியதும் உயிர் உறக்கம், பேருறக்கம் முதலிய நிலைகளை அடைவது இதைத்தானே காட்டுகிறது. அப்படியிருக்க, உயிர் கருவிகளை நீங்கினால் திருவருளைச் சேரும் என்று கூறுவது எப்படிப் பொருந்தும் என்று கேட்கலாம்.

இவ்விடத்தில் ஒன்றைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். கருவிகள் சோர்வுற்றுத் தாமாகவே நீங்கும்பொழுதுதான் உயிருக்கு அறியாமை உண்டாகும். அப்படியின்றிக் கருவிகள் நன்கு செயற்படினும், அவை நாமல்ல என்று கண்டு நீங்கினால், அவற்றின் வசப் படாமல், அவற்றில் பற்றுச் செய்யாமல் நின்றால்- உயிர் திருவருளையே சேர்வதாகும்.

உயிர் வியாபகப் பொருள். அதன் அறிவும் வியாபகமானது. இதுவே உயிரின் உண்மை நிலை. இந்த விரிந்த அறிவு கட்டு நிலையில் விளங்காமல் இருந்தது. அதன் அறிவை விளக்குவதற்காகவே கருவிகள் சேர்ந்தன. கருவிகள் சிறுமையுடையவை. அதனால், அவற்றால் விளங்குகின்ற அறிவும் சிற்றறிவாய் அமைந்தது.

உயிர் கருவிகளை வேறாகக் கண்டு நீங்கித் திருவருளைச் சேரும் என்று அறிந்தோம். இந்நிலையில், உயிரறிவை விளக்குவது திருவருளேயன்றிக் கருவிகள் அல்ல. திருவருள் வியாபக அறிவாதலால் அதனால் விளங்குகிற உயிரறிவும் வியாபகத் தன்மையைப் பெறுகிறது. சிற்றறிவு நீங்குகிறது.

## இரவு பகல் அற்ற இடம்:

இங்ஙனம் கருவிகளையும் அவற்றால் வரும் புலன் உணர்வுகளையும் நீங்கி உயிர் திருவருளைச் சேர்ந்து நிற்றலையே இரவு பகல் அற்ற இடத்தில் இருப்பதாக நூல்கள் கூறும். திருவருட் சார்பு இரவு பகலற்ற இடமாதல் எப்படி என்பதை நோக்குவோம்.

உயிர் திருவருள் ஒளியில் நிற்கும் போது ஒன்றையும் அறியாமையாகிய கேவலம் எப்படித் தலை காட்டும்? ஆகவே அது இரவு என்பது நீங்கிய இடம் ஆகிறது. அது காலை கருவிகள் செயற்பட்டுச் சிற்றறிவைத் தருமாயினும் திருவருளால் வியாபக அறிவு விளங்கிய பிற்பாடு அச்சிற்றறிவு என்ன பயனைச் செய்யும்? எல்லாவற்றையும் விளங்கக் காட்டும் சூரியவொளி வந்த பின்னர் எரிகின்ற விளக்கின் ஒளி போன்றது அச்சிற்றறிவு எனலாம். உயிர் பேரறிவாகிய திருவருள் ஒளியில் நிற்கும்போது சிற்றறிவாகிய சகலம் எப்படித் தலைக்காட்டும்? ஆகவே அது பகல் என்பது நீங்கிய இடம் ஆகிறது. இவ்வாறு திருவருள் ஞானத்தால் உயிர்க்கு அறியாமையும் சிற்றறிவும் நீங்கி விடுதலால் திருவருட்பேறு இரவு பகல் அற்ற இடம் எனக் கூறப்படுவதாயிற்று.

*உண்மை ஊடுருவும் சூரியஒளி போன்றது, அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.*

**திருவருளைச் சேர்தல் என்பதன் பொருள்:**

நமக்கு இனியவராகிய ஒருவர் வேறோர் இடத்தில் இருந்தால், அவர்பால் சேர்வதற்கு நாம் அந்த இடத்திற்கு நடந்தோ வாகனத்திலோ செல்லுதல் வேண்டும். இஃது உடம்பின் செயல் ஆகும். திருவருளைச் சேர்தல் என்பது அப்படியன்று. திருவருள் வேறு எங்கோ, கண் காணாத இடத்தில் இல்லை. அஃது உரியிலேயே உடனாக இருப்பது. அதனைச் சேர்தல் என்பது அதனை அறிதலேயாகும். எனவே இஃது அறிவின் செயலாகிறது.

அறிதல் மூன்று வகையாய் நிகழும். பொதுவாக அறிதல், ஐயமாக அறிதல், தெளிவாக அறிதல் என்பன அவை. திருவருளை அறிதலிலும் இப் படிநிலைகள் நிகழும்.

**ஐய நிலை:**

ஞானாசிரியர் செய்த உபதேசத்தைக் கேட்டுச் சிந்தித்த காலத்தில் ஐம்பொறி முதலிய கருவிகளைத் தனக்கு வேறாகக் காணும் அறிவு ஐயமாக நிகழும். இந்த ஐய நிலையே ஆன்மதரிசனம் ஆகும். அது காலை கருவிகளை நீங்கியும், நீங்காமலும் நிற்கும் நிலையே உளதாகும். கருவிகளை நீங்கித் திருவருளை ஒருவாறு உணர்ந்தும் பின் திருவருளை மறந்து மீண்டும் கருவிகளோடு கூடி உலகத்தை அறிந்தும் இவ்வாறு அங்கும் இங்குமாய் அலமரும் நிலையே உளதாகும். பாசப் பற்று முற்றிலும் அறாத நிலையில் ஏற்படும் தடுமாற்றம் இது. ஊசற் கயிறு முற்றும் அறாதபொழுது ஊசற் பலகை கயிற்றிலும் நில்லாது தரையிலும் வீழாது நிற்பது போன்றது இது என முந்திய அதிகாரத்தில் குறிப்பிட்டோம்.

**தெளிவுணர்வு:**

சிந்தனையின் பயனாய் இந்த ஐய நிலை நீங்கித் தெளிவுணர்வு உண்டாகும். தெளிவுணர்வாவது, பொருட்சார்பும், உயிர்ச் சார்பும் ஆகிய பற்றுக்களையெல்லாம் விடுத்துச் சிவத்தையே தனக்கு உயிராகத் தெளிந்து நிற்றல். இதற்குச் சான்றாக விளங்கும் ஒரு நிகழ்ச்சியைக் கூறுவோம்.

சிவனடியார்க்கு மகேசுரபூசை செய்து வணங்கும் முறைமையினை ஒருவர் மேற்கொண்டிருந்தார். அவரது மனைவியாரும் அதற்கு உறுதுணையாக நின்றார்.

அந்நியமப்படி அவர் ஒரு நாள் தம் வீட்டிற்கு வந்திருந்த அடியார்களை ஒவ்வொருவராக அணுகிப் பாதபூசை செய்தார். அவரது மனைவியார் பக்கத்தில் நின்று பாதம் விளக்க நீர் வார்த்து வந்தார். ஒரு சிவனடியார்க்குப் பாதபூசை செய்யும் முறை வந்தபோது அந்த அம்மையார் அவ்வடியவரை இனங்கண்டு கொண்டார். அவர் முன்னொரு சமயம் அவ்வீட்டில் பணி செய்த வேலையாள். இப்பொழுது அடியவர் கோலத்தில் வந்திருக்கிறார். இந்த எண்ணம் வந்ததும் அந்த அம்மையார் சற்றுத் தயங்கி நின்றார்.

பாத பூசையில் ஈடுபட்டிருந்த கணவர் அவரது மன ஓட்டத்தைத் தெரிந்து கொண்டார். இவ்வாறு எண்ணுவது இயல்புதானே என்று அவர் கொள்ளவில்லை. செய்தது மனைவிதானே என்று பொறுத்துக்கொள்ளவும் இல்லை. சிறிதும் கண்ணோட்டம் இன்றி வாளையெடுத்து அவரது கையை வெட்டினார். பின் பாதபூசையை முடித்து அடுத்த நிகழ்ச்சியாகிய அன்ம் பாலிப்பையும் தாமே நிறைவேற்றினார்.

எப்படிப்பட்ட உறுதி இது! சிவனடிப் பற்றையன்றி மற்றோர் பற்றில்லார் என்பதை அல்லவா இது காட்டுகிறது. மனைவிக்கு இப்படி நேர்ந்துவிட்ட பிறகும் மனங் கலங்காமல் சித்த சலனம் அடையாமல் சிவப் பணியை நடத்தி முடித்த இச்செயல், சிவத்தையன்றி வேறொன்றையும் பொருளாகக்

*விசிறியை அசைக்காமல் காற்று வராது. வியர்வை சிந்தாமல் உயர்வு வராது.*

கொள்ளாத அவரது தெளிவுணர்வைப் புலப் படுத்துவதாகும்.

இவ்வாறு திருவருளை முதலில் பொதுவாகவும், பின்னர் ஐயமாகவும், அதன் பின்னர் தெளிவாகவும் உணர்ந்த உயிர் அத்தெளிவுணர்வால் திருவருளை இறுகப் பற்றிக்கொள்ளும். "திருப்பெருந்துறை இறை தாள் பூண்டேன்; புறம் போகேன்; இனிப்புறம் போகல் ஒட்டேனே" என்று சொல்லும் நிலை இதுவாகும்.

## திருவருளோடு ஒன்றாய் நிற்றல்:

முன்னே உள்ள ஐய நிலையில் உயிர் திருவருளுக்கு வேறாக நிற்கும். வேறாய் உள்ளவரையில் பாசப்பற்று முழுது மாக நீங்குவதில்லை. தெளிய உணர்ந்த இந்நிலையில் உயிர் வேறாய் நில்லாமல் திருவருளோடு ஒன்றாய் நிற்கும். கயிறு முற் றும் அறப்பெற்ற ஊசற்பலகை தரையை அடைவதுபோலத் திருவருளைச் சேர்ந்து விடும். நான் என்னும் தற்போதத்தை இழந்து திருவருளுக்குள் அடங்கி நிற்கும். தன் செய லற்று அனைத்தையும் திருவருட் செயலாக உணரும்.

## உயிர் விளக்கம்:

திருவருள் ஒளியில் மூழ்கி நிற்கும் இந்நிலையில் உயிரைப் பற்றியுள்ள மல இருள் முற்றிலும் நீங்கும். திருவருளும் சிவ னும் கதிரும் கதிரவனும் போல்வர் என்பது நாமறிந்ததே. கதிரவன் காணப்படுவதற்கு முன்னே கதிர்கள் பரவி இருளை நீக்குதல் போலச் சிவனை அடைதற்கு முன்பே திரு வருள் விளக்கம் ஏற்பட்டு மல இருள் நீங்கும் என அறியலாம்.

இதனால், இவ்வதிகாரம் திருவருட் பேற்றினைக் கூறுவது என்பதும், திருவரு ளால் மலமாகிய மாசு நீங்கி உயிர் தூய்மை பெறும் முறையை உணர்த்துவதால் இதன் கண் கூறப்படும் நிலை ஆன்ம சுத்தி என் பதும், அது பற்றியே அப்பொருள்பட இவ்வதி காரத்திற்கு "உயிர் விளக்கம்" எனப் பெயர் இட்டார் ஆசிரியர் என்பதும் அறிதற்குரியன.

## அதிகாரப் பொருள் நிலை:

இவ்வதிகாரத்தின் பொருள் நிலை யைப் பின்வருமாறு தொகுத்து உணரலாம்.

தெளிவுணர்வால் திருவருளை இறு கப் பற்றிய உயிர் அத்திருவருளுக்கு வேறாய் நில்லாமல் அதனோடு ஒன்றாய் நிற்கும். வெயிலில் வந்தவன் குளிர்ந்த மர நிழலைக் கண்டபோது ஓடிச்சென்று அந்நிழலையடைந்து அதனுள் அடங்கி நின்று இன்புறுவதைப் போன்றது இது.

பித்தம் உள்ள நாவிற்கு இனிய பாலும் கசப்பாகத் தோன்றும். பித்தம் நீங்கிய பிறகு அதே நா பாலின் இனிய சுவையை அறியும். அதுபோல ஆணவ மலமாகிய நோய் இருக்கும் வரையில் ஆன்மாவுக்குத் திரு வருள் வேண்டாத பொருளாகத் தோன்றும். மலநோய் தீர்ந்த முத்தி காலத்தில் அவ்வான் மாவுக்குத் திருவருள் இனிய உறவுப்பொரு ளாகத் தோன்றும்.

மலம் நீங்கிய உயிர் தனது உண்மை இயல்பாகிய வியாபக அறிவைப் பெறும். அந்நிலையிலும் திருவருள் விளக் கவே, அதன் வியாபக உணர்வு விளங்கு கிறது. இதனை உணராமல், திருவருளை மறந்து "நானே எல்லாம் அறிகிறேன்" என வும், "என்னால் எல்லாம் செய்தல் கூடும்" எனவும் "நானே பிரம்மம்" எனவும் மயங்கி உணரும். மலம் நீங்கியும், மலவாசனை நீங்காத நிலையில் அதனால் உண்டாகின்ற யான் எனது என்னும் செருக்கினால் நிகழ் வது இது. இப்பேதைமை உணர்வு உயி ருக்கு மாசு ஆகும். அதனை நீக்கித் தெளிவு

பெறுதல் வேண்டும். திருவருள் ஒளியும் ஆணவ மலமாகிய இருளும் ஒரு வகையில் ஒற்றுமை உடையன. எவ்வாறெனில் ஆணவ இருளின் வயப்பட்ட எவரும் தம்மை முழுதும் அறியாது கிடப்பர். அருளின் வயப்பட்டவரும் தம்மை முற்றாக இழந்து நிற்பர். மேலும் ஆணவ இருளில் உள்ளவர்க்கும் உலகம் புலப்படுவதில்லை. அருள் நிலையில் உள்ளவர்க்கும் உலகம் புலப்படுவதில்லை. அ∴தாவது அவர்க்கு உலகம் சிவமாய்த் தோன்றும். மாயா காரியப் பொருளாக அதனை அவர் பார்ப்பதில்லை என்பது கருத்தாகும்.

உலகச் சார்புகளை விடுத்துத் தன்னையே சார்பாக உணர்ந்து ஒழுகும் மெய்யன்பரை இறைவன் தாங்கிக் கொள்வான். தன்னையே விடாது பற்றிநிற்கும் குழந்தையை எடுத்துத் தாய் தன் இடுப்பிலும் தோளிலும் வைத்துச் சுமப்பதுபோலத் தன்னையே புகலாக அடைந்த அவ்வன்பரை இறைவன் எடுத்துச் சுமப்பான். அவர் எச்செயல் செய்யினும் அதனைத் தன் செயலாகக் கொண்டு வினைகள் அவரைச் சாராதவாறு காப்பான்.

பளிங்குத் தூண் காலையிலும் மாலையிலும் பிற பொருள்களின் நிழல்களைத் தன்னிடம் கொண்டிருக்கும். ஆனால், உச்சி வேளையில் அது சூரியவொளி ஒன்றையே முழுமையாகப் பெற்று நிற்கும். அந்நேரத்தில் பிறபொருள்களின் நிழல்களை அது பற்றாது. பகலவன் ஒளியில் மூழ்கி நிற்கும் அப் பளிங்குத் தூண்போல உயிர் பிற உலக உணர்வுகளைப் பற்றாமல் திருவருள் உணர்வு ஒன்றையே பற்றிநிற்குமாயின், மல வாசனை அடியோடு நீங்கும்.

இருளில் நடப்போர், முன்னே வழி காட்டிச் செல்கின்ற தீப்பந்தத்தின் பின்னே செல்வதுபோல, உயிர் எச்செயலைச் செய்யினும் திருவருளை முன்னிட்டுத் தான் அதன் பின்னே நிற்கவேண்டும். திருவருளை முன்னிட்டுச் செய்தலாவது, “நான் செய்கின்றேன்” என்னும் முனைப்புச் சிறிதும் இன்றி, “எல்லாம் உன்னுடைமையே; எல்லாம் உன் அடிமையே; எல்லாம் உன்னுடைய செயலே; நீ செய்விக்க நான் செய்கிறேன்; நான் உன் கருவி மாத்திரமே; எனக்கென்று என்ன செயலிருக்கிறது? நீயே எல்லாம்” என்று உண்மையாக உணர்ந்து செய்தலாகும். இதுவே அருள்வழி நிற்றல் ஆகும்.

கட்டு நிலையில் உயிர் திருவருளுக்கு வேறாய் நின்றது. அப்பொழுது ஆணவ மலமே முன் நிற்க, உயிர் அதன் வழிப்பட்டு நின்றது; நான் ஒரு முதன்மைப் பொருள் என்று கருதியது. தன்முனைப்போடு கூடிய முயற்சிகளைச் செய்து வினைகளை ஈட்டியது; மாயா காரியமாகிய உலகப் பொருள்களை அடையத் துடித்தது.

முத்தி நிலையில் இந்நிலை அடியோடு மாறுகிறது. இப்பொழுது உயிர் திருவருளுக்கு வேறாய் இல்லை. “நானே எல்லாம்” என்ற பேதைமை உணர்வு நீங்கித் “திருவருளே எல்லாம்” என்ற தெளிவுணர்வைப் பெற்றுத் திருவருளோடு ஒன்றாய் நிற்கிறது. திருவருளை முன் நிறுத்தி உயிர் அதன் வழிப்பட்டு நிற்கிறது.

நான் என்ற உணர்வு மாய்ந்துபோன இந்நிலையில் ஆணவ மலத்திற்கு என்ன வேலை! அ∴து உயிரிடத்தில் இருந்தும் இல்லையாகிறது.

மனம் மொழி மெய்களால் யாதொன்று செய்யவரினும் அச்செயலைத் தன்செயலாக நினையாது திருவருட் செயலாக உணர்வதால் வினையும் இல்லையாகிறது.

நெருப்பைக் கரையான் அரிக்க முடியுமா? அதுபோல், அருளைச் சார்ந்து அருளாய் நின்ற உயிரை மாயையின் காரியமாகிய

*ஆசை புத்தியை மறைக்கும்போது அறிவு வேலைசெய்யாமல் போய்விடுகிறது.*

தனு கரண புவன போகங்கள் மயக்கி ஆசைக் குழியில் வீழ்த்த முடியுமா? ஆகவே மாயையும் தோல்வியடைந்து நீங்குகிறது.

இவ்வாறு மலம் மாயை கன்மம் ஆகிய மாசுபடிந்திருந்த உயிர் திருவருள் ஞானத்தைப் பெற்று அம்மாசுகள் நீங்கித் தூய்மையடைந்து விளங்கும் மாட்சிமையை இவ்வதிகாரத்தில் காணுகின்றோம்.

(தொடரும்...

## செல்வச் சந்நிதிக் கந்தனை
## சதா நினை நன் நெஞ்சே!

செல்வச் சந்நிதிக் கந்தனை சங்கவி மைந்தனை
சதா நினை நன்நெஞ்சே - செல்வச்சந்நிதி
செந்நெல் வயல்சூழும் தென்கதிரை யூரான்
செந்திலாண்டவன் சிவகுருபரன் - செல்வச்சந்நிதி

மன்னு தொண்டை மாநகர் தனில்வாழும் எங்கள்
அன்னதானக் கந்தன் அபயமளிப்பான் என்றும்
முன்வினை முழுவதும் தன்னால் அகன்றிடவே
வண்ண மயிலேறி வந்து ரட்சிப்பான் - செல்வச்சந்நிதி

செல்வச் சந்நிதியானை சிந்தனை செய்திட
வந்தவினைகள் சிந்திச் சிதறிடுமே
தினம்சொல்ல வாய் தித்திக்கும் வல்லவேல் முருகனின்
எல்லையில்லாக் கருணை என்னவென்றியம்புவதோ - செல்வச்சந்நிதி

தஞ்சமடைந் தோரைத் தாங்கும் குருபரன்
அஞ்சல் என்று அபயமளிக்கும் தயாபரன்
மிஞ்சிவரும் பகைகளைப் பஞ்சுபட உதைப்பான்
வஞ்சமிலார் தூயநெஞ்சினிலே இருப்பான் - செல்வச்சந்நிதி

வரந்தருவாய் முருகா - என்
வாழ்வெலாம் உனை வந்தித்து வாழ்த்திட
எத்தனைபிறவி நான் எடுத்தலைந்தாலும்
உன் திருநாமமே பாடிடவேண்டும் - வரம் தருவாய்..

உன் அடியவரோடு கூட்டவேண்டும்
உனை என்றும் மறவாமை வேண்டும்
கண்குளிர உனைக் காணவேண்டும்
கருணா சமுத்திரக் கலியுகவரதா - வரந்தருவாய்.

-திருமதி நாகேஸ்வரி கந்தசாமி-

*தவறுகளை ஒப்புக்கொள்ள மறுப்பதைவிட வேறு அவமானமில்லை.*

# பங்குனி உத்தரத் திருக்கலியாண விழா -சிவசக்தி சங்கமம்-

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

சிவசக்தி தத்துவம், உலகியல் நோக்கையும் ஆன்மீக நோக்கையும் கொண்டுள்ள மகா தத்துவம் ஆகும். இவ்வையத்துள் வாழும் நெறி அறிந்து, வாழ்வாங்கு வாழவும்; அதன் பயனாகத் தெய்வநிலைக்கு உயர்வு பெறவும்; மனிதரை வழிப்படுத்துகின்ற சைவ நெறியின் அடிநாதமாக, சிவசக்தி இணைப்புத் தத்துவம் விளங்குகின்றது.



சிவமும் சக்தியும் இணைந்துள்ளமை எனும் தத்துவம்; உலக இயக்கத்தின் தத்துவம். சிவமும் சக்தியும் முறையே இருப்பு நிலையும், இயங்கு நிலையும் ஆக உள்ளமை நோக்கற்பாலது. இறைவனின் அர்த்தநாரீஸ்வர முகூர்த்தமும், இத் தத்துவத்தையே விளக்கு கிறது.

சிவசக்தி வழிபாடு, மிகத் தொன்மை யான காலத்திலிருந்து உலகில் இடம்பெற்று வருகிறது. சிவலிங்க தத்துவம்; சிவமும் சக்தியும் இணைந்துள்ள சிவசக்தி தத்துவமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. பாரத நாட்டின் சிந்து நதிப் பள்ளத்தாக்கில், புதைபொருள் அகழ் வாராய்ச்சிகள்மூலம் சிவலிங்கங்கள் கண்டெடுக் கப்பட்டன. சிவலிங்கம், சிவத்தின் அருவுருவ வடிவம் ஆகும். இலிங்கம், சிவரூபத்தையும்; அதன் அடிப்பகுதியான பீடம், சத்தியையும் குறிப்பனவாக உள்ளன என விளக்கம் தரப் பட்டுள்ளது.

வரலாற்றுக் காலத்திலும், அதற்கு முற்பட்ட புராண, இதிகாச காலப் பகுதிகளிலும், இலங்கையில் சிவநெறி தழைத்தோங்கியிருந்தமைக்குப் பல ஆதாரங்களும்; அகழ்வாராய்ச்சி மூலம் கிடைக்கப்பெற்ற சான்றுகளும் உள்ளன. புராதன காலத்தில், இலங்கை நாட்டை ஆட்சி செய்த இராவணேஸ்வரன் தலைசிறந்த சிவபக்தன். "இராவணன் மேலது நீறு" என்று திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகத்தில்; இராவணன் பற்றிய அருட்குறிப்பு இடம்பெற்றிருப்பது, இராவணேஸ்வரனின் சிவபக்தியை ஏற்றிப்போற்றுவதாக உள்ளது. "சிவபூமி" என்று, திருமூலரால் இலங்கை சிறப்பிக்கப்பெற்றமை; இலங்கையில் புராதன காலத்தில், சிவநெறி தழைத்தோங்கியமைக்குச் சான்றாக அமைகின்றது.

மிகத் தொன்மையான வரலாற்றுக் காலத்திலேயே இலங்கையின் நான்கு திசைகளிலும் ஈஸ்வரங்கள் எனப் புகழ்பெற்ற சிவஸ்தலங்கள் இருந்தமையும்; அவற்றுள்

ஒன்றைத் தவிர, ஏனைய ஈச்சரங்கள் இன்றும் காணப்படுதலும்; இலங்கையில் சிவநெறி வளர்ச்சியின் செழுமையைக் காட்டுவனவாக அமைகின்றன. இவை அட்ட ஈச்சரங்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றுள் திருக் கேதீச்சரத்தின் இறைவன்மீது, திருஞானசம் பந்தரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் தேவாரப் பதிகங்கள் அருளிப்பாடியுள்ளனர். திருக் கோணேச்சரப் பெருமானின்மீது; திருஞான சம்பந்தர் தேவாரப் பதிகம் பாடியுள்ளார். திருக்கோணேஸ்வரம் தெட்சண கைலாயம் என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றுள்ளது.

இலங்கையின் வடபால் அமைந்துள்ள நகுலேச்சரம் (கீரிமலை); மேற்கில் முன்னேச் சரம்; வடமேற்கில் திருக்கேதீச்சரம்; கிழக்கே திருக்கோணேச்சரம் மற்றும் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரம்; கொக்கட்டிச்சோலை தான் தோன்றியீச்சரம்; முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம்; சாவகச்சேரி வாரிவனநாதரீச்சரம்; தென்னிலங் கையில் காலிநகருக்கு அணித்தாக சந்திர சேகரரீச்சரம்; கொழும்பு இரத்மலானையில் தொண்டீஸ்வரம்; இராஜராஜ சோழ மன்னன் நிறுவிய பொலநறுவைச் சிவன் கோயில்கள் என்பன இலங்கையின் புராதன சிவாலயங் கள் ஆகும்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"; "திருக்கோயில் இல்லாத திரு இல் ஊர்"; அத்தகைய ஊர், மனிதர்கள் வாழத்தகுந்த ஊர் அல்ல; விலங்குகள் வாழும் அடர்ந்த காடு என்கிறார் அப்பரடிகள். எங்கள் நாட்டிலும் சைவ மக்கள் வாழுகின்ற ஊர்கள் தோறும் இலங்கை முழுவதும் பரவ லாகவும் கோயில்கள் உள்ளன. சிவன், அம் பாள், விநாயகர், முருகன், விஷ்ணு ஆகிய எல்லாத் தெய்வங்களுக்கும், கோயில்கள் ஆகமவிதிப்படி அமைக்கப்பெற்று; நித்திய, நைமித்திய பூசைகள், வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இவற்றைத் தவிர, வைரவர், காளி, வீரபத்திரர், ஐயனார், முனியப்பர், நாகதம்பிரான் ஆகிய கிராமியத் தெய்வ வழிபாடுகளும்; பூசை பொங்கல், மடை பரவு தல், என்பனவும் பக்திப்பரவசம், ஆட்டம், என்பவற்றுடன் கிராமங்கள்தோறும் நடை பெற்று வருகின்றன.

இவ்வாறு, பல தெய்வ வழிபாடுகள் ஆகமமுறைப்படியும்; ஆகம முறைப்படியல் லாமலும் மரபுரீதியாக; நடைபெற்று வரு கின்றபோதிலும்; "யாதொரு தெய்வங் கொண் டீர், அத்தெய்வமாகியாங்கே, மாதொருபாக னார் தாம் வருவார்" எனும் சிவஞான சித்தி யார் பாடலடிக்கூற்றின்படி, மாதொருபாகன் எனச் சிறப்பாக அழைக்கப்படுகின்ற, சிவ பெருமான்தான்; எந்தத் தெய்வத்தை, எந்த வடிவத்தில், எந்தப் பெயரிட்டு அன்போடும், பக்திபூர்வமாகவும் வழிபட்டாலும் அந்தப் பெயருடன் அதே வடிவத்தில் வந்து அநுக் கிரகம் செய்வார் என்ற உண்மைநிலையை, இலங்கை வாழ் சைவ மக்கள் நன்கு உணர்ந் திருக்கின்றனர். அறுவகைச் சமயங்களையும் (சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம்) சிவசமயமாகவும்; எல் லாத் தெய்வங்களையும் சிவபரம்பொருளாக வுமே காணும், சைவநெறி இங்கு நன்கு வேரூன்றியிருக்கிறது. "ஏகன் அநேகன் இறை வனடி போற்றி" எனும், சிவபுராணப் பாடலடி மூலம்; இவ்வுண்மையை, மாணிக்கவாசக சுவாமிகள் உணர்த்தியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

சிவபெருமானின் அருள் வடிவங்களே; அனைத்துத் தெய்வ வடிவங்களும் என்பதை உணர்ந்து; சிவநெறியாம் சைவ நெறியைக் கடைப்பிடிப்பது, எமது சமய மரபின் தனித் துவம் ஆகும். அந்த வகையில், நம் நாட்டில் உள்ள எல்லா ஆலயங்களிலும் பிள்ளை யார், முருகன், அம்பாள்- என்ற பேதமின்றி,

*சிறிய புண்களையும் ஏழை எளியவர்களையும் ஒருபோதும் அலட்சியம் செய்யாதே.*

சிவனுக்குரிய விரதங்கள், விழாக்கள், உற்சவங்கள் என்பன நடைபெறுகின்றன. சிவன் கோயில்களில், எல்லாத் தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பூசை, ஆராதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சைவ மக்கள் நம் நாட்டில், ஆலய வழிபாடு, மகோற்சவங்கள், விழாக்கள் என்பவற்றை முன்னின்று, ஒழுங்குசெய்து நடத்துதல்; விரதங்கள் அநுட்டித்தல், ஆகியவற்றைக் கைக்கொள்கின்றனர். இவற்றால், சைவ ஆன்மீக, சீலங்கள் வாழ்வில் மேற்கொள்ள வாய்ப்பேற்படுகின்றது. இவற்றின் பயனாக, மனத்தூய்மை, சொல்தூய்மை, செயல்தூய்மை என்பன மனிதரில் ஏற்படுகின்றன. ஒழுக்க விழுமியங்கள், வாழ்க்கையில் நடைமுறையில் கடைப்பிடிக்க வழி பிறக்கின்றது. இறை நம்பிக்கை, சமூகநல உணர்வு, மனிதநேயம், ஆன்மநேயம், கலை கலாசாரப் பண்பாட்டுணர்வு என்பன உறுதிபெறுகின்றன.

ஓர் ஆண்டில் உள்ள பன்னிரண்டு மாதங்களிலும் பரவலாகப் பண்டிகைகள், விரதங்கள், விழாக்கள், உற்சவங்கள் என விசேட தினங்கள், வந்துகொண்டேயிருக்கின்றன. இவை சமய, சமூக, ஆன்மீக, கலாசார நிகழ்வுகள் ஆகும். இவை வாழ்க்கைக்கு மகிழ்ச்சியையும், சமூக உணர்வையும் வழங்குவதுடன் கலாச்சாரம், சமயப் பண்பாடு, பாரம்பரியம் பேணப்படவேண்டியதன் முக்கியத்துவத்தையும்; அடுத்த பரம்பரையினருக்கு உணர்த்தி அவற்றைப் பரம்பரைதோறும் தொடர்வதற்கு அவர்களை வழிப்படுத்துவதாகவும் அமைகின்றன.

பூமி மீனராசியில் சஞ்சரிக்கும் காலப் பகுதி பங்குனி மாதம். சந்திரன் கன்னி ராசியில், உத்தர நட்சத்திரத்துடன் சேர்ந்து பங்குனி மாதத்தில் வரும் சுபநாள், பங்குனி உத்தரத் திருநாள். சுபகாரியங்கள் செய்வதற்கு ஏற்ற மங்களகரமான நாள். இப்புனித நன்னாளிலேயே; பார்வதி பரமேஸ்வரன் திருமணம் நிகழ்ந்ததாகச் சைவர்களால் விரதமனுட்டித்து பெருவிழாக் கொண்டாடப்படுகிறது. உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் தோன்றுவதற்கு, அடிகோலிய புனிதநாள் ஆகவும் பங்குனி உத்தரத் திருநாள், முக்கியத்துவம் பெறுகிறது.

இவ்விரதம் திருமண விரதம் எனவும், கலியாணசுந்தர விரதம் எனவும் போற்றப்படுகிறது. விரதத்தை முறையாக அநுட்டிப்பவர்கள்; திருமணத் தடை, குழந்தைப் பேறின்மை, குடும்பத்தில் கணவன்- மனைவிக்கிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகள், பிரிவினைகள் என்பன யாவும் முற்றிலுமாக நீக்கப்பட்டு; சகல செல்வங்களும், ஐசுவரியங்களும் பெற்று இனிது வாழ்வர். விரதிகள், அத்தினத்தில் பகல் முழுவதும் அன்ன ஆகாரங்கள் என்பவற்றைத் தவிர்த்து, சூரிய அஸ்தமனத்தின் பின்னர், இரவு முழுமதி தோன்றியதும் பரமான்னமும் பழமும் உட்கொண்டு விரதத்தை நிறைவு செய்வர்.

சைவ சித்தாந்தம், கடவுளுக்குச் சொரூபலக்கணம், தடத்த லக்கணம் என இரண்டு நிலைகள் உள்ளமை பற்றிக் குறிப்பிடுகிறது. சொரூப நிலையில் கடவுளுக்குக் குணம், குறி, உருவம், நாமம் எதுவும் இல்லை. மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களுக்கும் எட்டாததும், அவற்றினால் அறியப்படாததுமான நிலையில்; கடவுள், "பரம்பொருள்" எனவும் "சிவம்" எனவும் அழைக்கப்படுகிறார்.

சொரூப நிலையில் சிவம் அளப்பருங் கருணையினால் ஆன்மாக்களுக்கு, அவற்றின் ஈடேற்றத்திற்குத் திருவருள் பாலிக்க நினைந்து, "பால்நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப் பரிந்து; தமது அளப்பருங் கருணையினால், பல படிகள் கீழிறங்கிவந்து; உருவம், நாமம் தாங்கி குணம், குறிகளுடன்,

பல நிலைகளிலுள்ள கடவுளரை, அதிட்டித்து நின்று; படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந் தொழில்களைப் புரிகின்றது. இந்நிலையைக் கடவுளின் தடத்தலக்கணம் என்று சைவ சித்தாந்தம் கூறும். உலகியலில் மூழ்கி இன்பதுன்பங்களை அனுபவிக்கின்ற மனிதர்கள்; நேரடியாகக் கடவுளைத் தரிசித்து, இஷ்ட சித்திகளை அடைவதற்கும்; பிறப்பு-இறப்புத் தொடரில் சிக்கி, வாழ்க்கை எனும் துன்ப சாகரத்தில் மூழ்கித் தவிக்காமல், அதிலிருந்து விடுதலைபெற்று, ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கும், இத்தகைய பக்திநெறி பேருதவியாக உள்ளது.

"முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப் பத்திநெறியறிவித்துப் பழ வினைகள் பாறும் வண்ணம்; சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என மாணிக்கவாசகர் இறைவனைப் போற்றுகிறார்.

"இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது, கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்" என்கிறார் நாவலர் பெருமான்.

இறைவனின் சொருப நிலையின் முக்கியத்துவத்தினை மனிதப் பிறவியெடுத்த ஒவ்வொருவரும் உணர்ந்து; தமது பிறவியின் நோக்கத்தை, நிறைவு செய்து பிறவிப் பயனை அடையவேண்டும். "இப்பிறவி தப்பினால்; எப்பிறவி வாய்க்குமோ, யாதுமறியோம்" இவ்வாறு தமது ஏக்கத்தை வெளிப்படுத்துகிறார் ஒரு அருளாளர். இக்கூற்று நம் எல்லோரையும் நோக்கியே கூறப்பட்டது என்பதை உணர்ந்து, விரைந்து செயற்படுவோமாக.

நம் எல்லோருக்கும் தந்தையும் தாயுமாக விளங்குபவர்கள் பரமேஸ்வரனும் பார்வதியும் ஆவர். சொல்லும் பொருளும்; கனியும் சுவையும்; பண்ணும் பரதமும்; மணியும் ஒலியும்போல் சிவனும் சக்தியும் இணைபிரியாது உள்ளனர். பங்குனி உத்தரத்தன்று நடைபெறும் திருக்கல்யாணம் இப்பேருண்மையையே உணர்த்துகின்றது.

"சக்திபின்னமிலான் எங்கள் பிரான்"

சிவம் இன்றேல் சக்தியில்லை; சக்தியின்றேல் சிவம் இல்லை. இவை இரண்டும் இணைந்தபடி இல்லையேல் உலகம் மற்றும் அண்ட சராசரங்களின் இயக்கமே இல்லை என்கின்ற உயர் தத்துவத்தை பங்குனி உத்தரத் திருக்கலியாண விழா எடுத்துக் காட்டுகிறது.

என்றுமே இணைபிரியாத சிவனையும், சக்தியையும் மனித நிலைக்குக் கொணர்ந்து, அவர்களைத் திருமுழுக்கு ஆட்டி, பட்டுப் பீதாம்பரங்கள் தரித்து; ஆபரணங்களால் அழகு செய்து, மணவறையில் அமர்த்தி; மங்கள வாத்தியங்கள் ஒலிக்க, வேத பாராயணம் அந்தணர்கள் இசைக்க; ஓமம் வளர்த்து, கோத்திரங்கள் கூறி, கூறை உடுத்தி; உபசாரங்கள் வழங்கி, சபையோர் மற்றும் தேவர்கள், அக்கினி முதலியோர் சாட்சியாக தாலி அணிவித்து, மாலைகள் மாற்றி, மங்கள வாழ்த்துக்கூறி, அம்மி மிதித்து அருந்ததி காட்டி, அவர்களைத் திருமணக் கோலத்தில் கண்குளிரக்கண்டு, களித்து, திருவருள் பெற்று அடியார்கள் அகம் மகிழ்கின்றனர்; ஆனந்தக் கூத்தாடி இன்புறுகின்றனர். இந்தத் திவ்விய அருட்காட்சியைக் கண்ணாரக் காண்பதற்கு "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என முற்றுந்துறந்த அப்பரடிகளின் அருள்வாக்கு நம் மனத்தில் கொள்ளத்தக்கது. கண்கள் இரண்டு நமக்கு இறைவனால் அளிக்கப்பட்டது. "அவன் கழல் கண்டு களிப்பதற்கே" என்கிறார் மாணிக்கவாசகப் பெருமான். ஆனால் மனிதர்களில் அநேகம்பேர், தம் கண்களைச் சிற்றின்ப நுகர்ச்சிக்கே

*நம்பிக்கையைப் பிறர் தரமுடியாது. அது உள்ளத்திலேயே உற்பத்தியாக வேண்டும்.*

பெரிதும் பயன்படுத்துகின்றனர். அதன் விளைவாக இறுதியில் கிடைக்கப்பெறுவது; துன்பம், கவலை, அமைதியின்மை மற்றும் தீராத உளப்பிணிகள், உடல்நோய்கள் ஆகும்.

"இன்பம் இன்பம் இன்பம்; இன்பத்திற்கோரெல்லை காணில்
துன்பம் துன்பம் துன்பம்" -மகாகவி பாரதியார்.

சிற்றின்பங்கள் என்று கூறப்படுகின்ற, உலகியல் சார் இன்பங்கள் யாவும் துன்பங் களில் போய் முடிகின்றன. பேரின்பம் நிலை யான இன்பம்; ஆன்மீகம் சார்ந்தது. இதுவே மகாகவி பாரதியாரின் மேற்படி பாடலடிகள் உணர்த்தும் உண்மை. எனவே, நாம் எமது கண்கள் நமக்குத் தரப்பட்டதன் நோக்கத்தை உணர்ந்து, அதற்கேற்ப அவற்றைப் பயன் படுத்த வேண்டும். "நல்லாரைக் காண்பதுவும் நன்று"; "தீயாரைக் காண்பதுவும் தீது" என் னும் ஒளவையாரின் நல்வாக்கினைக் கேட்டு ஒழுகுபவர்களுக்கு ஒரு பொல்லாப்பும் இல்லை. கண்கள்; நல்லாரை, நல்லனவற்றை, நன்மை பயப்பனவற்றை மட்டும் காண்பதற்குப் பயன் படுத்தும்போது இன்பமும்; ஆன்மீகம் சார்ந்த வற்றைக் காண்பதற்குக் கருவியாக விளங் கும்போது பேரின்பமும் பெரும்பேறும் கிடைக் கப்பெறுகின்றனர். அந்தவகையில் கண்கள் ஒளிமிகுந்த கண்களும் ஆகலாம். "முகத் திரண்டு புண்களும் ஆகலாம்". "ஆக்கமும் கேடும்" கண்களால் வருவதால், கண்களின் நலம் காத்து, ஓம்பப்படவேண்டியது கண்ணு டையார் கடமையாகும்.

"வேண்டுதல் வேண்டாமை இலாத சிவன் பார்வதி சமேதரருக்குத் திருக்கலி யாணம் செய்து, அழகு பார்க்கின்றனர் அடி யார்கள். திருவூஞ்சலில் அமர்த்தி ஊஞ்சல் பாட்டுக்கள் இசைத்து, ஆட்டுகின்றனர். "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே" என் பதற்கிணங்க, ஆண்டவன் அடியவர்களை ஆட்டுகின்றான்; அடியவர்கள் ஆடுகிறார்கள்" என்பதே உண்மை நிலையாகும். என்றுமே துயிலாத அம்மையையும் அப்பனையும் துயில்கொள்ளவேண்டி பள்ளியறையில் சேர்க் கின்றனர். மறுநாள் அதிகாலையில் திருப் பள்ளியெழுச்சி பாடி, தம்பதியினரைத் துயில் எழுப்புகிறார்கள். திருமஞ்சனம் செய்து மகிழ கின்றனர். இவையனைத்துமே தம் குழந்தை களின் அறியாப்பருவ விளையாட்டுக்கள் என்பதை மாதா, பிதா நன்கு அறிவார்கள். எனினும் தம் அன்புக் குழந்தைகளின் பாசத் திற்கும், நேசத்திற்கும் கட்டுண்டவர்களாக அவர்களின் விருப்பங்களுக்கு இசைந்து கொடுத்து, இத்திருவிளையாட்டுக்களை நடத்துகின்றனர். "அலகிலா விளையாட்டுடை யோன்" சிவன் என ஆன்மிகர்கள் கூறுவர். இவற்றினால், உலக மாந்தர்கள் உலப்பிலா ஆனந்தம் பெற்று வாழ்வில், நிறைவும் பொலி வும் அடையப் பெறுகிறார்கள். "பக்தி வலை யில் படுபவன் சிவன்" எனப் பக்தியின் உயர் சிறப்பை உரைத்துள்ளனர் ஆன்மீகப் பெரி யோர்கள்.

உலக வாழ்க்கை சிறப்பாக விளங்கு வதற்கு இன்றியமையாத பாடங்களை, இத் தகைய செயல்கள், திருவிளையாடல்கள், ஆன்மீக அனுபவங்கள்மூலம் மனிதர்கள் கற்றுக்கொள்கிறார்கள் என்பதால்; சிவனும் சக்தியும் இவ்விளையாட்டுக்களில் தாமும் உவப்புடன் பங்கேற்று; உபசாரங்களை ஏற்று அடியார்களுக்குத் திருவருள் பாலிக்கின்றனர். இவையனைத்தும் பாவனையாக நிகழ்த்தப் பட்டாலும், வாழ்வியல் சிறக்க; வழிவகுக்கும் விழுமியக் கல்வியாகிவிடுகின்றன. சிவபெரு மானே உலகின் முதல் பேராசான். திருக் கைலாய மலையிலே கல்லால மரத்தின்கீழ், தெட்சணாமூர்த்தியாக அமர்ந்து சனகர் முதலிய நால்வருக்கு மோனத்தினால் சின் முத்திரை காட்டி ஞானத்தினை உபதேசித்து

கற்பித்தல் கற்றல் முறையிலும், உள்ளடக்கத்திலும் நல்வழி காட்டிய பேராசிரியர் சிவபெருமானே ஆவார்.

இத்தலைமைப் பேராசான் ஆகிய சர்வேஸ்வரனை நோக்கி, உமையவள், "போகமும் யோகமும்; எதிரும் புதிருமாக இல்லாமல், ஒன்றிய நிலையில் இருப்பது எப்படி?" என்று வினாவினாள். அதற்கு, "உலகங்கள் யாவும் படைத்தவனாகிய என்னைப் பின்பற்றி, நான் காட்டிய பாதையில், நடக்கின்றன. அஞ்ஞானத்தினால் பீடிக்கப்பட்டுள்ள மக்களுக்கு யோக நிலையையும், போக நிலையையும் கற்பிக்க நானே, அவற்றை முன்மாதிரியாகச் செய்துகாட்ட வேண்டியுள்ளது. இவர்கள் போகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள, நான் முன்மாதிரியாக உன்னை மணந்து, போகியாகக் காட்சியளிக்கிறேன். யோக சித்திபெற்று, மெய்ஞ்ஞான நிட்டைகூடி, முத்தியை மக்கள் பெற்றுக்கொள்ள, யோகியாகவும் நடந்து காட்டுகிறேன்" என்றார் ஈசன்.

அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பது தெளிவு. பார்வதி பரமேஸ்வரன் ஆக பங்குனி உத்தரத்தன்று போக நாடகம் ஆடுவது மாந்தர்களுக்கு, போக ஞானத்தை ஊட்டி வாழ்வியல் நெறிமுறைகளைக் கற்பிப்பதை, நோக்கமாகக்கொண்டதாகும். அதே வேளை, யோக நாடகமாக ஆன்மீக ரீதியாகக் கொள்ளலாம். போகமும் யோகமும் எதிரும் புதிருமானவையல்ல. உலகியலும் ஆன்மீகமும் ஒன்றுக்கொன்று எதிரானவையல்ல; முரணானவையுமல்ல. இரண்டும் இணைந்தவை; இணையவும் வேண்டியன; இணையக் கூடியவை. அப்பொழுதுதான், மனிதப்பிறவி வாய்த்ததன் நோக்கத்தையும் பயனையும் அடைய முடியும். ஈசன் இரண்டிலும் இருக்கிறான், இரண்டாகவும் ஒன்றாகவும் இருக்கிறான் என்னும் உண்மையை உணர்த்துவதாக உள்ளது; இறைவன், இறைவி பங்கேற்கும், பங்குனி உத்தரத் திருக்கலியாண விழா மற்றும் சிவசக்தி சங்கமம்.

### முருகா நீயே கதி என்று வணங்குவோம்

அள்ள அள்ளக் குறையாத இன்ப ஊற்று
அதுதானே செல்வச்சந்நிதியில் நிறைந்திருக்கு
உள்ளமது முருகனிடத்து உவகைகொண்டு
உணர்வு பொங்கப் பாடுகிறோம் கவிகள் கொண்டு
வெள்ளை மனத்தோடு நின்று வேல் முருகா என்று
வேண்டி வரம் பெறுவோமே தியானித்து நின்று
கள்ளமின்றிக் கபடமின்றி அவனடியில் சென்று
காத்திடையா கார்த்திகேயா நீயே கதி என்று.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆகஸ்ட் 06 | ஆடி | 21 | ஞாயிறு | பட்டினத்தடிகள் |
| ஆகஸ்ட் 31 | ஆவணி | 15 | வியாழன் | குங்கிலியக்கலயர் |
| செப்டெம் 16 | ஆவணி | 31 | சனி | நீலகண்ட சிவாச்சாரியார் |
| செப்டெம் 22 | புரட்டாதி | 06 | வெள்ளி | சங்கரபண்டிதர் |

நம்பிக்கை எண்ணற்ற எதிரிகளையும் வென்றுவிடும்.

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –


தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 06

## கடமையும் அதன் பரிமாணங்களும்

### 01. ஒற்றைப் பரிமாணச் சிந்தனை.

அர்ச்சுனனது வினாவுக்குக் கிருஷ்ண பரமாத்மாவின் பதில் பல்வேறு மட்டங்களில் இருந்து கிடைக்கின்றது. அந்தப் பதிலில் சமூக, தனியாள், பிரபஞ்ச, ஆன்மிக மட்டங்களில் இருப்பதை அவதானிக்கலாம். எமது உயிர் வாழ்க்கையின் ஆழங்களில் இருந்து எமது பிரச்சினைகள் எழுகின்றன. ஒரே பிரச்சினையைப் பல்வேறு வகையான வழிகளின்மூலம் ஆராய வேண்டி உள்ளது. எந்தப் பிரச்சினையையும் எமது வாழ்க்கையின் ஒரு பக்கத்துக்கு மட்டும் உரியது அன்று. அது ஒரு நோய். உடல் மட்டத்தில் மட்டுமன்றி பல்வேறு மட்டங்களில் தனது மூலத்தைக் கொண்டிருப்பதை ஒத்ததாகும். ஒரு நிகழ்ச்சி மிகவும் சாதாரணமாகக் கூட இருக்கலாம். அப்படி இருந்த போதிலும், ஆன்மிக நூல்களுக்கு விளக்கஉரை செய்பவர்களும், தத்துவஇயல் மாணவர்களும் ஒரு சூழ்நிலையின் சாத்தியமான எல்லா அம்சங்களையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.



ஒவ்வொரு சிறிய நிகழ்ச்சியும் ஒரு பிரபஞ்ச நிகழ்ச்சியே ஆகும். அது பொதுவான பார்வையில் எந்தவிதமான அர்த்தமும் இல்லாததாக இருக்கலாம். ஆனால், ஒரு விடயம் வெளித் தோற்றத்தில் இருப்பதுபோல அப்படித் தேவையற்றது அன்று. ஒவ்வொரு நிகழ்ச்சியின் நிகழ்விலும் பிரபஞ்சம் விழிப்புடனேயே இருக்கின்றது. அதனாலேதான் இந்த உலகத்தில் எதுவும் இரகசியமாக இல்லை என்று எமக்குக் கூறுகின்றனர். எல்லாம் எல்லோருக்கும் பொதுவானது ஆகவும், திறந்து வைக்கப்பட்டது ஆகவுமே உள்ளன.

இதனால் ஒரு நிகழ்ச்சியைப் பல்வேறு கோணங்களில் மதிப்பிடவேண்டி உள்ளது. ஆனால், பெரும்பாலும் நாம் விடயங்களை ஒரு பக்க நோக்கிலேயே ஆராய்கின்றோம்.

*எத்தனை படிகள் என்று மலைக்காதீர்கள். எல்லாப் படிகளும் கடக்கக்கூடியவையே.*

உதாரணமாக, ஒரு விடயத்தை அரசியல் கண்ணோட்டத்தில் மட்டும் பார்த்து அதன் அடிப்படையிலேயே அதனை விளக்குகின்றோம். அவ்வாறு விளக்கும்போது அவ்விடயத்தில் வேறு ஏதும் சம்பந்தப்படவில்லை என்பதுபோல நடந்துகொள்ளுகின்றோம். இவ்வாறே உளவியல் மாணவர்களும், சமூக இயல் மாணவர்களும் தத்தமது நோக்கில் இருந்து மட்டுமே எதனையும் சிந்திக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு துறையைச் சேர்ந்தவர்களும் தத்தமது நோக்கில் மட்டும் இருந்து ஒற்றைப் பரிமாணமாகவே எதனையும் சிந்திக்கின்றனர்.

## 02. அகமும் புறமும் கடவுளின் சங்கற்பமும்.

புறவயமான ஒரு பிரபஞ்சம் உண்டு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எமக்குப் புறம்பாகவே இந்த உலகம் தோன்றுகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியின் புறவயத் தன்மையையும் அது உள்ளவாறே எமது கருத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், புறவயமாகத் தோன்றுகின்ற அந்நிகழ்ச்சியில் அகவயமான நாமும் பங்குகொள்ளுகின்றோம். புறவயமான நிகழ்ச்சியில் அகவயமான நாம் பங்குகொள்ளும் அளவுக்கு அந்த நிகழ்ச்சியிலும் அகவயமான ஓர் அம்சம் இடம்பெறுகின்றது. எனவே, எந்த நிகழ்ச்சியும் முற்றும் தனித்துப் புறவயமானது என்றோ அகவயமானது என்றோ கூற முடியாது. எந்த ஒரு நிகழ்ச்சி நடக்கும்போதும் அதில் அகவயமான தன்மையும் புறவயமான தன்மையும் கலந்தே இருக்கும். மேலும், எந்த நிகழ்ச்சியிலும் புலன் கடந்த ஓர் அர்த்தமும் இயல்பாக இணைந்தே இருக்கும். உலகமும் தனிப்பட்டவர்களும் மட்டும் தமக்கிடையே பிரதிச் செயல்களில் ஈடுபடுவதில்லை. அகப்புற அம்சங்கள் தமக்கு இடையே அவ்வாறு பிரதிச் செயலை மேற்கொள்ளுவதற்குத் தேவையான இறுதித் தீர்மானம் எடுக்கும் ஒரு காரணியும் அதிலே உண்டு. இந்த எல்லை கடந்த அம்சத்தை நாம் கடவுளின் சங்கற்பம் என்று அழைக்கின்றோம். அதற்கு ஒரு சமூகப் பரிமாணமும் உண்டு. அவ்வாறான ஒரு சமூகப் பரிமாணம் அதில் இருப்பதற்குக் காரணம் ஒரு நிகழ்ச்சி ஒரு சமூகச் சூழ்நிலையில் நிகழ்கிறது என்பதே ஆகும்.

## 03. சமூகப் பரிமாணம்.

சமூகம் என்ற வார்த்தையினால் ஒரு மனிதக் குழுவை மட்டும் நாம் கருதவேண்டிய அவசியம் இல்லை. சமூகம் மனிதராகவோ வேறு எவையாகவோ இருந்தபோதும், பொதுவாக ஓர் ஒழுங்கில் அமைக்கப்பட்ட ஓர் அமைப்பு ஆகும். அந்த அமைப்பு எதுவாக இருந்தாலும், ஒழுங்கமைக்கப்பட்ட சூழ்நிலையில் ஒரு நிகழ்ச்சி நடக்கும்போது, அந்நிகழ்ச்சி அவ்வமைப்பில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். அந்த அமைப்பு ஒரு குடும்பமாகவோ ஒரு ஸ்தாபனமாகவோ எல்லா மனிதரையும் அடக்கியதாகவோ அமையலாம். அச்சமூக அமைப்பில் வேறும் பல அம்சங்கள் தொடர்புபடுகின்றன. அவற்றை எல்லாம் தொடர்ந்து வரும் அடுத்த அத்தியாயங்களில் தெளிவாக்கப்படும். ஒரு சீடனுக்கு உதாரணமான அர்ச்சுனனுக்கு மிகப்பெரிய ஆசானான கிருஷ்ணபரமாத்மாவினால் அவ்வாறு வற்புறுத்திக் கூறப்படுகிறது. அர்ச்சுனனாக இருந்தாலும் சரி, வேறு ஒருவனாக இருந்தாலும் சரி ஒவ்வொரு மனிதனும் ஒரு சமூகச் சூழ்நிலையிலேயே உள்ளவன் என்பது சந்தேகத்துக்கு இடம் இல்லாத உண்மை ஆகும். எனவே, எந்தவிதமான வாதமும் சமூகத்தோடு தொடர்பு இல்லாது போமாயின் அது பலம் வாய்ந்த வாதமுறையாக இருக்காது. அத்துடன் ஒரு நிகழ்ச்சியில் பல அம்சங்கள் கலந்து

இருப்பதனால் முற்றும் தனியான சமூக இயல் வாதமும் கூடப் பூரணம் அற்றது ஆகும். எனினும், ஆரம்பத்தில் அவற்றை நாம் சமூக அலகுகளாக கூறிக்கொள்வதில் தவறு இல்லை.

**04. பௌதிக இயற்கை.**

நாம் மிகப்பெரிய பௌதிக இயற்கையைச் சேர்ந்தவர்கள் என்று மிகவும் அருமையாகவே கற்பனை செய்துகொள்கின்றோம். தத்துவ வகுப்புக்களில் மட்டும்தான் நாம் அப்படிக் கற்பனை செய்கிறோம் என்று சிந்திக்கக்கூடும். ஆனால் எமது நாளாந்த வாழ்க்கையில் மனித உறவுகளோடு கூடிய ஒரு மனித சமூகத்தில் நாம் எம்மைக் கற்பனை செய்கின்றோம். ஆனால், நாம் பஞ்ச பூதங்களைப் பற்றி ஒருபோதும் கவலைப்படுவதில்லை.

**05. சமூகக் கடமை.**

சமூக இயல்வாதம் ஓர் ஆரம்ப வாதம் மட்டுமே ஆகும். அது ஓர் ஆரம்பப்படிதான். நாம் மனித சமூகத்துக்குக் கடமைப்பட்டுள்ளவர்களா? "எனக்கு எதுவித கடமையும் இல்லை. நான் ஆத்மா. அந்த ஆத்மா அழியாதது. அது என்றும் உள்ளது. அது எல்லை இல்லாதது" என்று எவராலும் சொல்லமுடியாது. அப்படி விவாதிப்பது ஒரு தவறான வாத மாகும். அந்தத் தவறு என்னவெனில், நாம் சமூகச் சூழலுக்குள் பௌதிக அதீத வாதத்தைப் புகுத்த முயற்சிப்பதனால் ஏற்படும் தவறு ஆகும். சமூகச் சூழ்நிலையை ஒருவர் வெளிப்படை யாக உணருமட்டும் அவ்வாதத்தை அங்கே மேற்கொள்ளக்கூடாது. சூரியன்முன் பனிபோல சமூக உறவு நீங்கியுள்ளபோதும், அந்த உறவு எமது கண்களினால் பார்க்கமுடியாதபோதும் நாம் எதனையும் மதிப்பிடுவதற்கு அந்த உறவைக் கருத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் விடலாம். எந்த ஒரு வாதத்தையும் முன்வைக்கும்போது நாம் வெளிப்படையான உண்மை எனக் காணும் எதனையும் புறக்கணிக்க முடியாது. மனிதனாக உள்ள எவன் ஒருவனும் தான் மனித சமூகத்தைச் சேர்ந்தவன் அல்லன் என்றும், தன்னைச் சமூக விதிகள் கட்டுப் படுத்த முடியாது என்றும் எவ்வாறு உறுதிகூற முடியும்? அர்ச்சுனன் சமூகத்தில் வாழ்ந்த ஒருவனாகவே இருந்தான். ஒவ்வொரு மனிதனும் ஒரு சமூக அங்கத்தவனே.

நாம் மனித சமூகத்தில் இருப்பதை உணருமட்டும், மனித சமூகத்தில் கூட்டுறவு மனப்பான்மையோடு விட்டுக்கொடுத்து வாழும் வரைக்கும், சமூகத்தைப் பொறுத்தவரையில் கூட்டுறவு நடவடிக்கை என்ற வடிவில் எமது கடப்பாடுகளை நிறைவேற்றி உள்ளோம் என்ற உறுதிப்பாடு எம்மிடம் இருக்க வேண்டும். சமூகத்திடம் இருந்து நாம் வசதிகளை எதிர்பார்க்க முடியாது. அதனால் நமக்குச் சமூகத்துக்குத் திருப்பி வழங்கவேண்டிய கடப்பாடு இல்லை என்று உணரமுடியாது. ஒருவர் தானே தன்னைப் பற்றிச் சிந்திக்க விட்டுவிடுவோம். நீ உன்னைவிட மற்ற மனிதர்களிடம் இருந்தும் சமூக உறவுகளின்மூலமும் ஏதாவது நலனைப் பெறுகின்றாயா? உனது வாழ்க்கைக்குச் சமூகத்திடம் இருந்து நலன் கிடைப்பது உறுதியாகவும், தொடர்ந்தும் அந்த நலன் கிடைக்கும் என்பது உறுதியாகவும் இருந்தால் நீ பெற்றதற்குச் சமூகம் எதிர்பார்க்கும் கடப்பாட்டை நிறைவேற்ற வேண்டியவனாக உள்ளாய். நாம் சமூகம் என்ற ஒன்று இருப்பதை உறுதியாக நம்பி அச்சமூகத்திலேயே இருக்கின்றோம். சமய உற்சாகத்தினால் மனித சமூகத்தை இல்லாதது என்று கூறக்கூடாது.

(தொடரும்...

*எங்கும் இருள் என்பது கிடையாது, அறியாமைதான் இருள்.*

# அரிச்சுவடியும் அறச்சுவடியும் ஒருங்கேயமைந்த அறச்சாலைகளே அந்த மூன்றுமாகும்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

"நீருடைத்தாகியும் நெருங்கிப் பற்பல
ஆருடைத்தாகியும் உயர்ந்த விந்தியப்
பேருடைத்தாகியும் பிறங்கு பல்வகைச்
சீருடைத்தாயது திருநெல்வேலியே!"

சேர். பொன். இராமநாதன் அவர்கள், கொழும்பிலே பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயக் கருங்கல் திருப்பணி வேலை நிறைவுபெற்று மகா கும்பாபிஷேகம் நிறைமங்களமாகி பேறுபெற்றபின், யாழ்ப்பாணம் இணுவிலின்கண்ணமைந்த மருதனார் மடத்திலே பெண்களுக்கான ஒரு உயர் கல்லூரியைக் கலைக்கூடமாக்கினார். இருநூறு ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்டதாய், சுற்றிவரக் காவலரண்களாக உயர்ந்த மதில்கள் எழுப்பப்பட்டு, வணங்குவதற்காய் கருங்கல் சிவாலயமும் ஸ்தாபிக்கப்பட்டு, பெண்களின் தூய ஒழுக்கமும் வாழ்வும் சிவநெறியும் நடைமுறையாகக் கல்வியோடு கற்பிக்கப்பட்டது. இதன் பெறுபேறாக யாழ்ப்பாணக் கந்தபுராணக் கலாச்சாரத்திற்கு வித்திடப்பெற்றது. வேத ஆகமம், வேத வித்வத் பிரமசோபிதம், நீதி சாஸ்திரம், அட்டதிக்குப் பரிபாலன இட்ட நிவாரண சௌபாக்கிய சேம பிரயோக சாந்தி என சகல பாதுகாப்புகளும் ஆற்றப்பட்டே 1) இராமநாதன் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. அந்தக் கல்லூரி அமைந்த பீடமதிலேதான் இப்பொழுது கலை, பண்பாடு, கலாச்சாரம், ஒழுக்கம், தெய்வீகம், ஆன்மீகம் யாவும் தோன்றுகிறது. இ.்து ஒரு தனி ஆய்வுக்குரியது. சேர். பொன்னின் ஆத்மநாதம் இராமநாதன் கல்லூரியிலும், நுண்கலைப் பீடமதிலும் விளைந்துள்ளது என்பதனால் யாழ்மண் வரம் பெறுமாறு அமைந்துள்ளபடியினால், மாணவர்களும் சரி, ஆசான்களும் சரி, நிர்வாகமும் சரி ஆன்மீகப் பாதையில் செல்வார்களாக இருப்பார்களாயின் கல்வியின் பேறு அதி உன்னதமாக மாட்சி பெறும்!

## அறச்சாலை

கொழும்பு, இணுவில் அடைந்த வெற்றிகளைத் தொடர்ந்து திருநெல்வேலியிலே 22.08.1931இல் ஆண்கள் பயில்வதற்கான கல்விக்கூடத்தை நிறுவி, அதற்குப் பரமேஸ்வர வித்தியாலயம் எனப் பெயரிட்டார். அதன் பொருட்டே அதன் வழி மணியகாரன் முத்துக்குமார், பெரியவர் சுப்பிரமணியம், வேதவனத்தார் யாவரும் ஞானப்பிரகாச முனிவர், ஆறுமுகநாவலர் பாதையில் பிரகாசித்தவர்கள் என்பதனால், கோப்பாயை அடுத்து திருநெல்வேலியில் இருபத்தைந்து ஏக்கர் காணியை முழுக்க முழுக்கப் பனைகளோடு வாங்கினார். அதுமட்டுமல்ல சுற்றிவர மதில்களோடு பரமேஸ்வராக் கல்லூரியை எல்லையிட்டு வடிவமைத்தார். இப்பொழுது பரமேஸ்வராக் கல்லூரியும், பரமேஸ்வரன் ஆலயமும் அரிச்சுவடியோடிசைந்த- அறச்சுவடியும் ஒருங்கே சேர திருநெல்வேலியானது, திரிகரண சுத்தியோடு மனம் ஒருமையோடும், சிதறலின்றியும்

*பயன்படுத்தப்படாத புத்தகம் வெறும் காகிதக் கட்டுத்தான்.*

அறக் கல்வியை ஆலமரம்போல உயர வைத்தது. சுவாமி ஞானப்பிரகாசர் (1616) வாழ்ந்த பேறினை திருநெல்வேலி கொண்டிருப் பதனால் போலும், கோமாதா குலமாதாவைச் சிறப்பிக்கும் வண்ணம் சேர். பொன். இராம நாதவள்ளலையும் பரமேஸ்வரம் காந்தமாய் இழுத்ததுபோலும். பசுக் கொலைக்குப் பயந்து இரவோடிரவாக கடல் மார்க்கமாக இந்தியா வுக்குப் புறப்பட்டு சிதம்பரத்தில் சென்று தஞ்சமடைந்தவர்தான் சுவாமி ஞானப்பிரகாச ராவார். ஆகவே திருநெல்வேலியானது அன் னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலவன் பொன்னம் பாலிக்கும் திருவருட்பேறுகொண்ட சிவமயப் பூமியாகும். வடமாகாணம் ஒரு காலத்தில் மாட்டிறைச்சிக் கடைகள், பசு வதைகள் எக்காரணங்கொண்டும் அனுமதிக் கப்பட்டதில்லை! ஆனால் அண்மையில் ஒரு விளம்பரம் செய்யப்பட்டு இருந்தது. எப்படி என்றால், மாட்டிறைச்சிக் கடை திறப்புவிழா! பெரிய பதாகை! கவர்ச்சியான விளம்பரம்! மிடுக்கான ஒரு நாம்பன் மாடு! எக்கெச்சக்க மான சனம்- அன்றைய தினம்! வெளிநாட் டவர்களல்லர்! நம் நாட்டவர்களேதான்! சிவமயமான பூமியில், தவமற்ற அவப்பெய ருக்கு நம் பூமி ஒருபோதும் இடந்தரவே தராத நிலையில், இன்றைய இந்த அவல நிலை, சிவநிந்தைக்கும், தேவாதி தேவ சாபத்திற்கும் ஆட்படுவதற்கேதுவாயுள்ளது. பல்லின மொழி, சமய, சமூக, தொழில் பிரிவினர்கள் நிறைந்த நம் நாட்டில் அண்மை யில் முப்பத்தேழு மாடுகளின் தலைகளும், இரண்டாயிரத்து ஐந்நூறு கிலோ இறைச்சி யும் கைப்பற்றி அழித்த செய்தி கண்டு சைவ சமயத்தவர் புண்பட்டுப்போய் உள் ளனர். தினம் தினம், கணம் கணம், "பசு வதை, மாடுவதை, ஆடுவதை, கோழிவதை, உடும்புவதை, ஆமைவதை, பால்சார்ந்த வதை, பெண் சார்ந்த வதை, சம்பால் வதை, பிறன்மனை வதை, உடல்வதை, உளவதை எனப் பல வதைகள்" எல்லையை மீறி நடக்கின்றன. இவற்றையெல்லாம் இந்த மண்ணில் நடக்காதவாறு நிறுவப்பட்டவையே இந்த பொன்னம்பலவாணேஸ்வர ஆலயம், இராமநாதன் கல்லூரி சிவாலயம், பரமேஸ் வராக் கல்லூரி சிவாலயம் ஆகிய மூன்று மாகும். இந்த மூன்று சிவாலயங்களிலும் அதன் சூழலிலும் ஏதாவது குளறுபடிகள் நடக்குமாயின், அல்லது தவறுகள் தொடர்ந்து இடம்பெறுமாயின் சிவன் தாங்கவும் மாட் டான். பொறுத்துக் கொள்ளவும் மாட்டான் என்பதுதான் சிவ வியாபகத்தின் பிரதிபலிப்பு மாகும். ஆம்! ஒரு நாடு, ஒரு வீடு, ஒரு தலைமை, ஒரு ஆலயம், ஒரு வாழ்வு, வாழ்க் கையின் இலக்கு, அடைய வேண்டிய பேறு, நிலையான பேரின்பம், அதற்காக பிள்ளை களின் ஒழுகலாறு போன்ற யாவுமே இந்த மூன்று அறச்சாலைகளின் வாயிலாக யாவர்க் கும் கிடைக்கவே இராமநாத வள்ளல் அய ராது பாடுபட்டார். சைவ சமயம், சைவ போச னம், சைவ சின்னங்கள், சைவ சிந்தனை, சைவப்பண்பாடு, சைவ உடைநடை பாவனை, சைவ சமய பீடம், சைவ நாகரீகம், சைவப் பாரம்பரியம் என்பதாக இராமநாத வள்ளல் ஒவ்வொரு அத்திபாரக் கல்லு நாட்டும் போதும் சொல்லிச் சொல்லி நாட்டி வைத் தமை இங்கு நோக்கத்தக்கதாகும். குறிப்பாக இணுவில் இராமநாதன் கல்லூரியும் அத னோடியைந்த பீடமும், திருநெல்வேலி பர மேஸ்வர ஆலயத்தோடியைந்த உயர்பீடமும் அறமோங்குமாறு அறச்சாலைகளாக, சைவ சமயப் பேற்றினை அள்ளித்தெளிக்கும் இருப் பிடங்களாக மிளிரவே அண்மையில் அரங் கேறிய சைவமாநாடும், இசைப்பகிர்வும் பெரி தும் துணைபுரிந்தனவெனலாம். கிராமங் களும் இணைவதன் மூலம் அரிச்சுவடிகளும் அறச்சாலைகளும் இந்த மண்ணில் மீண்டும் உயிர்பெறும் என்பது கொழும்பையும் சிந் திக்க வைக்குமே!.

*எந்த வீட்டில் நூல்நிலையம் இருக்கிறதோ, அந்த வீட்டில்த்தான் ஒளிவிளக்கு இருக்கிறது.*

(கட்டுரைத்தொடர் - 32

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## ஈழத்துச் சித்தர்கள்

### குழந்தைவேற் சுவாமிகள்

கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன் துறை ஆகிய மூன்று கிராமங்களும் உள் ளடங்கிய பிரதேசம் கோயிற்கடவை என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. சிவபூமி என்று தவயோகி திருமூலநாயனாரால் அழைக் கப்பட்ட ஈழமணித் திருநாட்டின் வடக்கே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற சிறப்புமிக்க திருத் தலமாகிய நகுலேஸ்வரம் கீரிமலையிலே காணப்படுகிறது. புராதன காலத்தில் இத் திருத்தலம் திருத்தம்பலேஸ்வரம் என்ற பெய ரால் அழைக்கப்பட்டது. நகுலேஸ்வரம் அமைந் துள்ள கீரிமலைத் தீர்த்தம் சாகர சங்கம தீர்த்தம், கண்டகி தீர்த்தம், கங்கா சமுத்திர சங்கமம் எனப் பல பெயர்களால் அழைக் கப்படுகிறது. கீரிமலையை நகுலகிரி என்றும் கூறுவர். நகுல முனிவர் அங்கு தவம் செய்து தமது கீரிமுகம் மாறப்பெற்றமையினால் கீரி மலைக்கு நகுலமலை என்ற பெயரும் இறை வனுக்கு நகுலேஸ்வரர் என்ற நாமமும் இறை விக்கு நகுலாம்பிகை என்ற நாமமும் ஏற்பட லாயிற்று. நகுலகிரிக்கு மேற்குப் பக்கத்திலே தெற்கிலூறுகின்ற சுத்த நீரும், வடக்கிலுள்ள உப்பு நீரும் கலந்து கிழக்கு நோக்கிய சிவரூபமும் சக்திரூபமும் ஆக இருக்கின்ற இயல்பினாலே கங்கா சமுத்திர சங்கமம் என்றும், கண்டகி தீர்த்தம் என்றும் அழைக் கப்படுகின்றது. சோழ இளவரசியாகிய மாரு தப்புரவீகவல்லி குதிரை முகத்துடனும் குன்ம வலி நோயுடனும் இருந்து அவஸ்தைப் பட்டாள். சந்நியாசி ஒருவரால் வழிப்படுத்தப் பட்ட மாருதப்புரவீகவல்லி கீரிமலைச் சார லில் வந்திறங்கி நகுல முனிவரிடம் ஆசீர் வாதம் பெற்று நகுலேஸ்வரத் திருத்தலத்தின் விசேடத்தையும் தீர்த்தத்தின் மகிமையையும் முனிவர் வாயிலாக அறிந்து கொண்டாள். கீரிமலை புனித தீர்த்தத்தில் நீராடி சிவாலய தரிசனமும் செய்து வந்த மாருதப்புரவீக வல்லியின் குன்ம வலியுந் தீர்ந்து குதிரை முகமும் மாறியது.

கீரிமலையின் சிறப்பினை மேலும் சிறப்புச் செய்யும் வகையில் அங்கு சித்த புருஷர்களாகிய குழந்தைவேற் சுவாமிகள், சடையம்மா அம்மையார் ஆகியோரின் சமா திக் கோவில்கள் காணப்படுகின்றன. ஷப்த தீவுகளில் ஒன்றாகிய வேலணை சைவ ஆசாரம் மிக்க மக்கள் வாழும் கிராமமாகத் திகழ்கிறது. விசேட தீட்சை பெற்றுச் சிவபூசை செய்யும் மக்கள் பலர் வேலணை மேற்கில் வாழ்ந்தார்கள். வேலணை மேற்கில் சைவப் பண்பாட்டில் ஊறித் திளைத்த சண்முகநாதன் தெய்வானைப்பிள்ளை தம்பதிகள் செய்த தவத்தின் பயனாக குழந்தைவேற் சுவாமிகள் திரு அவதாரம் செய்தார். அழகன் என்றால் அது கலியுகவரதனாகிய கந்தவேட் பெரு மானையே குறிக்கும். சிறு வயதில் குழந்தை வேலும் முருகனைப்போல அழகனாகவே காணப்பட்டார். சிறிய வயதில் இவருடைய பெற்றோர்கள் "குழந்தைவேலா நடந்து வாடா" என இரு பொருள்பட அழைப்பார்களாம்.

*மனிதன் பெரும்பாலான துன்பங்களைத் தன் பேச்சின்மூலமாகத்தான் தேடிக்கொள்கிறான்.*

இவருடைய தந்தையார் முருகப்பெருமானின் நாமங்களில் ஒன்றாகிய சண்முகநாதன் என்ற பெயரைப் பெற்றிருந்தார். முருகப் பெருமானுடைய கிரியா சக்தியாகிய தெய்வானைப் பிள்ளை என்ற பெயரையே தாயார் கொண்டிருந்தார். இவர்கள் தாம் செய்த முன்வினைப் பயனால் கிடைத்த தமது மகனுக்கும் குழந்தைவேல் என்று முருக நாமத்தையே சூட்டினார்கள். வேலை அணையாகக் கொண்ட வேலணையே இவர்களுடைய தாயகபூமி. எல்லாம் முருகமயமாகவே காணப்பட்டது.

தெய்வத்தின் நலம் கொண்ட குழந்தை வேலரும் தெய்வீகச் சாயல் படிந்தவராகவே காணப்பட்டார். கண்டவரை வசீகரிக்கும் தன்மை இவரிடம் இயல்பாகவே காணப்பட்டது. இவருடைய பாலியப் பருவத்தில் இவரோடொத்த குழந்தைகள் இவரையே தங்களுடைய விளையாட்டுத் தலைவனாக தேர்ந்தெடுத்தார்களாம். பிற்காலத்திலே பல அடியார்களுக்குத் தலைவனாக விளங்கப் போகிறார் என்பதற்குக் கட்டியம் கூறும் நிகழ்வாகவே விளையாட்டுக் குழுத் தலைவர் பதவி இவருக்கு கிடைத்திருந்தது. வெற்றி தோல்வியில் சலனப்படாத தன்மையும் எதனையும் தாங்கும் இயல்பும் இளமையிலேயே இவரிடம் குடிகொண்டிருந்தது. இவரின் இளமைப் பருவ விளையாட்டுக்களில் பெரும்பாலானவை ஆலயம் அமைத்துச் சுவாமியை வைத்துப் பூசை செய்தல், பிரார்த்தனை செய்தல், செய்வித்தலாகவே இருந்தன. "வாழும் பிள்ளையை மண் விளையாட்டிலேயே தெரியும்" என்பது இவருக்குப் பொருத்தமாகவே அமைந்திருந்தது.

இவர் உரிய காலத்திலேயே வித்தியாரம்பம் செய்யப் பெற்றார். சமய தீட்சை பெற்றுச் சைவ அனுட்டான சீலராய் விளங்கினார். தமிழ் இலக்கிய இலக்கணத்திலும் ஆங்கில மொழியிலும் சிறந்த புலமை உடையவராக விளங்கினார். இவருடைய பரம்பரையில் வந்த முன்னோர் அரசாங்க உத்தியோகத்தர்களாக இருந்தார்கள். விதானை, மணியம், உடையார் போன்ற பதவிகளை வகித்து வந்தார்கள். பொருளாதார வசதியுள்ளவர்கள், நேர்மையானவர்கள், பொது மக்களின் அன்புக்குப் பாத்திரமானவர்களே இப்பதவிகளில் நியமிக்கப்பட்டார்கள். பிறரிடம் கையூட்டு (லஞ்சம்) பெற்றுக்கொண்டு பணியாற்றுபவர்களாக இவர்கள் எவரும் இருக்கவில்லை. நேர்மைக்கும், நீதிக்கும் முக்கியத்துவம் கொடுத்தே தங்களுடைய கடமைகளை ஆற்றினார்கள்.

ஒல்லாந்தருடைய ஆட்சிக் காலத்தில் ஷப்த தீவுகளின் கோயிற்பற்றுக்கும் ஏக முதலியாராக வேலணையைச் சேர்ந்த இராசசேகர முதலியார் பணியாற்றினார். அவருடைய சந்ததியின் நான்காம் தலைமுறையைச் சேர்ந்தவராகக் குழந்தைவேலர் தோன்றினார். அத் தொடர்பிலே குழந்தை வேலருக்கும் அரசாங்க உத்தியோகமாக முதலியார் வேலை கிடைத்தது. இவர் இலங்கையின் பல பாகங்களிலும் முதலியாராகக் கடமையாற்றி வந்தார். இவருடைய உள்ளத்திலே இறை சிந்தனை நிரம்பியிருந்தது. உலகத்தில் வாழ்ந்தாலும் லோகாயுதராக இவர் வாழவில்லை. தாமரையிலைத் தண்ணீர்போல உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் இவர் வாழ்ந்து வந்தார். ஆனால் தன்மான உணர்ச்சி மிக்கவராகக் காணப்பட்டார்.

இலங்கையில் இனக் கலவரங்கள் ஆரம்பிப்பதற்கு முன்பு அனுராதபுரத்தில் சைவத் தமிழர்கள் பலபேர் வாழ்ந்தார்கள். குழந்தைவேற் சுவாமிகள் அனுராதபுரத்தில் முதலியாராகப் பணியாற்றியபொழுது அங்கே கதிரேசன் கோயில் ஒன்றைக் கட்டுவித்தார். ஒருமுறை இவருக்கு மேலே நீதவானாக இருந்த வெள்ளையர் ஒருவர் காரணம் இன்றி

*மிக அதிகமானவர்களுக்கு மகிழ்ச்சியளிப்பவன்தான் மிகவும் மகிழ்ச்சியான மனிதன்.*

இவர்மீது கோபித்தார். இதனால் நீதவானுக்கும் இவருக்குமிடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது. தன்மான உணர்வும் சுதந்திர வேட்கையும் கொண்ட குழந்தைவேலர் வெள்ளையரின் ஆதிக்க வெறியையும், குடியேற்ற நாட்டுச் சுதேசிகள்மீது அவர்கள் கொண்டிருக்கும் அலட்சிய மனப்பான்மையையும் கண்டித்துப் பேசினார். ஊதியத்திலும் பார்க்க மானம் பெரிது என்று நினைத்த குழந்தைவேலர் உத்தியோகத்தை உதறித்தள்ளிவிட்டு வேலணைக்கு வந்து மனைவி வள்ளியம்மையோடு இருந்து வருவாராயினர். இவருடைய உறவினர்கள் சுங்கஇலாகாவில் இவருக்குத் தகுந்த உத்தியோகம் ஒன்றைத் தேடிக் கொடுத்தனர்.

ஒருநாள் குழந்தைவேற் சுவாமிகள் வேலை பார்த்துக்கொண்டிருந்த கட்டிடத்தின் முன்பு கடையிற் சுவாமிகள் வந்து நின்றார். கடையிற் சுவாமிகள் குழந்தைவேலரை உற்று நோக்கினார். திருப்பெருந்துறையில் குதிரைகள் வாங்குவதற்காகப் பொன்னோடும், பொருளோடும் இராஜகம்பீர மிடுக்கோடும் சென்ற மணிவாசகரை இறைவன் குருவடிவம் தாங்கித் தனது அருட்பார்வையால் ஆட்கொண்டார். இதேபோலக் கடையிற் சுவாமிகளின் அருட்பார்வையால் காந்தம் இழுக்கின்ற சுத்த இரும்புபோலக் குழந்தை வேலரும் கவரப்பட்டார். எழுதிய பேனையோடு வெளியில் வந்த குழந்தைவேலர் சுவாமிகளைப் பார்த்துக்கொண்டு நின்றார். சுவாமிகள் வாய்திறந்து எதுவும் பேசவில்லை. குழந்தையரும் வாய் திறக்கவில்லை. சுவாமிகள் குழந்தையருடைய கையில் இருந்த பேனாவைப் பிடித்து இழுத்தார். இந்நிகழ்வு நடைபெற்ற உடனே சுவாமிகள் முன்பாகச் செல்ல குழந்தையர் அவர் பின்னாலே சென்றார். இந்தக் காட்சியினைக் கந்தோரில் உள்ளவர்கள் அனைவரும் பார்த்தனர். "யாரோடோ குழந்தையர் போகிறார்" சிறிது நேரத்தில் திரும்பி வருவாரெனக் கருதினர். மந்திரத்தால் கட்டுண்டவர்போலக் குருநாதனைச் சீடர் தொடர்ந்தார். உடல், பொருள், ஆவி மூன்றையும் குருநாதருக்கே அர்ப்பணித்தார். தன்னைக் கடையிற் சுவாமிகள் ஆட்கொண்டு அருள் வழங்கிய சிறப்பினை

"அன்றாற நாவியும் பொருளுமாக் கையும்
ஐய யாவும் கொண்டடிமை யாக்கினாய்"

எனக் குழந்தைவேற் சுவாமிகள் தனது சிஷ்யர் ஒருவருக்குக் கூறியுள்ளார்.

"அண்டர் போற்றவே கயிலை நின் றெழுந்தாடித் தாண்டவம்" எனக் குழந்தைவேலர் தனது குருவைச் சிவனாகவே காண்கிறார். சீடரின் பக்குவ நிலையை அறிந்த குருநாதர் அவரை ஆட்கொண்டதோடு தீட்சையும் உபதேசமும் அருளினார். குழந்தைவேலரின் சீடர் ஒருவர் தனது குருவை சிவனின் மூத்தபிள்ளையாகிய விநாயகராகவே காண்கிறார்.

"அந்தி வண்ணன் தந்த முதற் பிள்ளையான
ஆனைமுகனம்சமெலா மமையப் பெற்ற
சுந்தரனே ஓங்கார சொருபத்தானே"

அனுராதபுரம் நீதிமன்றத்திலிருந்து கட்டளையொன்று குழந்தைவேலருக்கு வந்தது. அதைப் பார்த்துவிட்டு யாதொன்றும் நிகழாததுபோல அதனை வைத்துவிட்டார். கோட்டுக்குச் செல்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு குருநாதர் சீடனிடம் "என்னடா குழந்தைவேல் என்ன விஷயம்" என்று கேட்டார். குழந்தையர் பயத்துடன் எழுந்து வணங்கி வழக்குச் செய்தியைக் குருவிற்குக் கூறினார். சுவாமி சிரித்துக்கொண்டு போகத்தான் வேண்டும் என்றார். குருநாதர் குழந்தையரைப் பார்த்து "நீ அனுராதபுரம் போ, நான் அங்கு வருகிறேன்" என்றார். குருவின்

*இந்த உலகத்தில் நாம் செய்யும் மிகவும் நல்ல பயணம் ஒருவரை நோக்கி ஒருவர் செல்வதுதான்.*

கட்டளையை ஏற்றுக் குழந்தையரும் அனுராத புரம் போனார். வழக்கு விசாரணைக்கு எடுக் கப்பட்டது. குழந்தைவேற் சுவாமிகள் குரு நாதனையே நினைந்தவராய் எதிரிகளுக் குரிய பக்கம்போய் நின்றார். நீதவான் முத லாவது கேள்வியாக குற்றவாளியோ, சுற்ற வாளியோ என்று கேட்டார். சுற்றவாளி என்று சுவாமிகள் பதில் கூறினார். வழக்காளி பக் கத்து நியாயவாதி வழக்கை உற்சாகமாகவே நடாத்திக்கொண்டிருந்தார். வழக்கு விசாரணை நடைபெற்ற காட்சியைப் பார்த்தவர்கள் எதிரி குற்றவாளியாகவே காணப்படுவார் என்று நம்பி னர். வழக்கு விசாரணை முடிந்ததும் நீதிபதி உமது கட்சியை விவாதிக்க யாரேனும் வழக் கறிஞர் உளரா என்று கேட்டார். இல்லை என்றே பதில் வந்தது. வழக்காளியின் சாட்சி களைக் குறுக்கு விசாரணை செய்யும் முறை யில் நீர் ஏதாவது கேள்விகள் கேட்க விரும்பு கின்றீரா என்று நீதவான் வினாவியபோது சுவாமிகள் மேலே ஒரு கணப்பொழுது அண் ணாந்து பார்த்தார். மயில் ஒன்று உலாவு வதைக் கண்டார். உடனே குருநாதனுடைய திருவருள் தனக்குள்ளே பாயப்பெற்றதாக உணர்ந்தார். உடனே நீதவானுடைய கேள் விக்கு விடையாக ஆம் என்று பதிலளித்தார். சுவாமிகளுடைய கேள்விகள் பொய்ச்சாட்சி கூறியவர்கள்மேல் அம்புபோல் பாய்ந்தன. பொய்ச்சாட்சி கூறியவர் சொல்வதறியாது திகைத்து நின்றார். நியாயவாதியும் வாய டைத்து நின்றார். வழக்காளியின் முகமும் இருளத் தொடங்கியது. சுவாமிகளின் குறுக்கு விசாரணைக்கு விடையளிக்கமுடி யாமல் வழக்காளி திணறுவதைக் கண்ட நீதிபதி தன் தீர்ப்பை எழுதி முடித்தார். இவ் வழக்கில் எதிரியாகக் கொண்டு வரப்பட்ட திரு. குழந்தைவேல் நிரபராதியாகக் காணப் பட்டு விடுதலை செய்யப்படுகிறார் என்று தீர்ப்பளித்தார்.

பரமகுரு சுவாமிகள் கீரிமலையில் வந்திருப்பதை அறிந்துகொண்ட கடையிற் சுவாமிகள் தமது சீடர் குழாத்துடன் சென்று சுவாமிகளைத் தமது சீடர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். வந்திருந்த சீடர்களில் குழந்தைவேற் சுவாமிகளின் பக்குவநிலையை உணர்ந்துகொண்ட பரமகுரு சுவாமிகள் தமது திருவருட்கடாட்சத்தை அவர்மேல் பாலித்தருளி னார். குழந்தைவேற் சுவாமிகளின் தவத்தின் பயனாக அவருக்கு கடையிற் சுவாமிகளும் பரமகுரு சுவாமிகளும் குருவாக வந்து வாய்த் தனர். கடையிற் சுவாமிகள் வண்ணார்பண்ணை யிலும், பரமகுரு சுவாமிகள் கீரிமலையிலும் வாழ்ந்து வந்தனர். குழந்தைவேற் சுவாமிகள் இருவருக்கும் மாறி மாறித் தொண்டராக இருந்து பணிபுரிந்து வந்தார்.

பரமகுரு சுவாமிகளைக் கீரிமலையிலே சமாதி வைக்க வேண்டும் என்று அவருடைய சிஷ்யர்கள் சிலர் விரும்பியிருந்தார்கள். ஆனால் பரமகுரு சுவாமிகளின் சமாதி வைபவம் 1904ஆம் ஆண்டில் மாத்தளையில் நடைபெற்றது. இதனால் பரமகுரு சுவாமிகளின் சிஷ்யர்கள் சிலர் ஏமாற்றம் அடைந்தார்கள். ஆனால் குழந்தைவேற் சுவாமிகள் பரமகுரு சுவாமிகளின் சமாதி வைக்கும் நிகழ்வு மாத்தளையில்தான் நடைபெற இருக்கிறது என்பதை உள்ளுணர்வால் அறிந்து கொண் டார். பன்னிரண்டு சீடர்களுடன் மாத்தளைக் குச் சென்று நாற்பது நாட்கள் தங்கியிருந்து பரமகுரு சுவாமிகளின் சமாதி வைபவத்திற் பங்குபற்றித் தனது குருவிற்குரிய கடமை களை நிறைவேற்றி இருந்தார்.

அடியார்கள் கடையிற் சுவாமிகளை அடிக்கடி தமது இல்லங்களுக்கு அழைத்து பாதபூஜை செய்து உணவளித்து வணங்கு வது உண்டு. ஒருநாள் மண்டைதீவில் ஒரு அன்பருடைய வீட்டில் நடந்த நிகழ்வில் கடை யிற் சுவாமிகள் அருளம்பல சுவாமிகளை

*பிடிவாதமும் கோபமும் உன் இயலாமையின் வெளிப்பாடாகும்.*

அருகில் இருத்தி நீங்கள் செய்யும் வழிபாடு களை இருவருக்கும் செய்யுங்கள் என்று கட்டளையிட்டார். அக் காட்சியைக் கண் ணுற்ற அடியவர்கள் அனைவரும் "அரஹர" என்று ஆனந்தம் கொண்டனர்.

குழந்தைவேற் சுவாமிகளுக்கு அருள் வழங்கி ஆட்கொண்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிய நிலையில் கடையிற் சுவாமி கள் சமாதி கூடுங்காலம் ஏற்பட்டது. அந்த நாட்களில் கடையிற் சுவாமிகள் நீராவியடி யிலே அதிகமாகத் தங்கியிருந்தார்கள். கடையிற் சுவாமிகளின் இறுதிக் காலத்தில் குழந்தைவேற் சுவாமிகள் தமது குருநாத னைக் கணமேனும் பிரியாது ஆராமையோடு பணிபுரிந்து வந்தார். குருநாதரின் ஆணைப் படியே சீடர் குருநாதரின் சமாதிக்குரிய முன் னேற்பாடுகளையும் கவனித்து வந்தார். கடையிற் சுவாமிகள் சமாதி அடைந்த பின்பு மெய்யடியார்கள் அனைவரும் குழந்தைவேற் சுவாமிகளையே குருவாகக் கொண்டனர்.

"குழந்தைவேலா தஞ்சம் வேறிலை யுனது சரணந்தானே" என இவரின் பிரதம சிஷ்யராகிய அருளம்பல சுவாமிகள் தனது குருவைப் போற்றித் துதிக்கின்றார். பாவிலுப் பிள்ளை என்ற கிறிஸ்தவரும் குழந்தைவேற் சுவாமிகளின் உத்தம சீடர்களில் ஒருவ ரானார். ஆன்மீகத்தின் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் சாதி மத பேதங்களுக்கு அப் பாற்பட்டவர்களாகவே இருந்தார்கள். சுவாமி கள் பாவிலுப்பிள்ளைக்கு முறைப்படி தீட்சை யும் வழங்கினார்கள்.

குழந்தைவேற் சுவாமிகளின் ஒன்று விட்ட சகோதரி ஒருவர் வண்ணார்பண்ணை யிலேயே வசித்து வந்தார். சுவாமிகள் அம்மை யாரின் இல்லத்தையே அமைதியான இட மாகக் கருதி அங்கே வாழ்ந்து வந்தார். நாலாபக்கத்தில் இருந்தும் அடியார்கள் பலர் அவ்விடத்திற்கு வருகை தந்தார்கள். அம்மை யாருடைய வீடு ஒரு சாதனா நிலையமாக மாறியது. சுவாமிகளின் தலைமையில் நடை பெற்று வந்த பூசை, பிரார்த்தனை, உபதேசம் ஆகியவற்றில் ஈடுபட்ட அடியார்கள் தம்மை யும் மறந்து பேரின்பந் துய்த்தனர்.

இத்தெருவில் இராமநாதர் அருளம் பலம் என்பவர் வசித்து வந்தார். மனிதனை மனிதன் வணங்கலாமா என்பது இவரது நெடு நாள் சந்தேகம். இதனால் இவர் குழந்தை வேற் சுவாமிகளையும் அவரது அடியார் களையும் ஒரு நாளும் அணுகுவதில்லை. அவர்களைக் கேலியும் செய்வார். ஆனாலும் அவரது உள்ளம் அவரை அறியாது குழந்தை வேற் சுவாமியாரையே நாடியது. தானும் அவர்களோடு போய்ச்சேர வேண்டும் என்ற நினைவும் எழுந்தது. இருந்தாலும் சூரனுக்கு ஏற்பட்டதுபோல வரட்டுக் கௌரவம் அவ ரைத் தடுத்துவிடும். இருந்த போதிலும் சுவாமிகள் செய்யும் பூசையையும் அங்கு நடைபெறும் காரியங்களையும் சற்றுத் தூரத் தில் நின்றவாறு காணத் தவறமாட்டார்.

ஒருநாள் இரவு சபாபதி என்ற அன்பர் சுவாமியின் முன்னிலையில் மனமுருகித் திரு வாசகம் பாடினார். இத் திருவாசக இசை யைக் கேட்ட அருளம்பலத்தாரின் உள்ளம் உருகியது. "அடியார் நடுவுள்ளிருக்கும் அரு ளைப் புரியாய்" என்ற திருவாசக வரி இவ ருடைய அகத்தில் உருக்கத்தை ஏற்படுத்தி யது. ஓடிவந்து அடியற்ற மரம்போல சுவாமி களின் பாதத்தில் வீழ்ந்து கண்ணீர் மல்க வழிபட்டார். அவருடைய சந்தேகமெல்லாம் சுவாமிகளுடைய சந்நிதிப் பெருமையாலே தீர்ந்து போய்விட்டது.

சுவாமிகள் தனது இறுதிக் காலத்தை வண்ணார்பண்ணையில் தனது உறவுமுறைச் சகோதரி வீட்டில் கழித்தார். சுவாமிகளின் சமாதிப் பெருபேறு 1909ஆம் ஆண்டு கீலக வருடம் பங்குனி மாதம் எட்டாம் திகதி

*நிசப்தத்தை நாடுபவன் வாழ்வின் உண்மை நிலையை உணர்ந்துள்ளான்.*

ஞாயிற்றுக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரம் கூடிய சுபவேளையில் இடம்பெற்றது. அவருடைய திருமேனி வண்ணார்பண்ணையில் இருந்து ஊர்வலமாகத் தாங்கிச் செல்லப்பட்டு முன்னர் கூறியபடி கீரிமலைக் கடற்கரையில் சமாதி வைக்கப்பட்டது. பின்னர் அடியார்களின் பெருமுயற்சியால் ஆலயம் ஒன்று எழுப்பப்பட்டு பாணலிங்கம் அதே ஆண்டு வைகாசி மாதம் மூன்றாம் திகதி பிரதிஷ்டை செய்யப்பட்டது. அருளம்பல சுவாமிகள் தமது குருநாதரின் பெயரில் பின்வரும் பாடலைப் பாடினார்.

அன்றொருநாள் ஆச்சிரமத்தடைந்த உன்மெய்
யடியவர் முன்னடி நாயேன் தன்னை முன்னா
நின்றிட வைத்தருள் விழிநோக்கு ருத்தியோர் சொல்
நெஞ்சினிலை வைத்தியெனப் பணிந்தீந்திட்டாய்
கன்றிடிக்கத் தாய்சுரக்கும் வழக்கைத்தள்ளிக்
கன்னெஞ்சற் கமுதமழை காட்டிவிட்ட
தன்திறமிங்காரறிவார் குழந்தை வேலா
தஞ்சம் வேறிலையுனது சரணந்தானே. (தொடரும்...

## கோட்பாடு

சாது ஒருவர் மலைப் பகுதியில் குதிரைமீது வந்துகொண்டிருந்தார். அவர் வரும் வழியில் பாதையின் ஓரமாக ஒருவன் மயங்கிக் கிடந்தான். அவனைக் கண்ட சாது குதிரைமேலிருந்து கீழே இறங்கினார். அவனை அசைத்துப் பார்த்தார். அவன் அசையாமல் கிடக்கவே தனது குதிரையின் பக்கவாட்டில் தொங்கிய குடுவையில் இருந்த நீரை எடுத்து அவன் முகத்தில் தெளித்துப், பின் பருக்கினார். மயக்கம் தெளிந்து கண்விழித்த அந்த நபரை மெல்லப் பிடித்துத் தூக்கிக் குதிரைமீது ஏற்றினார். குதிரைமீது உட்கார்ந்த மறுகணமே அவன் அந்தக் குதிரையின் கடிவாளத்தை உலுக்கவும், குதிரை தடதடவென்று பறந்தோடி மறைந்து விட்டது. திகைத்துப் போனார் சாது. அப்போதுதான் அவன் ஒரு திருடன் என்பதும், இதுவரை அவன் நடித்துள்ளான் என்பதும் தெரிந்தது அவருக்கு. குதிரை இல்லாததால் இரவு முழுவதும் மெல்ல நடந்து வீட்டை அடைந்தவர் சில தினங்கள் கழித்து சந்தைக்குக் குதிரை வாங்கப் போனார். அங்கே குதிரைகள் விற்குமிடத்தில் அந்தத் திருடன் அவரது குதிரையுடன் நின்றுகொண்டிருந்தான். சாது மெல்லச் சென்று அவனது தோளைத் தொட்டார். திரும்பிப் பார்த்த திருடன் பேயறைந்ததுபோல் நின்றான். சாது மெல்லச் சிரித்தார். "சொல்லாதே!" என்றார்.

திருடன் மிரண்டான். "எது? என்ன?" என்று சம்பந்தமில்லாமல் உளறிக்கொட்டினான். சாது சொன்னார் "குதிரையை நீயே வைத்துக்கொள்" ஆனால் நீ அதை அடைந்த விதத்தை யாரிடத்திலும் சொல்லாதே. மக்களுக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்தது தெரிய வந்தால் எதிர்காலத்தில் உண்மையிலேயே யாராவது சாலையில் மயங்கிக்கிடந்தால்கூட உதவ முன் வரமாட்டார்கள். நான் இந்தக் குதிரையை இழந்ததால் எனக்கு ஏற்படும் இழப்பைப்பற்றி நான் கவலைப்படவில்லை. காரணம், சில தினங்களில் உழைத்து வேறு ஒரு குதிரையை நான் வாங்கிவிட முடியும். தீயவன் நீ ஒருவன் தவறு செய்ய, நல்லவர்கள் பலருக்கு காலா காலத்துக்கும் உதவி கிடைக்காமல் உயிர் போகக்கூடும் புரிகிறதா?" திருடனின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.


நீதி: குறுகிய இலாபங்களுக்காக நல்ல கோட்பாடுகளைச் சிதைத்துவிடக்கூடாது.

*பொறுமையால் பெற்றவரும் உண்டு, வாழ்வை இழந்தவரும் உண்டு.*

# ஆறுமுகமான பொருள்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

அருணகிரிநாதர் தமிழகத்தில் உள்ள புத்தூருகில் முள்ளந்தரம் என்னும் கிராமத்தில் பிறந்தவர். நன்னெறிப்படுத்துவாரின்மையால் நல்நெறி தவறித் தீய நண்பருடன் சேர்ந்து பரத்தையர் பலருடன் உறவு பூண்டதால் மாறா நோய்க்காளாகி வருந்தி உடன் பிறந்த சகோதரியாரிடம் வந்து சேர்ந்தார். அத்தருணம் சகோதரி கூறிய சுடுசொல்லைத் தாங்கமுடி யாது அங்கிருந்து விலகித் திருவண்ணாமலையை அடைந்து கோபுர உச்சியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்ய ஓடினார். ஏன்? தற்கொலை செய்வதற்கு அண்ணாமலைக் கோபுரம்தான் உள்ளதா? வேறு வழிகளோ இடங்களோ இருக்க அருணகிரி திருவண்ணா மலைக் கோபுரத்தை நாடியது ஏனெனில் ஏதோ முன்னை வினை முகிழ்ந்துவரக் காந்த சக்தி இழுத்துச் செல்வதுபோல் சென்றவரது தற்கொலை முயற்சியும் தோல்வியில் முடிகிறது. அவர் முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்டு அருள்புரிவது கண்டு பரவசராகிப் பணிந்து நின்றார்.



அவரிடம் முருகப் பெருமான் தம்மீது சந்தத் திருப்புகழ் பாடுமாறு பணித்தார். இது கேட்டவர் என் அன்பனே! எனது அப்பனே! ஏனைய எல்லோருக்கும் தலைவராக உள் ளவரே கல்வியறிவோ; கேள்வி ஞானமோ இல்லாது பரத்தையர் வீடுகளே மோட்சம் என்றெண்ணி அங்கேயே படுத்துறங்கி மாறா நோய்க்காளாகி மயங்கிய அறிவிலியாகிய நான் எப்படித் திருப்புகழ் பாடுவேன் என்று பணிவுடன் கேட்டார். இதைக்கேட்ட முருகப் பெருமான் புற்றுநோயாளருக்கு மின்சாரம் பாய்ச்சுவதுபோன்று தமது ஞான வேலாயுதம் கொண்டு அருணகிரியின் நாவில் குறி சூடு போட்டார். அக்கணமே நோய் நீங்கியவராகி புனிதராய் புதியராய் அருணகிரிநாத சுவாமி களாகித் திருப்புகழ் அமுதமழை பொழியலானார்.

இவர் பாடியுள்ள திருப்புகழ் பாடல்களின் எண்ணிக்கை 11000 என்பர். அவற்றுள் அழிந்தவைபோக எமக்கின்று கிடைத்துள்ளவை 1367 ஆகும். இவர் ஐங்கரனை முன்னிலைப்படுத்தி வழிபட்டு "உம்பர்தரு தேனுமணி" என்றும் "கைத்தல நிறைகனி அப்பமோ டவல்" எனவும் திருப்புகழால் இனிது பாடியவர். முருகப்பெருமான் வீற்றிருந்து நல்லருள் புரியும் கோவில்தோறும் சென்று திருப்புகழ் பாடி இன்புற்று வந்துள்ளார். சுவாமிகள் தமிழகத் திலிருந்தபடியே பொலிகை கந்தவனம், நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், நகுலேஸ்வரம்,

*உன் அவசரப்பேச்சு உன்னை அனாதரவாக்காமல் பார்த்துக்கொள்.*

கதிர்காமம் ஆகிய கோவில்களிலமர்ந்து அருள் பொழியும் முருகப்பெருமான் மீது திருப்புகழ் பாடியுள்ளமை கண்கூடு. இவரது பாடல்களின் வலிமைகண்டு "வாக்கிற் கருண கிரி" எனப் போற்றப்பட்டார். சுவாமிகளால் பாடப்பெற்ற திருப்புகழ் அமிழ்தை அருந்திப் புகழாதவர் இல்லை எனலாம்.

"ஐயா அருணகிரி அப்பா உன்னைப் போல் மெய்யாய் ஒரு சொல் விளம்பினர் யார்?" என்று தாயுமான சுவாமிகள் வினவுகின் றார்கள் என்றால் திருப்புகழினது சிறப்புக்கும் பெருமைக்கும் வேறென்ன சாட்சி வேண்டும்.

இவர் திருப்புகழ் மட்டுமன்றித் தம்மை ஆட்கொண்ட முருகப் பெருமான்மீது பேரன்பு உடையராய் கந்தர்அநுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருவெழு கூற்றறிக்கை ஆகிய பல பாடல்களைப் பாடி உள்ளார். "அவனருளாலே அவன் தாள் பணிந்து" அருவி போன்று தேனமுது போன்று திருப்புகழ் பாடியுள்ளார். அவர் பாடல்களில் முதற்பாடல் விநாயகப் பெருமானைத் துதிப்ப தாகவே அமைந்துள்ளமை காணலாம்.

இவரது பெயரை நோக்கும்போது திருவண்ணாமலையிலே ஆதியாக உள்ள அருணாசலப் பெருமானிடம் முன்னை வினை யின் பயனாக வாழ்வரிமை பெற்றுக்கொண் டவர் என்பது புலனாகின்றது. இதன் காரண மாகவே "ஏறுமயில் ஏறி" என்னும் திருப்புக ழில் "ஆறுமுகமான பொருள் நீ அருள வேண டும்" என்று உரிமையுடன் விண்ணப்பிக்கின் றார். பாடல் பாடும்போது பொருள் புரிந்து கொண்டே பாடியுள்ளார். ஆயினும் பெரியவர் கள் வாய் வழியாக வெளிவிட்டால் எம் போன்று சிற்றறிவும் சிறுமதியும் உடையோர் கேட்பார்கள் என்ற கருத்தாகவும் இருக்கலாம்.

அருணகிரிநாத சுவாமிகள் பாடித் தந்துள்ள திருப்புகழ் பரந்த பாற் சமுத்திரம் போன்று விரிவானதாகும். அவற்றுள் "ஏறு மயில் ஏறி விளையாடும் முகம்" எனும் திருப் புகழ் பாற் சமுத்திரத்துள் விளைந்த சிப்பிக் குள் இருந்த சுத்தமான முத்து ஆகும். அது ஆறுமுகம் கொண்டது. அதன் பொருளை ஆராய முற்படுவது பூனை பாற் சமுத்திரம் முழுவதையும் பருக முற்பட்டமை போன்ற பேராசையாகும்.

அருணகிரிநாத சுவாமிகள் அருணா சலகிரிமீது மட்டுமன்றி அங்கு உறைந்தரு ளும் அருணாசலப் பெருமான்மீதும் ஈர்ப்புடை யவராவர். திருப்புகழில் "ஏறுமயில் ஏறிவிளை யாடும்" பதிகத்தில் வரும் "ஆறுமுகமான பொருள்" அருணகிரிநாத சுவாமிகள் தெரிந் துள்ளவரை அமையாவிடினும் எனது சிற்றறி வுக்கெட்டிய பேராசை கொண்டு ஆராய முற்படுகிறேன்.

முருகப்பெருமான் அழகனும் இளை ஞனுமாவான். அவர் மயில்மீது ஏறிநின்று ஒரு முகம் கொண்டு விளையாடுகிறார். அடி யவர் நல்வினை, தீவினையாகிய இரு வினைகளையும் நீக்கிப் பாசமாம் கொடிய வினையாகிய பாசவினையை அகற்றிச் சீவன் சிவமாகுவதாகிய பேரின்ப நிலையை அடை யச் செய்தலேயாகும்.

ஈசனுடன் ஞானமொழி பேசுகிறது இரண்டாவது முகம். அதாவது மகனாகிய முருகனிடம் தந்தையாராகிய சிவன் "ஓம்" எனும் பிரணவ மந்திர உபதேசம் பெறுகிறார் என்கிறார் அருணகிரிநாத சுவாமிகள்.

பிரமன் சிவனைக் காண்பதற்காக வருகிறான். அருகே சிறுவனாகிய முருகன் இருப்பது கண்டும் காணாதது போன்று உள்ளே சென்று விட்டான். திரும்பி வந்த பிரமனிடம் நீ யார்? என்றார் முருகன். நான் படைப்புக் கடவுள் என்றான் பிரமன். உனக் குப் பிரணவத்தின் பொருள் தெரியுமா? என்று கேட்டார். அதன் பொருள் தெரியாது திகைத்து

நின்ற பிரமனது தலையிலே குட்டி அவனைச் சிறையிலடைத்து விட்டார் வேலவர். இதன் காரணமாகப் படைப்புத் தொழில் நின்றுபோய் விட்டது. இது கண்டு, கலங்கிய தேவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து காத்தற் கடவுளாகிய விஷ்ணு மூர்த்தி தலைமையில் சென்று கைலயங்கிரி வாசனிடம் முறையிட்டனர். இது கேட்ட இறைவன் உமையம்மையாம் இறைவியுடன் எழுந்தருளி வந்து பிரணவத்தின் பொருள் உனக்குத் தெரியுமா? என்று கேட்டார் தந்தை. ஆம்! தெரியும் என்றார் மகனாகிய இளவல். எங்கே கூறு என்றார் தந்தை. உடனே மகன் மாணவனாக (சீடனாக) அமர்ந்தால் மாத்திரமே உபதேசம் நடைபெறும் என்றார்.

அவ்வாறு இறைவராகிய தந்தை அமர்ந்திருந்து தலை சாய்த்துச் செவியை மனதை ஒருநிலைப்படுத்தி உபதேசம் பெறத் தயாராகினார். உபதேச குருவாகிய மைந்தன் இரண்டாவது முகம் கொண்டு பிரணவ மந்திர உபதேசம் செய்து சிவகுருநாதன் எனும் பெயர் பூண்டார். பிரமனும் தனது கர்வமடங்கி வழிபட மன்னித்து மீண்டும் படைக்கும் தொழில் பெற்றார்.

மூன்றாவது முகம் அடியவர்களின் வினை தீர்த்த முகமாகும். அடியவரிடம் அடங்கிக் கிடக்கும் சத்தினிபாதம், மலபரிபாகம் என்பனவாய அழுக்குகளையகற்றி நல்வினை தீவினையாகிய இரு வினைகளையும் களைந்து ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் வலிகெடச்செய்து அடியவர்களைப் பேரின்ப நிலையையடையச் செய்வதாகும்.

முருகப் பெருமானது நான்காவது முகம் "குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம்" ஆகும். இதில் தாயார் வழங்கிய சக்திவேல்கொண்டு கிரவுஞ்ச கிரியை ஞான வேலால் இரு கூறாக்குகிறார்.

இங்கே அகங்காரத்தின் வடிவமாகக் குன்று உருவகிக்கப்படுகிறது. மனிதனுடைய மனதிலிருக்கும் நான்- எனது என்கின்ற அகங்கார மமகாரமே மிகப்பெரிய வியாதியாகும். இக்கொடிய நோய் நீங்காதவரை மனிதம் உயிர் வாழமாட்டாது. இந்த அகந்தை மமதையை இல்லாதொழிப்பதே முருகன் கைவேலின் வேலையாகும். இதுவே குன்றுருவ வேல் வாங்கிய தாற்பரியமாகும்.

தேவர்களோடு நித்தியம் போர் புரிபவர் அசுரர்களாவர். அசுரர்கள் போரில் வெல்லும் நோக்கில் அசுர குருவின் ஆலோசனையின் படி மாயையெனும் அரக்கி தவசிரேஷ்டராகிய காசிப முனிவரையடைந்து பெயருக்குப் பொருத்தமான மாயா ஜாலங்கள் பல செய்து தவத்தைக் கலைத்து, அவருடன் கலந்து சூரன், சிங்கன், தாரகன் ஆகிய ஆண்பிள்ளைகள் மூவரையும் அசமுகி என்னும் பெண் பிள்ளை ஒருத்தியையும் பெற்றெடுத்தாள். பிள்ளைகளுக்கு மெய்ஞான உபதேசம் வழங்குவதற்குத் தந்தையாகிய காசிப முனிவர் ஆயத்தமாகிப் பிள்ளைகளை அழைத்தார். இதனைக் கண்ணுற்ற தாயாகிய மாயை அவரைத் தடுத்து, உங்களிடம் எனது பிள்ளைகளுக்கு ஞானம் போதிப்பதற்கோ உங்களுடன் இருந்து வாழ்க்கை நடத்தவோ நான் இங்கு வரவில்லை. தேவர்களை அழித்தொழிக்கவல்ல வீர மறவர் குலப்பிள்ளைகளை உங்கள்மூலம் பெறுவதற்காகவே வந்தேன். நான் வந்த காரியம் மிக எளிதாக நிறைவேறி விட்டது. எனது பிள்ளைகளுக்குத் தேவையறிந்து உபதேசம் செய்வதற்கு எங்கள் குலகுரு இருக்கிறார் என்று கூறியவள் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு குருமனை புகுந்தாள். குருவின் அறிவுறுத்தலின் பிரகாரம் பிரமதேவரை முன்னிலைப்படுத்திக் கடும் தவமியற்றினர். அரக்கியாகிய மாயையினால் ஏமாற்றப்பட்டமையை உணர்ந்து

கொண்ட காசிபர் முனிசிரேட்டர்கட்கெல்லாம் அவமதிப்பை ஏற்படுத்தி விட்டமையை எண்ணி வெட்கமும் வேதனையும் அடைந்து தனது தவ வலிமை அனைத்தும் தொலைத்துவிட்டுக் காண்போர் யாவராலும் நிந்திக்கப்பட்டு நடைபிணமாக நடமாடினார். தான் பெற்றெடுத்த தனது புத்திரராலேயே இகழ்ந்து பேசப்படுமளவுக்குச் சிறுமையடைந்தார்.

இதனிடையே கடும் தவமியற்றியதன் பயனாக எண்ணரிய மாய வரங்களைப் பெற்ற சூரன் தம்பியராய தாரகன், சிங்கனுடனும் அளவிடற்கரிய அசுர சேனையுடனும் இணைந்து மண்ணவரையடக்கியாண்ட இறுமாப்புடன் விண்ணுலகடைந்து இந்திராதி தேவருடன் ரிஷிகளையும் தேவ மாதரையும் சிறைப்பிடித்து வந்து அடிமைகளாக்கி, வருத்தி, வதைத்து மகிழ்ந்தான்.

இவற்றையெல்லாம் சகிக்கமுடியாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். அதுகேட்ட இறைவன் தனது நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு அக்கினிப் பொறிகளை வெளிவரச் செய்தார்.

அக்கினிப் பொறிகளைத் தமது திருக்கரங்களில் ஏந்திய அக்கினி பகவான் அவற்றின் சூடு தாங்க முடியாமல் சரவணப் பொய்கையில் விட்டுவிட்டார். அங்கு அக்கினிப் பொறிகள் ஆறு குழந்தைகளாகித் தாமரை மலர்கள்மீது தவழ்ந்தனர். குழந்தைகளைக் கண்டு தூக்கிய கார்த்திகை மாதர் தமது முலைப்பாலை ஊட்டி வளர்த்து வரலாயினர். இதனால் முருகனுக்குக் கார்த்திகேயன் என்ற பெயரும் உண்டானது. இதனிடையே இறைவன் இறைவியுடன் சேர்ந்து சரவணப் பொய்கைக்கு எழுந்தருளினர். அப்போது குழந்தைகளின் அழகையும் ஓடியாடி விளையாடும் திறனையும் கண்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். இறைவன் குழந்தைகளுக்கு ஞான உபதேசம் செய்தருளினார்.

குழந்தைகளுடைய அழகில் மயங்கிய இறைவியாகிய உமையம்மை குழந்தைகள் அறுவரையும் ஒன்றாக வாரியணைத்து உச்சிமோந்தபோது குழந்தைகள் ஒன்றாகி ஆறுமுகமும் பன்னிரு தடந்தோளுமாக உருவாயது. இதனையே "ஆறிரு தடந்தோள் வாழ்க; அறுமுகம் வாழ்க" என்று கந்தபுராணம் பேசுகிறது.

இறைவனுடைய ஈசானம், தற்புருடம் ஆகிய ஐந்து முகங்களுடன் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகமானது என்பது வரலாறு.

இங்கு ஐந்தாவது முகம் மாறுபடு சூரனை வதைத்த முகமாகும். இங்கு ஐந்தாவது முகம் ஆறாவது முகமாகி வீரவாகு தேவர் முதலான தளகர்த்தருடன் சேர்ந்து மாறுபட்ட அரசாட்சி செய்த சூரனுடன் போர் செய்து மண்ணவருக்கு விமோசனமளித்துத் தேவர்களுடன் தேவியரையும் சிறையிலிருந்து விடுவித்தமை ஐந்தாவது முகமாகும். இங்கு சூரன் முருகப்பெருமானால் கொல்லப்படவில்லை. ஏனெனில் சூரன் ஆணவம். அது அழிவடையாததாகும். ஆனால் வாட்டி வதைத்து வலிமையைக் குறைக்க முடியும். அதையே இங்கு முருகப்பெருமான் செய்தருளினார்.

"மாறுபடு சூரனை வதைத்த முகம்" என்பதை நோக்கும்போது இது நன்கு புலப்படும். ஆனால் சூரன் தனது தவத்தின் வலிமையினால் இறத்தலின்றி மயிலாகவும் சேவலாகவும் உயிர் வாழவே விரும்புகிறான். முருகப் பெருமான் தனது ஞான சக்திவேல் கொண்டு சூரனது உடம்பை இரு பாதிகள் ஆக்கினார். அவற்றில் ஒரு பாதி சேவலாகவும் மறுபாதி மயிலாகவும் உயிர் பெற்றன.

*நீ துணிவுள்ளவனாக இருந்தால் அச்சம் வராது.*

இவற்றில் மயிலை வாகனமாகக் கொண்டு மயில்வாகனராகவும் சேவலைக் கொடியாகக் கொண்டு சேவற்கொடியோன் எனவும் பெயர் பெற்றார். இது அறக் கருணையாகும். சேவல் கூவுவதை நோக்குவோமாயின் "முருகனே; வா" என்பதுபோல் அமைகிறதைக் காணலாம்.

அருணகிரிநாத சுவாமிகள் பாடிய "ஏறுமயில் ஏறி..." என்ற திருப்புகழின் ஆறாவது முகம் "வள்ளியை மணம் புரிய வந்த முகம்" என்று கூறுகிறது. முருகப்பெருமானுக்கு வள்ளி தெய்வானை ஆகிய இரு மனைவியர் உளர். அவ்விதமிருக்க வள்ளியை மாத்திரம் மணம் புரிய ஒரு முகம் கொண்டமை வியப்பளிக்கின்றதோ? இது ஒரு சிக்கல். இதனை அவிழ்ப்பதை நோக்கமாகக் கொண்டு சுவாமிகள் ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானிடம் விண்ணப்பிக்கின்றார் போலும்.

அசுர சேனையை அழித்துச் சூரனை வதைத்து வாட்டி வலிகெடச் செய்த தேவர்களுடன் தேவியரையும் சிறைமீட்டுதவிய மகிழ்ச்சியில் திளைத்த தேவேந்திரன் தெய்வநாயகி அம்மையாரை முருகப்பெருமானுக்குத் திருமணம் செய்து வைக்கிறான். இது கடிமணமோ அன்றிக் காதல் மணமோ இல்லை. பெற்றோரின் சம்மதத்துடன் நடைபெற்றதாகும்.

ஆனால் வள்ளி திருமணம் அவ்வாறு நடைபெறவில்லை. நாரத முனிவர் பூலோக உலா வந்தார். வனத்திலே கானம் கேட்ட திசையாக விரைந்தார். பரண்மீது நின்று ஆலோலம் பாடித் தினைக் கதிர் உண்ண வரும் கிளிகள், குருவிகளையும் கவண்வீசி விரட்டியபடி நின்ற வள்ளியின் குரலின் இனிமையையும் மேனியழகினையும் கண்டும் கேட்டும் மகிழ்ந்தவர் முருகனிடம் வந்து வர்ணித்தார். நாரதரின் வர்ணனை கேட்ட முருகப் பெருமான் ஏதோவொரு ஈர்ப்புச்சக்தி கொண்டிழுக்க வேடுவனாக வில்லும் அம்பும் கையில் கொண்டு வனம் சென்று சாகசம் பொழிகிறார். அண்ணன்மாரும் தந்தையும் வரக்கண்டு நரைத்த முடிதாங்கி இயலாமை காட்டி வள்ளியிடம் உணவுண்டு விக்கல் எடுத்து நீர் குடிக்கக்கேட்டு மணம் புரியக் கேட்கிறார். வள்ளி மறுக்கிறார்.

ஈழநாட்டிலே தென்கிழக்கு மூலையில் அருணகிரிநாத சுவாமிகள் கதிர்காமத்திலிருந்து அருளாட்சி புரியும் கந்தப் பெருமான்மீது "இறவாமல் பிறவாமல்" என்றொரு திருப்புகழ் பாடியுள்ளார். அதில் வள்ளியை மணம் புரியவந்த முகத்தின் தாற்பரியம் ஓரளவு பேசப்படுகிறது. இறவாது பிறவாது ஆளுமாறு கேட்டவர் பிறவாகித் திரமான பெருவாழ்வு தரக் கோருகிறார். இதுவே பேரின்பப் பெருவாழ்வாகும். ஜீவாத்மாவுடன் இரண்டறக் கலந்து பேரின்ப நிலை அடைதலேயாகும்.

முருகப் பெருமானது சக்திகள் மூன்று. அவை இச்சை, ஞானம், கிரியை என்பன. இச்சாசக்தியாகிய வள்ளிநாயகி ஞான சக்தியாகிய முருகன் கைவேலுடன் இணைந்து கிரியா சக்தியாகிய தெய்வநாயகி வெளிப்பட மலபரிபாகமகன்று சத்திநிபாதம் மேலோங்கிப் பரிபக்குவ நிலை எய்திச் ஜீவாத்மா பரமாத்மாவின் பாதாரவிந்தம் சேரும். இதுவே வள்ளியை மணம் புரிய வந்த முகம் ஒன்றின் தத்துவமாகும்.

"ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமான் வாழ்க"
"அருணகிரிநாத சுவாமிகளின் நாமம் வாழ்க"
"திருப்புகழ் அமிழ்தம் வாழ்க"

*மனிதனுக்கு மேலே இருக்கும் சிற்றரசன் அவனது மனச்சாட்சி.*

(தொடர்ச்சி....

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

திருதராஷ்டிரன், "விதுரா! அறிந்து கொள்ள முடியாத தர்மத்தை நன்றாக அறிந்து கொள்ளக்கூடிய, இந்தப் புத்தி மார்க்கம் எல்லாவற்றையும் விரிவாகச் சொல்" என்று கேட்டான்.

விதுரர், சம்சாரமாகிய காடு எப்படி இருக்கின்றது? என்பதை ரிஷிகள் சொல்கிறார்கள். சுயம்புவான பரமாத்மாவை வணங்கி, அதை இப்போது நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

பெருங்காடு ஒன்று, அங்கிருந்த ஒரு அந்தணன், சுலபமாக நுழைய முடியாததும், மாமிசம் முதலியவைகளால் நிறைந்ததுமான மற்றொரு பெரும் காட்டை அடைந்தான். அந்தக் காடு சிங்கம், புலி, யானை, கரடி முதலியவைகளின் கூட்டங்களால் சூழப்பட்டிருந்தது. அந்த விலங்குகளோ மிகவும் கோரமான பெரும் சப்தம் உடையவைகளாகவும் மிகவும் பயங்கரமான உக்கிரமான வடிவம் உடையனவாகவும் மாமிசம் உண்பவைகளாகவும் இருந்தன. மிகவும் பயங்கரமான விலங்குகளுடன் கூடிய அந்தக் காட்டைப் பார்த்த அந்தணன் மிகவும் பயந்தான். மயிர்க் கால்கள் சிலிர்த்தன. தன்னைக் காத்துக் கொள்வதற்காக அங்கும் இங்குமாக ஓடி அந்தக் காட்டில் அலைந்தான். இப்பொழுது கோரமான ஒரு பெண்ணும், நான்கு பக்கங்களிலும் வலைகளால் மூடப்பட்டதும், மலைகளைப்போன்ற ஐந்து தலை நாகங்களாலும் ஆகாயமளாவி வளர்ந்திருந்த பெரிய மரங்களாலும், எல்லாத் திசைகளிலும் சூழப்பட்டதுமான ஒரு பெருங் காட்டைக் கண்டான்.

அந்தக் காட்டின் நடுவில், புற்களால் சூழப்பட்டு, கொடிகளால் மறைத்து மூடப்பட்டிருந்த ஒரு கிணறு இருந்தது. மறைந்திருந்த அந்தக் கிணற்றில் அந்த அந்தணன் விழுந்தான். விழுந்தவன் அந்தக் கிணற்றில் நெருங்கி வளர்ந்திருந்த கொடிகளைப் பிடித்துக்கொண்டு தொங்கினான். கால் மேலாகவும், தலை கீழாகவும் தாங்கப்பட்ட ஒரு பெரிய பலாப்பழம் போல அந்தக் கிணற்றில் தொங்கினான்.

அவனுக்கு அந்த இடத்தில் மறுபடியும் வேறு தொல்லைகள் உண்டானது. கிணற்றின் நடுவில் பலம் பொருந்திய ஒரு பாம்பைப் பார்த்தான். கிணற்றின் மேலே பெருத்த யானை ஒன்றைக் கண்டான். அந்த யானைக்கு ஆறு முகங்கள், கறுப்பு மேலிட்ட பல நிறங்கள், பன்னிரண்டு கால்கள் இருந்தன. அந்த யானை கொடிகளாலும் மரங்களாலும் மூடப்பட்டிருந்தது. நான்கு புறமும் சுற்றியபடி இருந்த அந்த யானையை அந்தணன் கண்டான். அவன் பிடித்துக்கொண்டு தொங்குகின்ற கொடிகள், மரங்கள், கிளைகள் முதலானவைகளில் பலவிதமான வடிவம் கொண்ட கோரமான வண்டுகள் சூழ்ந்து மொய்த்துக்கொண்டு தேனைக் குடித்துக் கொண்டிருந்தன. அப்போது தேன் ஒழுகிப் பெருகிக்கொண்டிருந்தது. அந்தத் தேனைக் கிணற்றில் தொங்கிக் கொண்டிருக்கும் அந்தணன் குடிக்கலானான். சங்கடத்திலிருந்தாலும் தேனைக் குடிக்கின்ற அவனுடைய தாகம் தீரவில்லை. திருப்தி அடையாதவனாக மறுபடியும் மறுபடியும் தேனைக் குடிக்க விரும்பினான். அவனுக்கு உயிரில்

*சிறு சிறு செலவுகளைப்பற்றி கவனமாயிரு. ஒரு சிறு ஓட்டையே பெரிய கப்பலை மூழ்கடித்துவிடும்.*

வெறுப்பு உ ண்டாகவில்லை. அந்தக் கடின மான நிலையிலும் உயிர்மேல் ஆசை இருந் தது. அப்போது கறுப்பும் வெளுப்புமான எலி கள், அந்தணன் தொங்கிக் கொண்டிருந்த கொடிகள் மரங்களின் வேர்களை அறுக்க ஆரம்பித்தன. காட்டுக்குள் துஷ்ட மிருகங் களுடன் மிகவும் கோரமான பெண் இருப்ப தால் அவனால் காட்டுக்குள் போகமுடியாது. கிணற்றில் கீழேயோ பாம்பு, மேலே யானை. கீழும் போகமுடியாது மேலும் போக முடி யாது. இவ்வளவு தொல்லைகளுடன் எலிகள் வேரை அறுக்கும் தொல்லையும் சேர்ந்து கொண்டது. தேன்மீதுள்ள ஆசையினால் தேனீக்கள் வேறு அவனைக் கொட்டின. சம்சாரமாகிய அந்தக் காட்டில் தள்ளப்பட்ட வனாக அந்த அந்தணன் வசிக்கிறான். இவ் வளவு இன்னல் ஏற்பட்ட நேரத்திலும் உயிர் வாழும் ஆசையை மட்டும் அவன் விட வில்லை. இவ்வாறு விதுரர் பதில் கூறினார்.

திருதராட்டிரன், விதுரா! அவன் கஷ்ட மான இடத்தில் வசிக்கிறான். ஐயோ! இது மகா துக்கமல்லவா? அவனுக்கு அந்த இடத் தில் எப்படி சந்தோஷமாவது அன்பாவது உண்டாகும்? அவன் வசிக்கும், தர்மசங்கட மான அந்த இடம் எங்கே இருக்கிறது? அவனை எப்படிக் காப்பாற்றுவது? எல்லாவற்றையும் விரி வாகச் சொல். தகுந்ததைச் செய்வோம். ஏனென்றால், அவனை மேலே எடுத்து விடு வதில் எனக்கு மிகுந்த கருணை உண்டாகி உள்ளது என்றான்.

மன்னா! மோட்சத்தை (வீடுபேற்றை) அறிந்தவர்களால் இந்தக் கதையானது சொல் லப்பட்டது. மனிதன் இதனால் பரலோகத்தில் நல்ல கதியை அடைகின்றான். காடு என்று எது சொல்லப்படுகிறதோ அது, பிறப்பும் இறப்புமாகிய பெரிய பிறவிகள்தான். நுழைய முடியாத மற்றொரு காடு என்பது குடும்ப வாழ்வு. துஷ்ட மிருகங்கள் என்று சொல்லப் பட்டவை நோய்கள், அந்தக்காட்டில் வாழும் கோரமான பெண் என்பது உருவத்தையும் நிறத்தையும் அழிக்கும் முதுமை என்று கற் றறிந்தவர்கள் சொல்கிறார்கள். கிணறு என்பது உடம்பு. கிணற்றின் கீழே இருக்கும் பெரும் பாம்பு என்பது யமன். யமன் உடம் பெடுத்த எல்லாப் பிராணிகளினதும் உயிரை யும் எடுக்கும் அந்தகன். கிணற்றின் மத்தி யில் தொங்குகின்ற கொடி, அதாவது எதில் அந்த மனிதன் மாட்டிக்கொண்டு, பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கிறானோ அது, மனிதர் களுக்கு இருக்கும் உயிர் வாழ்வதில் உள்ள பிடிப்பு- ஆசை.

அரசே! கிணற்றின்மேலே நான்கு புற மும் சுற்றிக்கொண்டிருக்கும் யானை என்று சொன்னேன் அல்லவா? ஆறு முகங்கள், பன்னி ரெண்டு கால்களுடன் அது என்ன தெரியுமா? யானை என்பது ஆண்டு (வருடம்) ஆறுமுகங் கள் என்பது இரண்டு மாதங்கள் சேர்ந்த பரு வம். பன்னிரெண்டு கால்கள் என்பது பன்னி ரெண்டு மாதங்களைக் குறிக்கும். வேரை அறுக்கும் கறுப்பு வெளுப்பான அந்த இரண்டு எலிகள் இரவும், பகலும் ஆகும். அந்த மரத்திலுள்ள தேனீக்கள் காமங்கள் என்று சொல்லப்படுகின்றன. ஒழுகிப் பலவாறாகப் பெருகிக்கொண்டிருந்த தேனைக் காமச்சுவை யென்று தெரிந்துகொள்ள வேண்டும். அதில் மனிதர்கள் பற்றுதல் உடையவர்களாக இருக் கின்றார்கள். அறிவாளிகள் மனித வாழ்வின் சக்கரத்தை இப்படி அறிந்துகொள்கிறார்கள். அறிந்து கொள்வதனால், சக்கரத்தின் கயிறு களை எல்லா விதத்திலும் அறுக்கிறார்கள். இவ்வாறு திருதராஷ்டிரனுக்கு அந்தணனின் கதையின் தத்துவத்தை விரிவாகவும், தெளி வாகவும் விதுரர் எடுத்துச் சொன்னார்.

(தொடரும்...

*சிறிய கடன் கடனாளியை உருவாக்கும். பெரிய கடன் எதிரியை உருவாக்கும்.*

# அறுபத்துமூன்று நாயன்மார்

– திரு பொன். சின்னையா அவர்கள் –

சைவம் என்பது சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம். ஆரியர் வருகையோடு வேத காலத்திற்றான் தோன்றியது என முன்பு பலராலும் கருதப்பட்டது. ஆனால் இந்த நூற்றாண்டில் பல அகழ் வாராய்ச்சியின் பயனாக சைவமும் சிவன் வழிபாடும் வேத காலத்திற்கு முற்பட்டது என்பது நிரூபணமாகியது.

மொகஞ்சதாரோ- கரப்பா அகழ் வாராய்ச்சிகளிலிருந்து ஆரியர் வருகைக்கு முன்பே ஒரு நாகரிகம் இந்திய துணைக் கண்டத்தில் இருந்ததென்பதும் அது திராவிட நாகரிகம் என்பதும் அகழ்வாராச்சி சான்றுகள்மூலம் கிடைத்துள்ளன. இந்த அடிப்படையில் மேலை நாட்டறிஞர் பலரும் ஆரியர் வருகைக்கு முற்பட்டது சைவம் என குறிப்பிடுகின்றனர். ஜி.யு. போப் என்ற மேலை நாட்டறிஞர் "ஆரியர் வருகைக்கு முன்பே தென்னிந்தியாவில் நிலவிய சமயமே வரலாற்றுக்கு முற்பட்ட சைவசமயம்" எனத் தமது "திருவாசகம்" என்ற நூலில் குறிப்பிடுகின்றார். சைவமும் தமிழும் பின்னிப்பிணைந்த நிலையில் திருக்குறள் போன்ற நூல்கள் சைவ சமய அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டுள்ளதைக் காணமுடிகிறது. "கண்ணுதற் பெருங் கடவுளும் காழகமோடமந்து ஆய்ந்து" என்ற பாடல் வரிகள் எமக்கு சைவத்தின் பெருமைதனை பறைசாற்றி நிற்கின்றது.

சைவசமய வரலாற்றில் நாயன்மாருக்கு முக்கிய இடமுண்டு. நாயன்மார் என்பது தலைவர் அல்லது முதன்மையானவர் என்ற பொருள் குறித்து நிற்கின்றது. பெரியபுராணத்தில் அறுபத்துமூன்று நாயன்மார்களைப்பற்றி சேக்கிழார் சுவாமிகள் மிக அழகாகச் சித்தரிக்கின்றார். திருத்தொண்டர் பெரியபுராணத்தில் இந்த அறுபத்துமூன்று நாயன்மாருடன் சேக்கிழாரையும் சேர்த்து அறுபத்துநான்கு நாயன்மார்களாக சைவ உலகம் இன்று போற்றுகின்றது. திருவாசகத்தை யாத்த மாணிக்கவாசக சுவாமிகளை அறுபத்து மூன்று நாயன்மார் வரிசையில் சேர்க்கப்படவில்லை.

நாயன்மாரின் பாடல்கள் இலக்கியச் சுவைமிக்க இன்தமிழ்க் கவிதைகள் ஆகும். சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்படும் வாராந்த நிகழ்வின்பின் நடைபெறும் அன்னதான நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக அமையும் அறுபத்து மூவர் குருபூசை நிகழ்வில் முருகனை ஒருவராக இருத்தி அறுபத்திநான்கு நாயன்மாருக்கும் நடைபெறும் குருபூசையில் பங்கு கொள்ளும் அடியவர் யாவரும் பக்திபூர்வமாக சிவபுராணம் ஓதுவதைக் காணும்போது எமது மெய் சிலிர்க்கிறது. திருவாசகத்தேன் பருகும்போது உள்ளம் உருகுகின்றது. இந்த அறுபத்துமூன்று நாயன்மார் பெயர்களை நாம் எப்போதும் மனத்திருத்தி வழிபட வேண்டும் என்ற அவா கருதி அவர்கள் பெயர்களை நாம் இங்கு குறிப்பிட்டுத் தெரிந்து கொள்வோம்.

| | |
|---|---|
| சிறுத்தொண்டர் | ஏனாதிநாதர் |
| மங்கையர்க்கரசியார் | திருமூலர் |
| விறமிண்டர் | நெடுமாறர் |
| இசைஞானியார் | இடங்கழியார் |
| திருக்குறிப்புத் தொண்டர் | சத்தியார் |
| திருநாவுக்கரசு சுவாமிகள் | பூசலார் |
| கழற்சிங்கர் | ஐயடிகள் காடவர்கோன் |
| நமிநந்தி அடிகள் | கணம்புல்லர் |
| சோமாசி மாறர் | மெய்ப்பொருள் |
| திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் | ஆனாயர் |
| முருகர் | மூர்க்கர் |
| திருநீலநக்கர் | சிறப்புலியார் |
| திருநீலகண்ட யாழ்ப்பாணர் | சடையர் |
| அமர்நீதியார் | இயற்பகையார் |
| கலிக்காமர் | மானக்கஞ்சாறர் |
| மூர்த்தியார் | சாக்கியர் |
| புகழ்ச்சோழர் | வாயிலார் |
| கூற்றுவர் | கண்ணப்பர் |
| பெருமிழலைக் குறும்பர் | அரிவாட்டாயர் |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் | சண்டேசுவரர் |
| கழற்றறிவார் | திருநீலகண்டர் |
| கலியர் | அப்பூதியடிகள் |
| கோட்புலியார் | கலிகம்பர் |
| செருத்துணையார் | எறிபத்தர் |
| புகழ்துணையார் | காரியார் |
| அதிபத்தர் | கோட்செங்கட்சோழன் |
| இளையான்குடிமாறர் | நேசர் |
| குலச்சிறையார் | கணநாதர் |
| குங்குலியக்கலயர் | முனையடுவர் |
| உருத்திர பசுபதியார் | காரைக்கால் அம்மையார் |
| திருநாளைப்போவார் | தண்டி அடிகள் |
| நரசிங்கமுனையரார் | |

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| ரமணன் ராஜகோபால் | வெள்ளவத்தை | 10000. 00 |
| ந. சிவபாலன் | கெருடாவில் | 2000. 00 |
| இ. தமிழ்ச்செல்வன் | கொழும்பு | 10000. 00 |
| S. தவபாலன் | கதிரிப்பாய் | 5000. 00 |
| சி. குகதாசன் | ஆவரங்கால் | 2000. 00 |
| கல்மடு மகா வித்தியாலயம் | வவுனியா | 5000. 00 |
| ஜெ. சிவகுமார் | ஆனைக்கோட்டை | 5000. 00 |
| ராஜ்குமார் பிருந்தா | | 5000. 00 |
| தி. சுதாகரன் | காரைநகர் | 10000. 00 |
| கு. அம்பிகைச்செல்வன் | உரும்பராய் | 20000. 00 |
| சு. பகீர் | உரும்பராய் | 10000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 6மூடை அரிசி |
| மு. முரளிதரன் | வல்வெட்டித்துறை | 20000. 00 |
| T. தம்பித்துரை | உரும்பராய் | 4000. 00 |
| மனோகரன் பிரவீன் | சித்தங்கேணி | 10000. 00 |
| வி. முரளிகார்த்திக் | அல்வாய் | 500. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | கரவெட்டி | 2000. 00 |
| திருமதி சிவனேசன் | தாவடி | 1100. 00 |
| A. ஜெயாநந்தன் குடும்பம் | கொழும்பு | 10000. 00 |
| K. நித்தியானந்தன் | நெல்லியடி | 2000. 00 |
| கு. சிவகுமார் மயிலணி | சுண்ணாகம் | 1000. 00 |
| செ. ஞானசபேசன் G.S | ஏழாலை | 4000. 00 |
| செ. சிவசுப்பிரமணியம் | மல்லாகம் | 10000. 00 |
| க. சிதம்பரநாதன் | மல்லாகம் | 1000. 00 |
| க. சாம்பவி | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| செ. ரமேஷ் | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| கி. சிவலிங்கம் | கோயிற்கடவை | 1000. 00 |
| K. வடிவேலு | குடத்தனை | 2000. 00 |
| ந. செல்வநாயகம் | பிரான்ஸ் | 3000. 00 |
| தா. துஷிந் | சுண்ணாகம் 1மூடை அரிசி | 5000. 00 |
| துரைச்சாமி ரஞ்சிதமலர் | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| திரு விக்னேஸ்வரமூர்த்தி | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | கோப்பாய் | 5000. 00 |

*சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு செய்தால் எந்த வேலையும் கடினமானதாக இருக்காது.*

| | | |
|---|---|---|
| பி. சஞ்சீவ்<br>பி. மயூரி<br>பி. அபியித் | கொக்குவில் | 10000. 00 |
| க. ராசரத்தினம் | காரைநகர் | 1000. 00 |
| இந்திரா கபே | நெல்லியடி | 10000. 00 |
| ஸ்ரீதேவி அரிசி ஆலை | அச்சுவேலி | 2மூடை அரிசி |
| யோ. சிவயோகசுந்தரம் | அமெரிக்கா | 29000. 00 |
| S. ராகவன் குடும்பம் | லண்டன் | 9000. 00 |
| ஐ. மன்மதராசா<br>ம. திவீனா<br>ம. மிதுனா<br>ம. மாலினி | தெல்லிப்பழை (U.K) | 5000. 00 |
| திருக்குமரன் குடும்பம் | தெகிவளை | 2000. 00 |
| கோ. உருத்திரா | மானிப்பாய் | 500. 00 |
| வே. சரவணபவானந்தமூர்த்தி குடும்பம் | கோண்டாவில் | 7000. 00 |
| S. செல்வம்ரதி | கொற்றாவத்தை | 1500. 00 |
| திரு குகதாசன் | கனடா | 1000. 00 |
| தியான் | கனடா | 1000. 00 |
| த. ஸ்ரீஸ்கந்தராசா | உடுப்பிட்டி | 5000. 00 |
| திருமதி அ. குணநாயகம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 5000. 00 |
| குகன் ஸ்ருடியோ | பருத்தித்துறை | 2000. 00 |
| ச. லலீசன் அச்சுவேலி | | 4மூடை அரிசி, 1புட்டி பருப்பு, 50தேங்காய் |
| நாகலிங்கம் வெதுப்பகம் | அச்சுவேலி | 1மூடை மா |
| நே. ஜெயக்குமார் | லண்டன் | 10000. 00 |
| நவரத்தினம் செங்கோடன் | கனடா | 15000. 00 |
| இ. கங்கைக்கரசி | மயிலிட்டி | 10000. 00 |
| செ. சபாநாயகம் J.P | மாலிசந்தி | 1000. 00 |
| S. உதயனன் குடும்பம் | கொழும்பு- 13 | 3000. 00 |
| க. சரவணபவான் | மட்டுவில் | 1000. 00 |
| Dr P. சிவபாலன் | உரும்பராய் | 5000. 00 |
| சி. மாணிக்கவாசகர் ஓட்டுமடம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| மா. உதயனன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ச. தெட்சணாமூர்த்தி | கோண்டாவில் | 1000. 00 |
| கு. அம்பிகா | கரவெட்டி (கனடா) | 6000. 00 |
| பேராசிரியர் சிவசாமிமூலம் செல்வி அ. அட்சரா | கொழும்பு | 1000. 00 |
| பேராசிரியர் சிவசாமிமூலம் வி. பூமணி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ஆ. விநாயகமூர்த்தி | கரவெட்டி | 1000. 00 |

(தொடரும்...

# இடைக்காடு வள்ளிப்பிள்ளையின் அற்புதக் கதிர்காம யாத்திரை

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

பழமையும் புதுமையும் மிக்க கதிர்காமக் கந்தன் பல்வேறு அற்புதங்களின் நாயகன். கதிர்காம உற்சவம் கொடியேற்றம் என்றால் ஏதாவது அற்புதம் நிகழ்வது அன்றைய மரபு. "சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? என்று ஔவையைத் திணறடித்த முருகன் செய்த அற்புதங்களுக்கோ எல்லையில்லை. அப்போதெல்லாம் அவன் அடியார் முன் தோன்றி அவர்கள் குறை தீர்த்தருளுவான்.

அந்தக் கதிர்காமக் கந்தனின் அற்புதச் செயல்களில் ஒன்றுதான் இந்த வள்ளிப் பிள்ளையின் கதை. இது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் "இடைக்காட்டில்" இடம்பெற்ற தாகக் கூறப்படுகின்றது.

## "பலாக் கனியை கவர்ந்திழுத்த கதிர்காமக்கந்தன்"

"மிளகாய்ப் பழமும் சிலிர்த்துப் போய் விட்டது." ஆய ஆட்களில்லை. கூலிக்காரரைக் கேட்டால் நேரமில்லை என்று சொல்லுராங் கள். உவங்களைப் பார்க்கேலாது நாங்கள் தான் ஆயவேண்டும். நானும் மூத்தவனும் முன்னுக்குப்போய் பழத்தை ஆயிறம். பழஞ் சோற்றைக் கரைத்துக்கொண்டு கெதியாய் வா" என்று மனைவி வள்ளிப்பிள்ளையிடம் கூறியபடி, நார்க்கடகத்தையும் சிறு பெட்டி களையும் எடுத்துக்கொண்டு மூத்த மகனுடன் தோட்டத்திற்கு விரைகின்றார் முருகுப் பிள்ளையார். இன்று சனிக்கிழமை. வகுப்பு இல்லை என்று கூறிக்கொண்டு ஒரு கைப் பெட்டியுடன் இரண்டாவது புத்திரன் தந்தை யின் பின் ஓடுகின்றான். கடைக்குட்டி மகள் பாலுக்கு அழுது பால் குடித்துவிட்டு ஏணை யில் தூங்குகிறது.

"பிள்ளை எழும்புமுன் பழஞ்சோற்று தண்ணியைத் தோட்டத்தில் கொடுத்துவிட்டு ஒரு கடகம் மிளகாய்ப் பழத்தையும் கொண்டு வரலாம்" என்றபடி பழஞ்சோற்றைக் கரைப் பதற்கு தண்ணீர் அள்ளக் குடத்துடன் சென்ற வள்ளிப்பிள்ளைக்குக் கிணற்றடியில் நின்ற பலா பழுத்து கமகம என்று மணக்கின்றது.

"ஐயோ முருகா! கதிர்காமக்கந்தா! உனக்கல்லோ முதற் பழத்தை நேர்ந்து விட்டனான். இப்ப இது பழுத்து மணக்கிறது. காகங்களும், அணில்களும் கண்டால் விடாது. கொத்திப் போடுங்கள். நான் இனி என்ன செய்வது? போன கிழமைதான் பழனி அண் ணையும் மனைவியும் கதிர்காம விழாவைப் பார்க்கப் போனவை. அவையட்டையாவது கொடுத்தனுப்பியிருக்கலாம். அவையும் போயிட்டினம். இப்ப நான் இதை யாரிட்டை கொடுத்தனுப்புகிறது? கதிர்காமமும் கொடி யேறி திருவிழா நடக்கிறது. இப்ப இப் பழத்தை கந்தனுக்குப் படைத்தால் நல்ல தாக இருக்கும். நல்லநேரம் பார்த்துத்தானே பலாப்பழம் பழுத்திருக்கு. தலைப்பழம் இதை எப்படியும் நான் நேர்ந்தபடி கதிர்காமக் கந் தனுக்குப் படைக்கவேண்டும் எனக் கூறிக் கொண்டு, குசினிக்குள் சென்று வெட்டுக் கத்தியை எடுத்துக்கொண்டு வந்து பலா அடிமரத்திலிருந்து பலாப்பழத்தை வெட்டிக்

வெற்றி என்பது நிரந்தரமல்ல. தோல்வி என்பது இறுதியானதுமல்ல.

கையில் எடுத்த வள்ளிப்பிள்ளைக்கு அதற்குப்பின் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

முருகுப்பிள்ளை "பழம் ஆய்ந்து கடகம் நிரம்பிவிட்டது. இன்னும் வள்ளிப்பிள்ளையைக் காணவில்லை. பசியும் குடலைப் புரட்டுகிறது" எனச் சொல்லிக்கொண்டு வீட்டுப் படலையை அடைந்து "எடி வள்ளி என்ன செய்கிறாய்? பசி வயிற்றைப் புடுங்குது. இவள் மனிசி ஒருநாளும் இப்படி மினக்கிடுறதில்லை" என்று சொல்லிக்கொண்டு குசினிக்குள் சென்றார். அங்கு குழந்தை உறங்கிக் கொண்டிருக்கிறது. "அப்ப இவள் எங்கே போனாள்" என்று சொல்லிக்கொண்டு கிணற்றடிக்குச் சென்றார். அங்கு குடம் இருக்கக் கண்டு இரண்டு பிள்ளைகளும் கதறியழத் தொடங்கினர். இச்சத்தத்தைக் கேட்டு அயலவர்களும் வந்து, கிணற்றுக்குள் சுளியோடி ஒருவரை இறங்கும்படி கூறினர். அங்கு தடையமும் இல்லாதிருந்து, சுளியோடி வெளியேறினான். ஊரவர்கள் ஊரின் நாலா திசையும் சென்று பார்த்தும், காணாமையினால் முருகுப்பிள்ளை வீட்டில் ஒன்று கூடி ஆலோசனை செய்தனர். ஏறக்குறைய இரண்டு மணித்தியாலங்கள் சென்றிருக்கும். வள்ளிப்பிள்ளை தலைவிரிகோலமாக கையில் பலாக்கனித் துண்டும், மாவிளக்கும், ஒரு பை நிறைய விபூதிச் சரையும், நெற்றியில் விபூதி சந்தனப் பொட்டும், கதிர்காமக் கந்தா! கலியுகவரதா! என்று கூறிக்கொண்டு வீட்டினுள் நுழைந்தாள். முருகுப்பிள்ளை "வள்ளி நீ எங்கே போய் வருகிறாய்?" என வினவ, வள்ளி "நான் கதிர்காமக்கந்தனிடம் சென்று வருகிறேன்" எனப் பதில் அளித்தாள். அங்கு நீ யாரைக் கண்டாய் எனக் கேட்க, பழனி அண்ணனைச் சந்தித்ததாகவும், பழனி அண்ணை மாவிளக்கும், விபூதிச் சரையும் தந்ததாகக் கூறினாள். "கொஞ்ச நேரத்தில் நீ எப்படிக் கதிர்காமம் போய் வருவாய்? உனக்கென்ன விசரா? இதைச் சொன்னால் யாரும் நம்புவார்களா? கயிலாயம் சென்ற காரைக்கால் அம்மையா?" என்று ஆவேசமாக பல கேள்விகளைத் தொடுத்தார்.

இவற்றையெல்லாம் அமைதியாகக் கேட்ட வள்ளிப்பிள்ளை நிதானமாகவும் புன்முறுவலுடனும் "பலாப்பழத்தை மரத்தில் இருந்து வெட்டியதும் நான் மாணிக்க கங்கையில் பலாப்பழத்துடன் நீராடுவதையும் அதன் பின் கந்தன் சந்நிதியில் பலாப்பழத்துடன் நிற்பதையும் உணர்ந்தேன். எப்படி வந்தேன்? எதன்மூலம் வந்தேன்? என்பது எனக்குத் தெரியாது. பலாப்பழம் வெட்டியது தொடக்கம் கதிர்காமக் கந்தனின் சிந்தனையே என் மனதில் இருந்தது" என்றாள். ஊரவர்கள் இந்த உண்மையை, பழனி கதிர்காமத்தால் வந்தபின் அறியலாம் என்று கூறிக்கொண்டு கலைந்து சென்றனர்.

முருகுப்பிள்ளையும், ஊரவர்களும் பழனி வந்ததும் விசாரித்தனர். "பழனி, வள்ளிப்பிள்ளையைக் கதிர்காமத்தில் கண்டதாகவும் கதைத்ததாகவும், மாவிளக்கு, விபூதிப்பை கொடுத்ததாகவும் கூறினான். முருகுப்பிள்ளைக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டது. தன் மனைவியின் உயர்ந்த பக்தி நிலையை அப்பொழுதுதான் உணர்ந்தார்.

புனிதவதியார் ஆண்டவனிடமிருந்து மாம்பழத்தை யாசித்துப் பெற்றார். வள்ளிப்பிள்ளையிடமிருந்து கதிர்காமக் கந்தன் பலாப்பழத்தைக் கவர்ந்தெடுத்தார். இருவரும் ஆண்டவனின் அம்மைகளே.

என்னே அவன் அருள்! என்னே அவன் அற்புதம்! அவன் நம் கலியுகவரன் அல்லவா!

(இவ்விடயம் இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் கும்பாபிஷேக மலரில் இருந்து எடுக்கப்பட்டது.)

*நேரத்தைத் தள்ளிப்போடாதே. தாமதத்தால் அபாயமான முடிவே ஏற்படும்.*

# திருமுறை பாடிப் பணிவோம்

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் –

இறையருள் பூரணமாகக் கிடைக்கப்பெற்றோரால் பாடப்பட்ட பாடல்கள் சக்தி மிகுந்தவை; மகத்துவம் பொருந்தியவை என்பதற்கு உதாரணங்களாகப் பல தேவாரங்களை இத்தொடரில் நோக்கினோம். இரண்டாம் திருமுறையிலுள்ள அத்தகைய சில தேவாரங்களை இங்கு எடுத்துக்கொள்வோம்.

"சிவநேசர்" என்ற வணிகர் சிவனடியார்கள்மேல் மிகுந்த பக்தி கொண்டவர். திருஞான சம்பந்தப் பெருமான் செய்த அற்புதங்களை அறிந்து அவரிடத்து ஆரா அன்பு பூண்ட சிவநேசர் தன் மகள் பூம்பாவையையும் தன் செல்வத்தையும் அவருக்கு அளிப்பதென உறுதி பூண்டு அது குறித்து உற்றார் உறவினர்களுக்கும் தெரிவித்து இருந்து வருகையில் பூம்பாவையை அரவம் தீண்டியதால் அவள் மரணமடைந்தாள். மகளின் உடலுக்கு எரியூட்டி எஞ்சிய அவளது என்புகளையும் சாம்பரையும் ஒரு குடத்தில் சிவநேசர் சேமித்து வைத்தார்.

ஆளுடைய பிள்ளை திருவொற்றியூருக்கு வருகை தந்தபோது அதை அறிந்த சிவநேசர் அங்கு சென்று திருமயிலைக்கு வரும்வண்ணம் வேண்டியதனால் சம்பந்தப் பெருமானும் அங்கு எழுந்தருளினார். பூம்பாவைக்கு நேர்ந்ததை அறிந்து, பூம்பாவையின் என்பும் சாம்பரும் இருந்த குடத்தைக் கொணரச் செய்து பின்வரும் தேவாரத்தைத் தொடக்கமாகக் கொண்ட பதிகத்தைப் பாடவும் ஈசன் திருவருளால் பூம்பாவை தோன்றி ஆளுடையபிள்ளையை வணங்கி நின்றாள். பதிகத்தின் முதலாவது தேவாரம் வருமாறு.

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்

பூம்பாவாய், தேன்கொண்ட புன்னைமரங்களின் அழகிய சோலைகளும் இள மயில்களும் நிறைந்த கபாலீச்சரத்தில் வீற்றிருப்பவன்மீது நெருங்கிய பக்திகொண்ட உருத்திர பல்கணத்தோருக்கு (சிவனடியார்களுக்கு) திருவமுது செய்விப்பதைக் காணாமல் செல்வாயோ? என்னும் பொருள் கொண்டது இத்தேவாரம். இதன் பண் சீகாமரம்.

இதனைத் தொடர்ந்து இப்பதிகத்தில் வரும் தேவாரங்களிலும் கபாலீச்சரத்தில் நடைபெறும் திருவிழாக்கள் பற்றிக்கூறி அவற்றைக் காணாது பூம்பாவை செல்லலாமா? என்று கேட்டு அவர் பாடியுள்ளார். இவ்வாறு அற்புதம் நிகழ்த்திய தேவாரப்பதிகம் இதுவாகும்.

பாண்டிய மன்னன் சமண சமயத்தைச் சார்ந்ததனால் கவலை கொண்ட அரசியார் மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சம்பந்தப்பெருமானின் உதவியை நாடினர். அவரும் பாண்டியநாடு செல்ல ஆயத்தமானார். "நாளும் கோளும் நன்றாயில்லை. சமணர்கள் வஞ்சகம் நிறைந்தவர்கள். அங்கு செல்ல வேண்டாம்" என அப்பரடிகள் ஆளுடைய பிள்ளையைத் தடுத்தார். "எம்பெருமான் உள்ளத்திற் குடிகொண்டிருக்கையில் எல்லாமே நல்லவையாகவே இருக்கும்" என்று கோளறு பதிகம் பாடி அப்பரைச் சமாதானம் செய்து பெருமான் தென்னாடு நோக்கி அன்பர்கள் புடைசூழப் புறப்பட்டார்.

*எப்போதும் உண்மையை மறைக்காமல் சொல்கின்ற மனத்திண்மை வேண்டும்.*

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
ஞாயிறுதிங்கள்செவ்வாய் புதன் வியாழன்வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறுநல்ல நல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்குமிகவே

என ஆரம்பிக்கிறது கோளறு பதிகம். இதன் பண் பியந்தைக் காந்தாரம். மூங்கிலையொத்த தோளையுடைய உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்டவன். (பாற்கடல் கடைந்தபோது) விடத்தை உண்டு அதனைக் கண்டத்தில் வைத்திருப்பவன். மிகச் சிறந்த வீணையை மீட்டியவாறு மாசற்ற சந்திரனையும் கங்கையையும் முடிமேல் அணிந்து என் உள்ளத்தில் புகுந்திருப்பதனால் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது ஆகியவை சிவனடியார்களுக்கு தீங்கற்றவையாக மிக நல்லவை யாகும் என இத்தேவாரத்தில் தெளிவுபடக் கூறியுள்ளார். இப்பதிகத்திலுள்ள தேவாரங்கள் தீமை செய்யக்கூடியவற்றையெல்லாம் குறிப்பிட்டு சிவனடியார்களுக்கு ஈசன் அவர்களது உளம் புகுந்ததனால் அத்தீமை பயப்பவை மிக நல்லவையாக அமையுமென உறுதிபடக் கூறுகின்றன. நல்ல நல்ல அவை நல்ல நல்ல எனப் பலமுறை கூறும்போது அதுவே மந்திரமாகி அனைத்தையும் நல்லதாக மாற்றிவிடுகிறது. “ஆசறு” என்பதும் அதனுடன் சேரும்போது தீமை அறுபட்டு அவை நல்லதாகிவிடுகின்றன என்று பொருள் தருகிறது. தீங்கு அகலவில்லை. மறையவில்லை. அறுத்து அகற்றப்படுகிறது. சத்திர சிகிச்சையின்போது ஆபத்து விளைவிக்கக் கூடிய பாகத்தை அறுத்து அகற்றுவதுபோல் அகற்றப்படுகிறது. அதனால் தீயவை நல்லவையாகின்றன.

கிரகங்கள் கஷ்டங்கள் தரும் காலத்திலும், துன்பங்கள் நேரும்போதும் இப்பதிகத்தைப் பாராயணம் செய்து, பலரும் பயன்பெற்றுள்ளனர். நோய்கள், இயற்கை அனர்த்தங்கள் வரும்வேளைகளிலும் இதனைப் பாடிப் பயன் பெறலாம்.

கொதியுறுகாலனங்கி நமனோடுதூதர்
கொடுநோய்க ளானபலவும்
அதிகுணநல்லநல்ல வவைநல்ல நல்ல

என்றும்

வெப்பொடுகுளிரும்வாத மிகையானபித்தும்
வினையான வந்துநலியா

எனவும்

வெஞ்சினவவுணரோடு முருபிடியுமின்னு
மிகையான பூதமவையும்
அஞ்சிடுநல்லநல்ல வவைநல்லநல்ல

என்றும் இப்பதிகம் இவற்றுக்கான மந்திரங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. இதேபோன்று பலவற்றையும் குறித்துள்ளதால் அனைத்து இன்னல்களையும் போக்கவல்ல சக்தி கொண்டது இப்பதிகம்.

*அடுத்தவனுக்கு ஆயிரம் அறிவுரைகள் சொல்வதைவிட, அதில் ஒன்றைக் கடைப்பிடி.*

பாண்டியநாடு சென்ற சம்பந்தப்பெருமான் மங்கையர்க்கரசியாரையும் குலச்சிறையாரையும் சந்தித்து அவர்கள் ஒழுங்குசெய்து தந்த மடத்திலே தங்கியிருந்தார். இதனை அறிந்த சமணர்கள் மன்னனின் அங்கீகாரத்துடன் மடத்திற்குத் தீயிட்டனர். மடத்திலிருந்த அன்பர்கள் அதனைப் பரவவிடாது அணைத்துவிட்டனர். அந்த வெப்பத்தை "பையவே சென்று பாண்டியர்க் காகுக" என ஆளுடைய பிள்ளை பாடி முடிக்கவும் மன்னன் கொடும் வெப்பு நோயால் பீடிக்கப்பட்டான். மன்னனின் நோயைத் தீர்க்க சமணர்கள் பலவாறு எவ்வளவோ முயன்றும் இயலவில்லை.

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் ஞானசம்பந்தப் பெருமானின் உதவியை நாடினர். திருநீற்றுப் பதிகத்தினைப் பாடி சம்பந்தப்பிள்ளை திருநீற்றை அரசனுக்கு அணிவித்ததும் வெப்புநோய் விலகியது. "திருநீறு மந்திரம்" எனக் கூறும் அப்பதிகமே மந்திரமாக விளங்குகிறது.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

என்ற தேவாரத்தை முதலாகக் கொண்டது இப்பதிகம். இதன் பண் காந்தாரம். இத் தேவாரத்தின் பொருள் சிவந்த அதரங்களையுடைய உமையம்மையை இடப்பாகத்திலே கொண்டவனும் திருவாலவாயில் வீற்றிருப்பவனுமாகிய சிவபெருமானது திருநீறு மந்திரமாகும். திருநீறு தேவர்கள் அணிந்திருப்பது. அழகு தருவது, வணங்கப்படுவது, ஆகமங்களின் பொருளாயுள்ளது, சைவ சமயத்தில் உள்ளது.

இவ்வாறு தொடங்கும் பதிகம் தொடர்ந்து திருநீற்றின் பெருமையைக் கூறுகிறது. இதனைப் பாராயணம் செய்து திருநீறு அணிந்து சிவபிரானை வழிபட்டுவர உடற்பிணியும் பிறவிப் பிணியும் அகன்றுவிடும்.

இத்தகைய மகிமை நிறைந்த பல பதிகங்கள் இரண்டாம் திருமுறையினுள் இருக்கின்றன. அவற்றைத் தினந்தோறும் பாடிப் பயன் பெறுவோமாக.

---

## வாசகர் உள்ளத்திலிருந்து...

சந்நிதியான் ஆச்சிரமம் வெளியிடும் ஞானச்சுடர் மலரின் வாசகர்களில் யானும் ஒருவன் என்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலர் சந்நிதி வேலவனின் பாதத்தில் இருந்து வெளிவருகிறது. இங்கு சித்தர்கள் வந்து தங்கி வாழ்ந்துவந்த இடத்தில் இருந்து மாதம் தவறாது அழகான சந்நிதியானின் அட்டைப்படத்துடன் வெளிவருவதை காணக்கூடியதாக உள்ளது. இவ் இதழ் சமயம்- சமூகப்பணி சார்ந்து வருவதால் எனக்கும் இதனைப் படிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. இதேபோன்று ஏனைய மக்கள் மனதிலும் இச்சஞ்சிகை ஆர்வத்துடன் படிக்கத் தூண்டுகிறது. இவ்விதழ் இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் எம்மவர் ஆர்வத்துடன் வாசிப்பதுகண்டு மனம் நிறைவடைகிறது. மோகனதாஸ் சுவாமிகள் எப்போதும் நிகழ்ச்சி நடப்பதற்கு முன் மேடையில் ஏறிநின்று எக்கருமத்தை எடுத்தாலும் "சந்நிதியான் இருக்கின்றான். அவன் வழிகாட்டலில் செய்கின்றேன்" என்று எல்லோர் முன்னும் சொல்லிக் கருமத்தைத் தொடங்குவார். இவர் செய்யும் எல்லாக் காரியங்களுக்கும் சந்நிதி வேலவன் அகமகிழ்ந்து உறுதுணையாக நிற்கின்றான்.

பாடசாலை ஒழுங்கை. மல்லாகம்

**அ. மகேந்திரராசா**

*அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.*

# கதிர்காமக் கந்தன்

– திரு ம. சிவயோகசுந்தரம் அவர்கள் –

யோகர் சுவாமிகள் தமது நற்சிந்தனையில் “கதிர்காமத்தையனே உன் கழலடி நம்பி வந்தேன் என்னைக் கைவிட்டு விடாதே” என்று பாடியுள்ளார். கதிர்காமக் கந்தன் பல யோகியர், ஞானியர்க்கு அருவமாக நின்று அருள்பாலித்துள்ளான். மேலும் சர்வமத பிரியனாக எல்லா சாதி சமயத்தவரையும் தன்பால் ஈர்த்து அருள்பாலிக்கின்றான். பழைய கதிர்காமத்தை நினைக்கும்போது எம் மனம் கவலைப்பட்டாலும் யோகர் சுவாமிகள் உன்னை நம்பி வந்த எங்களைக் கைவிட்டு விடாதே என்று அன்றே பாடியதை நினைக்க எம் மனம் ஆறுதலடைகின்றது.

கதிர்காமத்தில் சிங்கள தமிழ் வருஷம், ஆடியில் வரும் திருவிழா (எசல பெரகரா) கார்த்திகைத் தீபம் என்பன விசேட திருவிழாக்களாக விளங்குகின்றது. கதிர்காமத் திருவிழா மற்றைய முருகனாலயங்களைவிட வேறுபட்ட முறையில் நடக்கும். இக்கோவிலில் வள்ளியம் மனும் முருகனும் எப்போதும் நேரே பார்க்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. ஆடியில் நடக்கும் திருவிழாவிற்கு நாற்பத்தைந்து நாட்கள் முன்பதாக வள்ளியம்மன் ஆலய பூசகர்கள் (கப்புறாளைமார்) பெரிய முருகன் கோவிலுக்கு சென்று அங்குள்ள பூசகர்களுடன் கதைத்து இரு பகுதியினரும் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிப்பார்கள். பின்னர் கன்னிக்கால் நாட்டுவதற்குரிய இரு மரக்கொப்புகள் காட்டிலுள்ள “கொளபாள” என்ற மரத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்டு அதற்குரிய பூசைகளை வள்ளியம்மன் தேவாலயத்தில் நிகழ்த்தி பெரிய முருகன் கோவில் வாசலின் இரு புறமும் நாட்டப்பட்டு பூசைகள் நிகழும்.

பின்னர் அந்திசாயும் நேரத்தில் முதலில் பக்கத்திலுள்ள விநாயகர் பெருமானுக்கு தீவட்டிகள், குடை, கொடி, ஆலவட்டங்கள் சகிதம் சகல மணிகளும் ஒலிக்க விஷேட பூசை நடைபெறும்.

பின்னர் பஸநாயக்கநிலமை (வீரவாகு தேவரை பிரதிநிதிப்படுத்துவர்) அவரது வாசஸ் தலம் (முருகன் கோவிலுக்கு எதிரிலுள்ளது) அழைத்து வரப்படுவார். அவர் கலியாணத்திற்குப் போடும் உடுப்பு (மகா அந்தும் என்று அழைக்கப்படும்) அணிந்து முருகன் கோவில் திரைச் சீலைக்கு அருகில் விளக்கேற்றி கலியாண ஊர்வலம் (மகுல் பெரகரா என்று சிங்களத்தில் அழைக்கப்படும்) ஆரம்பிக்க முருகனை வேண்டுவார். அன்று முருகனுக்கு வழமைபோல் நடக்கும் பூசைகள் எதுவும் நடைபெறாது. எல்லா வாத்தியங்களும் முழங்க பெரிய பூஷகர் (மகா கப்புறாளை) மற்ற பூசகர் சகிதம் உள்ளே இருந்து முருகனின் யந்திரம் உள்ள மறைக்கப்பட்ட பெட்டியை பயபக்தியுடன் வெளியே கொண்டு வருவார். அப்பொழுது பல யானைகள் சகிதம் அலங்கரிக்கப்பெற்ற யானை ஒன்றில் ஏற்றுவதற்கு ஆயத்தம் நடக்கும். பெரிய பூசகர் பட்டுபாவாடைமேல் பயபக்தியுடன் நடந்துவந்து எடுத்துவரப்பட்ட மறைக்கப்பட்ட யந்திரப் பெட்டியுடன் யானைமேல் ஏறி அமர்ந்திருப்பார். அப்பொழுது பஸநாயக்க நிலமையுடன் வள்ளியம்மனின் பரம்பரையில் வந்த ஆலத்தி அம்மாக்கள் இருபுறமும் நிற்பார்கள். ஆலத்தி அம்மாக்கள் ஒவ்வொரு நாளும் பூசைக்கு முதல் நாங்கள் ஆலத்தி எடுக்கும் முறையைப்

போலல்லாது வேறுமுறையில் ஆரத்தி எடுப்பார்கள். பஸநாயக்க நிலமை உடனே விநாயகர் ஆலயம் சென்று விநாயகரை வணங்கியபின் பெருமாள், புத்த பெருமான் ஆகியவர்களை வணங்கி யானையில் முன் நிற்பார். அவருக்கு மாலை விபூதி, பொட்டு ஆகியவை அணியப் பெற்றிருக்கும். முருகனின் யந்திரப் பெட்டியை வணங்கியபின் தமது சேவிதர்கள் சகிதம் ஊர்வலத்தை ஆரம்பிக்க சமிக்ஞை கொடுப்பார். அப்போது அரோகரா, சாது சாது என்று பக்தர்கள் பிரார்த்தனை பக்திபூர்வமாக ஒலிக்கும்.

மேலும் ஊர்வலத்தின் முன் "ஓம் வடிவேல் முருகா" என்ற பதாதைகள் வடக்கு கிழக்கிலிருந்து கால்நடையாக வந்த பக்தர்களால் ஏந்தி வரப்படும். கண்டிய நடனக்காரர் வேறுபட்ட காவடிகள் என்பனவும் ஊர்வலத்தில் செல்லும். இந்த ஊர்வலம் கோவில் பிர காரம் முழுவதும் சுற்றிவரும். ஒவ்வொரு கோவிலின் முன்னும் பஸநாயக்க நிலமை நிறுத்து மாறு சைகை காட்டுவார். அப்பொழுது அந்தக் கோவில் பூசகர்கள் முருகனை வரவேற்று பூசைகள் செய்வார்கள்.

ஊர்வலம் வள்ளியம்மன் ஆலயத்தை அடைந்ததும் பெரிய பூசகரால் முருகனின் யந்திரப் பெட்டி வள்ளியம்மன் ஆலயத்திற்குள் கொண்டு செல்லப்படும். அப்பொழுது ஆலத்தி அம்மாக்கள் ஆரத்தி எடுக்க பெரிய பூசகர் மற்றைய பூசகர் மாத்திரம் பட்டுப் பாவாடைமேல் வள்ளியம்மன் கோவிலுக்குள் செல்வார்கள். பெரிய பூசகர் (கப்புறாளை) அதை வள்ளியம்மன் கோவிலுக்குள் வைத்துவிட்டு வெளியே வந்துவிடுவார்கள். இவ் வேளையில் முருகன் கோவில் பூசகர்கள், பஸநாயக்க நிலமை, ஆலத்தி அம்மாக்கள், வள்ளியம்மன் பூசகர்களால் குளிர்பானம் வழங்கப்பட்டு வரவேற்பார்கள். ஆலத்தி அம்மாக் களுக்கு வெற்றிலை பாக்கும் வழங்கப்படும். இதன்போது கண்டிய நடன காரர்களின் நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கும். அப்போது பஸநாயக்க நிலமை மிகவும் பக்திபூர்வமாக வணங்கியபடி நிற்பார். சுமார் அரை மணித்தியாலத்தின் பின் முருகனின் அனுமதி கிடைத்ததும் தனது கையை உயர்த்தி நடனம் முதலியவற்றை நிறுத்துமாறு கூறுவார் அப்பொழுது அமைதி நிலவும். உடனே பெரிய கப்புறாளை உள்ளே சென்று அங்கு வைத்துவிட்டுவந்த முருகனின் யந்திரப் பெட்டியை பயபக்தியாக யானைமேலேற்றுவார். அப்பொழுது ஆலத்தி அம்மாக்கள் தாங்கள் மென்றுகொண்டிருக்கும் வெற்றிலைபாக்கை கண்ணூறு, நாவூறு ஏற் படாதிருக்க வெளியில் துப்புவார்கள். இப்போது முருகப்பெருமான் நேரே தமது பெரிய கோவிலுக்கு செல்வார். வாசலில் ஆலத்தி அம்மாக்களால் ஆரத்தி எடுத்தபின் வழமையான பூசைகள் நடைபெற்று வயிரவர் பூசையுடன் இது இனிதே நிறைவேறும்.

இந்த ஊர்வலத்தில் தெய்வானை அம்மனால் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட முத்துலிங்க சுவாமிகளின் ஊர்வலமும் இடம்பெறும். முருகனை திரும்ப அழைத்துச்செல்ல வந்த முத்துலிங்க சுவாமிகள் இங்கேயே தங்கி இப்போது அது சிவன் ஆலயமாக உள் ளது. மேலும் முருகப்பெருமானின் அழைப்பில் வந்த கேசாபுரி சுவாமிகள் (வட இந்தியாவை சேர்ந்தவர்) தெய்வானை அம்மன் ஆலயத்தில் தங்கி அப்போது எல்லாக் கோவில்களும் அவர் பராமரிப்பிலிருந்தது. இவர் தமது இறுதிக் காலத்தில் பால் மாத்திரம் அருந்தியதால் "பால்குடிபாபா" என அழைக்கப்பெற்றார். இவரது சமாதி தெய்வானை அம்மன் குருபீடம் (கல்யாண மண்டபம்) ஆலயத்திற்கு எதிரே அமைந்துள்ளது. இவரது பரம்பரையினது சமாதிகளும் இங்கே காணப்படுகின்றது. 1972இலிருந்து சுவாமி தத்தகிரி அவர்கள் பிள்ளையார்

*தம்மிடமுள்ள குறைகளை நீக்கிக்கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிஷ்டமாகும்.*

ஆலயம் மற்றும் தெய்வானை அம்மன், வயிரவர் ஆகிய ஆலயங்களை பராமரிக்கிறார். இப்பொழுது தெய்வானை அம்மன் ஆலயத்தில் பெரிய அன்னதான மடம் அமைக்கப்பட்டுள்ளது.

யோகர் சுவாமிகள் பல தடவை கதிர்காம யாத்திரை செய்துள்ளார். ஒருமுறை இந்தியாவிலிருந்து வந்த பேராசிரியர் சம்பந்தனார் யோகர் சுவாமியை தரிசிக்க ஆசைகொண்டு அப்போதைய அரச அதிபர் ஸ்ரீகாந்தாவை கூட்டிக்கொண்டு செல்ல முற்பட்டபோது ஸ்ரீகாந்தா அவர்கள் யோகர் சுவாமிகள் இப்போது கதிர்காமத் திருவிழாவிற்கு போயிருப்பார். எதற்கும் ஆச்சிரமத்தை வழிபட்டு வருவோமென இருவரும் கொழும்புத்துறை சென்றனர். அங்கே யோகர் சுவாமிகள் இருப்பதைக் கண்ட ஸ்ரீகாந்தா அவர்கள் "சுவாமி நீங்கள் இந்தமுறை கதிர்காமம் செல்லவில்லையா" என வினாவினார். உடனே யோகர் சுவாமிகள் "அவன் முருகனுக்கு மயில் இருக்கிறது. எனக்கு என்ன வாகனம் இருக்கிறது" எனப் பதில் கூறினார். பேராசிரியர் சம்பந்தர் கொழும்பு சென்று சேர் கந்தையா வைத்தியநாதன் வீட்டில் இந்தியா செல்வதற்காக தங்கியிருந்தார். அன்றிரவு சேர் கந்தையா வைத்தியநாதன் தான் கதிர்காமத்தில் எடுத்த ஒளிப்படத்தை போட்டுக் காட்டினார். அதில் கதிர்காமத்தில் யோகர் சுவாமிகள் பக்தர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த காட்சியை. சம்பந்தனார் கண்ணுற்று "இது போன வருடத்து ஒளிப்படமா?" என சேர் கந்தையா வைத்தியநாதனிடம் வினவினார். இல்லை இது இந்த வருடம் எடுக்கப்பட்டது என சேர் கந்தையா வைத்தியநாதன் கூற, திகைப்படைந்து இந்தியா போகாமல் யோகர் சுவாமியின் கொட்டிலுக்கு சம்பந்தனார் சென்றார். சுவாமியை நோக்கி "சுவாமி உங்களுக்கு அட்டமா...." என வினவ வெளிக்கிட யோகர் சுவாமி "எட பெடியா வாயைப் பொத்து எனக்கூறி தான் இரு இடங்களிலும் ஒரே நேரத்தில் காட்சி தந்ததை கதைக்க விடவில்லை.

இதுபோல சித்தானைக்குட்டி சுவாமிகள் கல்முனைச் சந்தியில் தன் பக்தர்களுடன் நின்றபோது திடீரென தனது வேட்டியை எடுத்துக் கசக்கி "என்னடா கதிர்காமத் திரைச்சீலை எரிகிறது" எனக் கதறி ஓலமிட்டார். ஆனால் அந்த நேரம் சித்தானைக்குட்டி சுவாமிகள் அங்கு தோன்றி எரிந்துகொண்டிருந்த கதிர்காமத் திரைச்சீலையை கசக்கி நெருப்பை அணைத்தார்.

சந்நிதியானுக்கும் கதிர்காமக்கந்தனுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கதிர்காம திருவிழாவிற்கு முருகனை வழியனுப்புவதும் திருவிழா முடிந்ததும் முருகனை வரவேற்பதும் காலங் காலமாக நடைபெறுகிறது.

வெளிநாட்டிலிருந்து வந்த கௌரிபாலா என்ற ஜேர்மன் சுவாமிகள், சோல்பரிப் பிரபுவின் மகன் சந்தசுவாமி, பரி என்ற அவுஸ்திரேலிய நரிக்குட்டி சுவாமிகள் முதலில் கதிர்காமத்தில் தவமிருந்து பின்னர் யோகர் சுவாமியின் அடியவர்களாக செல்வச்சந்நிதியில் ஆச்சிரமம் அமைத்து தங்கினார்கள். மேலும் யோகர் சுவாமிகள் சந்நிதி மண்ணின்கீழ் சிவ லிங்கங்கள் உள்ளன என்று பல தடவை கூறியுள்ளார்கள். சந்நிதியானைத் தரிசிப்பவர் கதிர்காமக் கந்தனைத் தரிசித்த பலனைப் பெறுவார்கள் என்பது முற்றிலும் உண்மையான விஷயமாகும்.

# காவல் காத்த கணநாதர்

– திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

ஒருநாள் பார்வதி தேவி தன்னுடைய தோழியருடன் அந்தப்புரத்தில் நீராடிக் கொண்டிருந்தார். அதே சமயம் கணபதியைக் காவல் காக்கும்படி பணித்துச் சென்றார். அச்சமயம் அந்தப்புரத்தில் சிவபெருமான் செல்வதற்கு முயற்சித்தார். வாயிற் காவலில் நின்ற கணநாதர் தண்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு சிவபெருமானை உள்ளே செல்லவிடாது தடுத்தார்.

நான்தான் சிவமூர்த்தி என்று கூறியும் "சிவனானாலும் உள்ளே செல்ல அனுமதியேன்" எனக் கூறித் தடுத்தார்.



இதனால் சிவபெருமான் மிகவும் கோபங்கொண்டு தன்னுடைய பிரதான பூதகணங்களை அழைத்து, "இவன் யார் என்று விசாரியுங்கள்; என்னையே உள்ளே அனுமதிக்க மறுக்கிறான்" எனக் கூறினார்.

அவர்கள் "நீ யார்? உனக்கு இங்கு என்னவேலை? எதற்காக இங்கு வந்து நிற்கின்றாய்" என்று வினாவினார்கள்.

விநாயகரோ "நீங்கள் யார்? உங்களுக்கு இங்கு என்ன வேலை? என்று திருப்பிக் கேட்டார். அவர்களை அங்கிருந்து போய்விடுமாறு விரட்டினார். ஆனால் மீண்டும், மீண்டும் சிவகணங்கள் மிரட்டியும் கணநாதர் அவ்விடமிருந்து போகவில்லை. கணநாதர் தன்னைப் பார்வதியின் மைந்தர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். "அவரவர் வேலையை அவரவர் செய்யவேண்டும்" என்று சிவ கணங்களுக்கு அறிவுரை கூறினார்.

சிவகணங்களோ அவருடைய அறிவுரையை ஏற்கவில்லை. இதனால் சிவகணங்களுக்கும் கணநாதருக்கும் பெரும் கலவரம் மூண்டது. சிறிய உருவமானாலும் கணநாதரின் தாக்குதல்களைச் சிவகணங்களால் தாக்குப்பிடிக்க இயலாமல் ஓடினார்கள். போர் பரவாத இடமே இல்லை என்பதுபோல் போர் நடந்தது. நாரதர், தேவேந்திரன், பிரம்மா முதலியோர் அங்கு வந்து போரை நிறுத்த முயற்சி செய்தனர்.

போர் நடப்பதை அறிந்த பார்வதி தேவிக்கு சினம் மூண்டது. தன்னுடைய அருமை மகனான கணபதிக்கு உறுதுணையாக இரு சக்திகளைப் படைத்து போர்க்களத்திற்கு அனுப்பி வைத்தாள். தேவர்களும், சிவனாருடைய பிரம கணங்களும் தோற்றுப்போய் ஓடினார்கள். இதைக் கண்ட நாரதர் இவனுடன் நட்புப் பாராட்டுதலே நல்லது என்றும், இவன் பாலகன் தனியாக நின்று தாய் இட்ட கட்டளையை நிறைவேற்றுகின்றான் எனவும் கூறினார். நாரதர் பேச்சை ஏற்காத சிவனார் போருக்கு விரைந்தார். திருமால் கணநாதனை மோகப்படுத்தி மாயையால் கட்டுப்படுத்த முயன்றார். கணநாதரோ அதற்கெல்லாம் சிறிதும் மசியாமல் இரும்பு உலக்கையால் திருமாலைத் தாக்க முயன்றார்.

*வெறும் அதிஷ்டத்தை மட்டும் தேடி ஓடும்போதுதான் நாம் கால்கள் இடறி விழுந்து விடுகின்றோம்.*

சிவனார் சூலத்தால் தடுத்துத் தாக்க, சூலம் கை நழுவியது. கணபதியின் வல்லமையைச் சிவபெருமான் நன்றாகப் புரிந்துகொண்டார். "திருமாலே! அழகு, தோற்றம் இவ்விரண்டிலும் இச்சிறுவனுக்கு நிகரானவர் எவரும் இலர்" என்றார் சிவபெருமான்.

கணபதி அரியின் சக்கரத்தைத் தூளாக்கினார். திருமாலுக்கும் கணபதிக்கும் மல்யுத்தம் நிகழ்ந்தது. சிவபெருமான் கணபதியின் பின்பக்கம் சென்று பாசத்தால் கட்டி வீழ்த்தினார். கணபதி மூர்ச்சை அடைந்தார்.

பார்வதி இச்செய்தி அறிந்து ஆயிரம் சக்திகளைப் பிறப்பித்துப் பிரளயம் உண்டாக்குமாறு ஆணையிட்டாள். கடுமையான போர் நடந்தது.

அச்சமயம் ஒரு சக்தி சிவனாரின் இடுப்பில் ஓங்கி அடிக்க சக்தி இழந்த சிவனார் எதையும் கேட்கமுடியாத நிலையை அடைந்தார். நாரதர் மற்றும் முனிவர்கள் பார்வதி தேவியிடம் சென்று நடந்ததைக் கூறினார்கள். ஆனால் உமாதேவியாரோ சற்றும் கலங்காமல், கணபதி மூர்ச்சை தெளியும்வரை பிரளயம் நிற்காது எனக் கூறினாள்.

நாரதரும் மற்றும் முனிவர்களும் மிகவும் கவலையுடனும், தவிப்புடனும் நின்றார்கள். "ஏன் நிற்கின்றீர்கள்? கணபதி அனைவராலும் வணங்கப்படுபவனாய் முழுமுதற் கடவுளாக வைத்துத் துதிக்கப்படுபவனாய் எண்ணப்பட்டாலன்றி போரோ பிரளயமோ நிற்காது" என்று கூறிவிட்டாள் பார்வதிதேவி.

அவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள். மூர்ச்சை தெளிந்து எழுந்த சிவபெருமான் செய்தியை அறிந்தார்.

அனைவருக்கும் நலம் உண்டாக வேண்டுமானால் பார்வதியின் விருப்பப்படியே நடக்கவேண்டும் என்றார். சிவனார் கேட்கும் திறனைப்பெற்று மூர்ச்சை தெளிந்தார் என்று அறிந்ததும் அனைவரும் சிவபெருமானைச் சரணடைய சிவபெருமான் சஞ்சீவி மூலிகைகள் நிறைந்த துரோணாசலத்தை வரவழைக்க அக்காற்றின் வீச்சினால் அனைவரும் உயிர்பெற்று எழுந்தார்கள்.

மூர்ச்சித்து விழுந்து கிடந்த கணபதியை எம்பெருமான் தமது திருக்கரத்தால் தடவ அவரும் மூர்ச்சை தெளிந்து எழுந்தார்.

மும்மூர்த்திகளும் பார்வதியின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள தேவாதி தேவர்கள் கணபதிக்கு வேதமந்திர சம்பந்தத்தை உண்டாக்கி அவருக்குப் பட்டாபிஷேகமும் செய்தார்கள். கணபதியைப் பார்வதி தேவி முதன்மை மகனாக வாழ்த்தி ஆசீர்வதித்தாள். சிவபார்வதி ஒன்றாகினர். சிவபெருமான் கணபதியைத் தன் மூத்த மகனாக ஏற்றுக்கொண்டார்.

"வினைகளைத் தீர்க்கும் சகல கணங்களுக்கும் கணபதியே தலைவனாக இருப்பான். அனைவரும் அவனை வணங்கினால் விக்கினம் தீரும்" என்ற வரத்தைக் கொடுத்தார் சிவபெருமான்.

மேலும் பார்வதி அவரை எந்த நேரத்தில் துதித்தாலும் எல்லா நலன்களும் கிடைக்கும் என்று வாழ்த்தினார். புராணங்கள் இவ்வரலாற்றுச் செய்திகளைக் கூறியுள்ளன. நாமும் கணநாதன் அடிதொழுது வாழ்வில் நலம் பெறுவோமாக.

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமமும் ஆதலால்
கணபதி என்றிடக் கவலைகள் தீருமே.

நிரந்தரமற்றதன்மீது அன்பு செலுத்துவது உன் தோல்வியின் முதற்படியாக அமையும்.

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

மிகமிக அற்புதமான ஒரு கவிதையை வாசிக்கின்றான் அம் மாணவன். அதன் பொருள்: தாங்கள் இங்கே ஏதாவது கற்றுவிட வேண்டும் என்று வந்தார்களாம். தங்கள் அவாவுக்கு ஏற்றாற்போல பெற்ற தாயைப்போல அரவணைத்துத் தங்களுக்கு அறிவூட்டிக் கொண்டிருக்கும் தமது ஆசிரியைகளைத் தாங்கள் பாராட்டியே ஆகவேண்டுமாம். அதனை அவர்கள் அன்போடு ஏற்று தொடர்ந்தும் தமக்கு அன்பான அறிவூட்டலை நல்கவேண்டும் என்ற ஓர் கோரிக்கை விடுக்கும் பாங்கில் அவனது கவிதை அமைந்திருந்தது. இத்தனைக்கும் அம்மாணவர்கள் 7ம், 8ம் வகுப்பில் கற்பவர்களாக இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்விழாவில் இப்படியாகத் தங்களைக் கௌரவிக்கப் போகின்றார்கள் என்று ஆசிரியர்கள்கூட அறிந்திருக்கவில்லை. எமக்கும் ஒன்றும் புரியவில்லை. அவர்களின் பாங்கையும் கவிதையினையும் அங்கு வழங்கிய அவ்வாசிரியர்களுக்கான பரிசில்களையும் பார்த்தபொழுது ஒரே வியப்பாக இருந்தது. மேலும் வியப்பூட்டும் வண்ணம் இப்பரிசில்களை ஆச்சிரம சுவாமிகளே வழங்கித் தமது ஆசிரியர்களைக் கௌரவிக்கவேண்டும் என்ற ஓர் அன்புக் கட்டளையையும் வேறு விடுத்தனர். சுவாமிகள் சற்றுத் தயங்கியவேளை எம். போன்றவர்கள் இல்லையில்லை நீங்களே இதற்குத் தகுதியானவர் என்றுதான் சந்நிதியான் உங்களை இங்கே இச்சந்தர்ப்பத்தில் அழைத்துள்ளான்" என்று கூறியதன் பிரகாரம் அங்கே மூன்று கேடயங்கள் மேடையில், அதனைப் பெறுவதற்கான மூன்று ஆசிரியைகள். என்னே ஆச்சரியம்! மூன்று இளம் காரிகைகள் காட்சி தந்தனர். கவிதையின் பிழிவு தமக்கு கற்பித்த ஆசிரியர்கள் ஏதோ வயது போன அம்மாக்கள் ஆக இருப்பார்கள் என்ற வகையில் அமைந்திருக்க, இவர்கள் இப்படித் தோன்றியது பொருள் விளங்கிய எம் போன்றவர்களை வியப்பில் ஆழ்த்திய கணங்கள் அவை.

இவர்களுக்கான பரிசில்களை சுவாமிகளே வழங்க ஓர் ஆவணப் பொக்கிஷம் சந்நிதியான் ஆச்சிரம வெளியீடு 20.03.2016 மலையக மீரியப்பெத்தை மண்சரிவும் தாக்கமும்- அதன் எதிரொலியும் என்ற அற்புத மலரில் பேசும் சித்திரமாகப் பதியப்பட்டுள்ளது. (பக்.17) ஞானச்சுடர் வாசகர்களுக்காக இதனையும் அறியத்தருகிறோம். இம்மாணவர்களின் முழுக்க முழுக்க சொந்த முயற்சியே இப்பாராட்டு என நினைத்த எம்மில் பலரது உள்ளங்களில் நாமும் ஏதாவது பாராட்டுச் செய்யவேண்டும் என்று உந்த உடனே அதனைச் செயல் வடிவாக்கி ஒவ்வொருவரும் சிறு சிறு பணப் பங்களிப்பை நல்க அவற்றைச் சேகரித்து அம்மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்கும் வண்ணம் அவர்களது ஆசிரியர்களூடாக அம்மேடையில் அவர்களுக்கு வழங்கினோம். அத்துடன் அவர்களது மனப்பாங்கினையும் ஆற்றலையும் போற்றி அடியேனும் திரு கலியுகவரதன் சுவாமிகளும் இரு சிற்றுரைகளையும் வழங்கி மகிழ்ந்தோம். அத்துடன் அவர்களால் கலைநிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன. கலை நிகழ்ச்சிகளும் விரலுக்கேற்ற வீக்கமாக இருந்தன. பின் அவர்களது சிற்றுண்டி

*வாழ்வில் அறநெறியைத் தேடுபவன் தன் வாழ்வில் அன்புநெறியை உணர்ந்திருத்தல் வேண்டும்.*

உபசரிப்புகளுடன் விடைபெற்றோம். தொடர்ந்து குரோக்டன் அறநெறிப்பாடசாலை நோக்கி எமது பயண' தொடர்ந்தது. அங்குள்ள பாதைகளும் இதே தரம்தான். அங்கு சென்ற பொழுது அவ்வாசிரியர்களும் மாணவர்களும் அன்பான வரவேற்பைத் தந்தனர். காலம் விரைவாக ஓடிக்கொண்டிருப்பதால் அவர்களுடனான சிறு கலந்துரையாடலுடன் அவர்களுக்கு வேண்டிய கற்றல் பங்களிப்புகளை வழங்கியபின் கிரேக்க தமிழ் வித்தியாலயத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

அங்கு நாம் கண்ட காட்சிகள் எம்மைப் பிரமிக்க வைத்தன. மிகப் பரந்த வளாகத்தைக் கொண்டிருந்ததுடன் வளமான கட்டிடத் தொகுதிகள் கணணி வசதிகள், அற்புத அழகுமிகு நவீன வசதிகளுடன் கூடிய புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழில் நுட்பக்கூடம். அதிபர் அலுவலக காட்சிப்படுத்தல் உட்பட அனைத்தும் கச்சிதமாகவும் கருத்தைக் கவரும் வண்ணமும் அமைந்திருந்தன. இதற்கு இன்னுமொரு காரணம். மலைநாட்டிற்கேயுரிய ஏற்ற இறக்க அமைவு. இதனாற்றான் ஓர் உயரமான இடத்தில் நிற்கும்பொழுது பாடசாலை முழுவதையும் பார்த்து ரசிக்கும் முழுத்தோற்றப் புலப்பாட்டை எமக்குத் தந்ததையும் குறிப்பிடலாம். இத்தொழில்நுட்பக்கூடம் இப்பாடசாலையின், இப்பகுதி மாணவர்களுக்கு ஓர் அரிய வரப்பிரசாதமாக அமைகின்றது. இதனைப் பார்த்தவுடன் எமது நாட்டில் இலவசக் கல்விக்காக, எத்துணை வளங்களை இப்பாரிய தொழிநுட்பக்கூட உதவி, ஆய்வுகூடப் பொருட்கள், கணணிகள், இலவச உணவு, சீருடை என்பவற்றை வழங்க எமது அரசு பல்வேறு நாடுகளின் உதவிகளைப் பெற்று ஏற்படுத்திக்கொண்டிருக்கும் அதேவேளை இதன் முழுப் பயனையும் பெறாது எம்மாணவர்களும், பெற்றோர்களும் தனியார் கல்வி நிலையங்களை நாடி ஓடி (ரியூசன் சென்ரர்) பணத்தையும் நேரத்தையும் பாழாக்கும் ஓர் பரிதாப நிலையையும் பார்க்க முடிகிறது. அது மட்டுமல்ல வேதனை என்னவென்றால் இத்தகு ரியூசன் சென்ரர்களில் மாணவர்கள் நிரம்பி வழிவதுடன் பாடசாலைகளின் தொகைகளை விஞ்சும் வண்ணம் இத்தகு கல்வி நிலையங்கள் வளர்ந்து வருவது ஆரோக்கிய நிலையா? அழிவு நிலையா? என்பதை ஞானச்சுடர் வாசகர்களுடனேயே விட்டுவிடுகிறேன். பெரியோர்களே, வாசகர்களே கல்வி உலகுடன் தொடர்புடையவன் என்ற வகையில் யாழ் தொடக்கம் இப்பயணத்தின் மூலமாக மலை நாடு எங்கணும் கல்விநிலையின் தற்போதைய சிறு பரிணாம வளர்ச்சியினையும் பார்த்துப் பகிரவைத்த எங்கள் சந்நிதியானின் பேரருளையும் ஒருகணம் சிந்தித்து மகிழ்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஆலயங்களுக்கும் வித்தியாலயங்களுக்கும் இப்போ எம்மவர்கள் அள்ளிக்கொடுப்பதால் ஆலயங்கள் கொட்டிலிலிருந்து கோபுரங்கள் சூழும் வண்ணமும், வித்தியாலயங்கள் அழகு வளைவு முகப்புக்களுடன் பள்ளிக்கொரு சரஸ்வதி சிலையுமாக காட்சிதர முனைகின்றன. ஆனால் கல்வித்தரமோ படுவீழ்ச்சி, ஆலயங்களிலோ கும்பிட, சுவாமிகாவ ஆளில்லா நிலையில் ஆண்டவனைக்கூட சகடைகளில் (ஸ்ரெச்சரில்) நோயாளர் காவு வண்டிகளைப்போல தள்ளுகின்ற ஓர் அவலநிலை எம்மவர் மத்தியில் வளர்வது நிச்சயமாக இப்பயணக் கட்டுரை மூலமாக பதிந்து விழிப்பூட்ட விழைகிறேன். எம்மைக் கவர்ந்த இத்தொழில்நுட்பக் கூடத்தை சற்று விரிவாகப் பார்ப்பதற்காக நாமனைவரும் அதனைநோக்கிச் செல்கிறோம்...

(காட்சி தொடரும்...

தொடங்கிய இடத்தைத் தெரிந்துகொள். அப்போதுதான் முடிக்கும் இடத்தை அறிந்து கொள்ளலாம்.

# வேண்டுதற் கூற்று

- திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் -



அன்றாலின் கீழமர்ந்து அறமுரைத்தோன் மைந்தா
இன்றண்ணன் துணையோடு ஆற்றங்கரையமர்ந்த அழகா
பொன்று முடலை "நான்" எனமதியாது உன்னடியின்கீழ்
என்றென்றும் பிரியாதிருக்க வேண்டுகின்றேன் முருகா.

வஞ்சனை சூது பொறாமையிலா மனம் வேண்டும் முருகா
அஞ்செழுத்தை யென்றும் மறவா நலம் வேண்டும் குமரா
வெஞ்சினம் வெல்லாது நெஞ்சில் நிலைத்திருக்க வேண்டுகின்றேன்
தஞ்சமென்றுனை யடைந்தேன் தளரா தவவலிமை தந்திடுவாய்

இமயம்போல் உயர்ந்து நிற்கும் குணம்வேண்டும் முருகா
சமயத்தில் உதவுகின்ற மனம் வேண்டும் குமரா
எமபயம் நீக்கியெமையாளும் குருநாதா
உமையாள் மைந்தனே உமக்கபயம்

நான் நீ யென இரண்டற்ற நிலை வேண்டும் முருகா
உன் நாமம் என்னுள்ளே ஒலிக்க வேண்டும் குமரா
கன் மனதும் கரைந்துன் கருணை மயமாக வேண்டும் முருகா
நான் கரைந்து நீயாகும் மோனநிலை வேண்டும் குமரா

வேண்டுவார் வேண்டுவதருளும் வேலவனே
தொண்டைமானாற்றுக் கரையிருந் தருளும் குமரா - என்
வேண்டுதற் கூற்றை ஏற்றருள்வாய்
தொண்டர்க்கும் தொண்டனான ஆண்டவனே
அத்வைத நிலையாம் ஆழ்ந்தநிலை யருள்வாய்
அறுமுகனே குருபரனே குழந்தை வடிவேலா.


# வேழ முகத்து விநாயகன்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்துவரும் என்பது அனுபவ உண்மை. சிவனுக்கும் உமைக்கும் மூத்தபிள்ளை விநாயகர். வல்லவர், நல்லவர், பொலிவான வர், நிறைவானவர், பூரணமானவர். எக்கருமத்தைத் தொடங்கும்போதும் விக்னேஸ்வரனை முதலில் தொழுது கருமத்தை ஆரம்பிப்பது தொன்றுதொட்டு எம்மிடையே இருந்து வரும் மரபாகும். நாம் ஒன்றை எழுத ஆரம்பிக்கும் முன் பிள்ளையார் சுழி இடுவதும் இதனாலேதான். ஆனால் இன்றைய இளைய தலைமுறையினர் பலரிடம் இவ்வழக்கம் காணப்படுவதாக இல்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயம். பெற்றோர் முதலில் இதனை தம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஆரம்பம் இடையூறின்றி இருந்தால் தானே முடிவில் வெற்றிகிட்டும். இல்லையா? கர்நாடக இசைக் கச்சேரியைக் கேட்டுப் பாருங்கள்! பாடுபவர் ஹம்சத்வனி ராகத்தில் அமைந்த "வாதாபி கணபதிம் பஜேகம்" என்ற கீர்த்தனையை ஆரம்பித்து, சங்கட மில்லாமல் கச்சேரியைத் தொடருவார். இங்கும் கணபதி காப்புத்தான். விநாயகப் பெருமானைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான சம்பவம் சொல்கிறேன் கேளுங்கள்.

எழுத்தை ஆள்பவன் எழுத்தாளன் என்று சொல்வார்கள். உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவர்தான் வியாசர். அவருக்கும் ஒரு பிரச்சினை எழுந்தது. என்ன பிரச்சினை என்று நினைக்கிறீர்கள் அவருக்கு!

அவர் சொல்லும் வேகத்தில் எழுதி முடிக்க ஆள் கிடைக்காத பிரச்சினைதான் அவருக்கு. இலக்கியத்தைச் செம்மையாக வடித்தெடுத்த அவருக்கு அவற்றை எழுதுவிப்பது ஒரு பிரச்சினையாகி விட்டது. தன் நண்பர் நாரதரிடம் ஆலோசனை கேட்டார் வியாசர்.



பிள்ளையாரைப் பிடித்தால் பிரச்சினை தீரும் என்று பதில் தந்தார் நாரத முனிவர். மகிழ்ந்தார் மகரிஷி வியாசர். பிள்ளையாரும் பிரசன்னம் தந்தார். நான் சொல்லும் வேகத்தில் எழுதுங்கள் சுவாமி! வியாசர் கூறினார்.

"நான் எழுதும் வேகத்தில் உங்களால் சொல்ல முடியுமா?" திருப்பிக் கேட்டார் விநாயகப் பெருமான்.

பிரச்சினையின் விளிம்பில் புதிய பிரச்சினை தோன்றிவிட்டது. இதுதானே வாழ்க்கை. நீங்கள் எழுதும் வேகத்தில் சொல்ல வேண்டுமா? சொல்கின்றேன்.

*உன் சோம்பேறித்தனம் உன் வாழ்வின் தடைக்கல்லாய் அமையலாம். எச்சரிக்கையாயிரு.*

அது எப்படிமுடியும்? உங்கள் அருள் இருந்தால் முடியும். வியாசர் பதில் அளித் தார்.

விநாயகப் பெருமான் சிரித்தே விட்டார். சின்னக் கண்கள் குவிய பெரு வயிறு குலுங்க கணபதி சிரித்தார். எத்தனை அழகான சிரிப்பு. சற்று கற்பனை செய்து பாருங்கள்.

வியாசர் சொல்லிக் கொண்டேயிருந் தார். கணபதி எழுதிக் கொண்டேயிருந்தார். இங்கே விஷேசம் என்ன என்றால், மனிதன் இட்ட பணியைக் கடவுள் செய்கிறார். மக்கள் பணியே மகேசன் பணி என்பது இதுதானோ! கடவுள் தொண்டர்க்கு அடிமை, இப்படியும் சொல்லலாம். தனக்கென்று ஒரு தலைவன் இல்லாத விநாயகப் பெருமான் தொண்டர்க் குப் பணி செய்யும் அழகுதான் அழகு. கட வுள் கருணையும் மனித முயற்சியும் இணைந் தால் எதுதான் சாத்தியமில்லை! எதிலுமே வெற்றிதான். திடீரென கணபதியின் எழுது கோல் முறியவே கணபதி தன் அழகான தந்தங்களில் ஒன்றை திடீரென முறித்து அதைக் கொண்டு எழுதலானார்.


இதுகண்டு பதறினார் வியாசர். சுவாமி! அழகான தந்தம் அதை முறித்து மூளி யாக்கி விட்டீர்களே!

கணபதி புன்னகையோடு பதில் தந் தார். அழகு என்பது பார்த்து ரசிப்பதற்கு மட் டுமா? பிறருக்குப் பயன்பட வேண்டாமா? அழகாக இருக்க ஆசைப்படுபவர்கள் கருத் துக்கும் அழகாய் இருக்க வேண்டாமா? அழகை இழந்தாகிலும் அடுத்தவர்க்குப் பயன் பட வேண்டாமா? இது விநாயக தத்துவம்.

இச்சம்பவத்தை அருணகிரிநாதர் மன தில் கொண்டார். என்ன அநியாயம்! வியாசர் சொல்லியா பாரதத்தை கணபதி எழுத வேண்டும்? அவருக்கு இது முன்கூட்டியே தெரியாதா? வார்த்தைகள் உதிர்ந்தன.

"முத்தமிழ் அடைவின் முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே" என்றார்.

எனவே கஷ்டங்கள் வந்தால் கவலை வேண்டாம். வேண்டுங்கள் கணபதியை, கைகொடுக்க ஓடி வருவார். மனிதன் கடவுளுக்காகவா? அல்லது கடவுள்தான் மனிதனுக் காகவா? சற்று சிந்தியுங்களேன்.




ஒரு தவறை திரும்பத் திரும்பச் செய்வது மடமையாகும்.

# வழித்துணை

1

– திரு செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 வாழ்க்கையின் பயணத்தைப் பாரிலே தொடங்கிட
அன்னையின் வயிற்றிலே திங்கள் பத்துக் காத்திருந்து
ஜனிப்போம் ஜனனமது தனிமுயற்சி அன்று
அன்னையின் துடிப்பே அதன் வழித்துணை என்றறிவீர்

02 பாரிலே பிறந்தநாம் படித்துயர்ந்து வருதற்காய்
சீரிய பள்ளியில் சிலஆண்டு காத்திருந்து
நேரிய அறிவினைப் பெறுவதும் தனித்தன்று
கூரியதோர் குருவே அதன் வழித்துணை என்றறிவீர்

03 கல்வியைக் கலைகளை இளமையில் பெற்றுநாம்
வளமான இளமைப் பருவத்தில் பயணிக்க
துணையாக நிற்பது இளந்துடிப்பு தனித்தன்று
மூத்தோரின் அறிவுரையே அதன் வழித்துணை என்றறிவீர்

04 ஊதியம் பெறுதற்காய் தொழிலொன்று தேடியே
உரியபடி நடந்ததில் உயர்வுகள் அடைந்திட
போதிய துணைதரும் தகமைகள் தனித்தன்று
பணியதில் பணிவே அதன் வழித்துணை என்றறிவீர்

05 இல்லறம் ஆற்றற்காய் இணைதுணை தேடியே
நல்லறம் ஆற்றியதில் நயம்பல பெற்றிட
வல்லமை சேர்ப்பது வாய்த்தவளம் தனித்தன்று
கருத்தொருமித்தலே அதன் வழித்துணை என்றறிவீர்

06 குடும்பம் என்றதோர் கூடும்நாம் கட்டியே
கடும்பக்தி கொண்டதைக் கட்டியே காத்திட
நெடுந்துணை தருவது படும்பாடு தனித்தன்று
நம்பிக்கை ஒன்றே அதன் வழித்துணை என்றறிவீர்

07 புழலோடு தோன்றிநாம் புகழோடு வாழ்ந்துமே
மிகஉயர் நிலையினை மேதினியில் அடைந்திட
உகந்தாய் இருப்பது உயர்வுகள் தனித்தன்று
தாழ்ந்துநாம் நடத்தலே அதன் வழித்துணை என்றறிவீர்

08 மானிடப் பிறப்பின் மகிமையில் பிறந்துபின்
நானிலம் போற்றும் நடத்தையில் வளந்துபின்
யோகத்து நிலைதரும் நம்ஊனுடல் தனித்தன்று
ஞானத்தின் ஈர்ப்பதே அதன் வழித்துணை என்றறிவீர்

09 எத்தனை பிறப்புக்கள் எத்தனை வதைப்புக்கள்
அத்தனையையும் உணர்ந்தினிப் பிறவாது இருந்திட
உத்தம வழிதரும் மானிடம் தனித்தன்று
ஆத்மீகபலமே அதன் வழித்துணை என்றறிவீர்

10 இறைவனார் தந்ததோர் இணையில்லா ஆத்மீகம்
மீண்டுமிறை உறையினுள் புகுந்திறை யாகிடும்
சிறப்பினைத் தருவது பிறப்புக்கள் தனித்தன்று
இறையினை உணர்வதே அதன் வழித்துணை என்றறிவீர்

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய உற்சவகால நிகழ்வு - 2017

| | | |
|---|---|---|
| 22.08.2017 | செவ்வாய் | அதிகாலை 5 மணி கொடியேற்றம் |
| 25.08.2017 | வெள்ளி | காலைத்திருவிழா ஆரம்பம் |
| 05.09.2017 | செவ்வாய் | தேர் |
| 06.09.2017 | புதன் | தீர்த்தம் |

**வழமைபோல ஆச்சிரம மண்டபத்தில் விசேட சொற்பொழிவுகள் இடம்பெறும்.**



# வட இந்திய யாத்திரை - 05


(தொடர்ச்சி...

– மோகனதாஸ் சுவாமிகள் –

## 14.11.2016 திங்கட்கிழமை:

அதிகாலை 3 மணி அளவில் எமது பயண ஏற்பாட்டுக்கு அமைவாக செயற்பட்டோம். காலைக் கடன்களை முடித்து எமது வாகனத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை நோக்கிய பிரயாணம் ஆரம்பமாயிற்று. அதற்கு முன்பாக நாம் இவ்வகை பயண நிமித்தம் கொழும்பு செல்லும் காலங்களில் கொட்டாஞ்சேனையில் உள்ள பிள்ளையார் ஆலயத்திலும் அதற்குச் சமீபமாக அமைந்துள்ள அம்மன் ஆலயத்திலும் வழிபாடு இயற்றுவதை ஒரு வழமையாக வைத்திருந்தோம். அதன் பிரகாரம் அதிகாலையில் ஆலயம் பூட்டிய நிலையில் இருந்த காரணத்தினால் ஆலய முன்றலில் வாகனத்தைவிட்டு இறங்கி எம்மால் மேற்கொள்ளப் படும் தல யாத்திரை எவ்வித இடையூறும் இல்லா வகையில் நடைபெற வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்து எமது வழிபாட்டை நிறைவு செய்த மன நிறைவுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தை அதிகாலை 5 மணியளவில் அடைந்தோம். விமான நிலையத்தில் எமது முகவர் திரு ஸ்ரீரெங்கநாதனின் புத்திரன் ராஜனின் நெறிப்படுத்தலில் மேலும் 14பேர் எம்முடன் இணைந்து தல யாத்திரையில் ஈடுபடும் வண்ணம் வந்திருந்தார்கள்.

காலை 8.30 மணியளவில் எமது விமானம் புறப்படுகின்ற காரணத்தால் விமான நிலையத்தில் கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகளுக்கு அமைவாக நாம் விமான நிலையத்துள்



உட்பிரவேசித்தோம். நாம் உள் நுழைந்ததும் எம்மை வழியனுப்ப வந்திருந்த திரு அருணாசலமும், திரு ஆறுமுகஸ்வாமி அவர்களும் பார்த்த சாரதியாக வந்திருந்த பிரபாவும் ஆச்சிரமம் திரும்பினார்கள்.

இம்முறை யாத்திரை முகவராகச் செயற்பட்ட ராஜன், நித்திய தசீதரன், கஜன் ஆகிய மூவரைத் தவிர மற்ற அனைவரும் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள். அத்தோடு தம்பதிகளாகவும் வந்திருந்தனர். அவர்களைப் பார்த்ததும் எனக்குள் ஓர் பயம் ஏற்பட்டது. எப்படி இவர்களோடு இணைந்து எமது யாத்திரையின் பெறுபேறு அமையப்போகின்றது எனும் சிந்தனை மேம்பட்ட பொழுதிலும், எப்படியும் தலயாத்திரையில் ஈடுபடவேண்டும் என்ற அவர்களது திட சிந்தனை எம்மைப் பிரமிக்க வைத்தது. அதிலும் ஒரு அன்பர் தனது வயது முதிர்ந்த தாயின் விருப்பத்திற்கமைய தள்ளுவண்டியில் வைத்து பராபரித்து அவரது தேவைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றுவதையும் பார்த்தபொழுது இவ்வகை தலயாத்திரைகளின் மகிமை எமக்கு நன்கு விளங்கினாலும் இணைந்து வந்த நித்திய தசீதரனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஒரு வழியாக எமது பயண விதிமுறைகளை முடித்து காலை 8.30 மணியளவில் கட்டுநாயக்காவில் ஆரம்பமாகிய எமது பிரயாணம் பகல் 11.30 மணியளவில் புதுடில்லியில் நிறைவு பெற்றது. அங்கும் விமான நிலையத்தில் இடம்பெறும் செயற்பாட்டை முடித்து எமக்கென ஒதுக்கப்பட்ட விடுதியை அடைந்து எமது உடற்சோர்வை நீக்கும் முயற்சியில் ஈடுபட்டோம். மதிய உணவினை முடித்தபின் மாலை 3 மணியளவில் மெட்ரோ புகையிரதம் மூலம் புதுடில்லி நகரைச் சுற்றிப் பார்த்தோம். உண்மையில் அப்புகையிரதச் சேவையானது எம்மைப் பிரமிக்க வைத்தது. மக்களின் போக்குவரத்தினை இலகுவாக்கும் முகமாக ஆரம்பித்துள்ள இச்சேவையின்மூலம் மக்கள் தங்கள் காரியங்களை நிறைவேற்றுவதையும் காணக்கூடியதாக இருந்தது. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தலயாத்திரைகளின்போது புகையிரதம்மூலம்தான் கூடுதலாக பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. ஆனால் இம்முறை முகவர் ஏற்பாடு செய்திருந்த விமானப் பயணம் மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியைத் தந்திருந்தது. அதன் பயனாக மெட்ரோ புகையிரதம்மூலம் நாம் கண்ட காட்சிகளும் அதன்போது ஏற்பட்ட மனக்கிளர்ச்சிகளையும் எழுத்தில் வடிக்க இயலாது.



இரவு ஏழு மணியளவில் புதுடில்லி நகரைச் சுற்றிப்பார்த்து விட்டு எமது விடுதியை அடைந்தோம். எம்மோடு கூடவே வந்திருந்தவர்களால் தயாரிக்கப்பட்ட இரவு உணவினை முடித்துக்கொண்டு ஒவ்வொருவரும் தத்தமக்கு என ஒழுங்குபடுத்தப்பட்ட அறைகளை அடைந்தனர். எமது முகவராகச் செயற்பட்ட ராஜனும், நானும், நித்திய தசீதரனும் மறுநாள் தொடரப்போகும் யாத்திரைபற்றி கலந்துரையாடிக்கொண்டு இருந்தவேளையில் ராஜன் நிதி சம்பந்தமாகக் கூறிய செய்தி பெரும் திகைப்பை ஏற்படுத்தியது.

(தொடரும்...

*அநியாயத்திற்கு ஆயிரம் வக்கீல்கள் தேவை. ஆனால், நியாயத்திற்கு கடவுளின் கருணை போதும்.*

# படங்கள் தரும் பதிவுகள்




## மலேசியாவில் ஸ்ரீ மரத்தாண்டவர் கோயில்

இந்தக் கோயில் 1891ல் தோன்றியது. பகாங் மாகாணத்தில் (State of Pahang), மாரான் (Maran) போகும் வழியில் இருக்கிறது. கோலாலம்பூரிலிருந்து ஏறக்குறைய 220கி.மீ தொலைவில் இருக்கிறது. மிகச் சிறிய கோயிலாக இருந்தது. அரசாங்க உதவியால், 5கோடி வெள்ளி செலவில் பிரமாண்டமாகக் கட்டப்பட்டிருக் கிறது.

இந்தக் கோயில் காட்டுப் பகுதியில் இருப்பதால் போக்குவரத்து சாதனம் குறைவு. அங்கு செல்பவர்கள் Chartered bus அல்லது private carல்தான் செல்லலாம். பங்குனி உத்தரத் திருநாளையொட்டி, சில பக்தர்கள் கோலாலம்பூரிலிருந்து கால் நடையாகவும் செல்கிறார்கள். தங்குவதற்கு Hotel/ Lodge அறைகள், குளிப்பதற்கான வசதிகள் யாவும் உண்டு.

வெளியூர்களிலிருந்து வருபவர்கள், அனேகர் மத்தியான பூஜை வேளையான 12 மணிக்கு வந்து வந்துவிடுவார்கள். அபிஷேகம் காலை 10.30 மணிக்கு. இலவச உணவு வசதிகள் இருக்கின்றன. சனி, ஞாயிறு, லீவு நாட்களில் கோவிலில் நெருக்கடி இருக்கும். பங்குனி உத்தரத் திருவிழாவுக்கு போக்குவரத்து சாதனம் 5மைல் தூரத்தில் நிறுத்தப்படும்.

இரக்கப்படுபவன் ஏமாந்து போகலாம் ஆனால் தாழ்ந்து போவதில்லை.



ஞானச்சுடர் ஆனிமாத வெளியீட்டின்போது...



தீயவனை நண்பனாக்கிக்கொள்வதைவிட தனிமையை நண்பனாக்கிக்கொள்வது மேல்.



ஆனிமாத சிறப்புப்பிரதி பெற்றோர்.



அன்றாட வாழ்வில் வரும் அனுபவங்களே தலைசிறந்த கல்வி.

ஞானச்சுடர் 2017 ஆடி மலர்

# ஆவணி மாத வாராந்த நிகழ்வுகள்

04.08.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "எது வழிபாடு"

வழங்குபவர் :- திரு நா. நவராஜ் அவர்கள்

(சைவப் புலவர்)

---

11.08.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "இன்னிசைக் கச்சேரி"

வழங்குபவர்கள் :- த. தினுஜன் } குழுவினர்
க. அபிஷேக்

(யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள்)

---

18.08.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

25.08.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் ஆவணி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு க. ஸ்ரீச்சந்திரன் அவர்கள்

(ஆசிரியர், அ.மி. கல்லூரி)

மதிப்பீட்டுரை :- திரு க. நடேசன் (தெணியான் அவர்கள்

(இளை. அதிபர்)

236ஆவது மலர்

பதிவு இல. *QD/82/NEWS/2017*

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

